# இலக்கணத்தில்

# புதிய சிந்தனைகள்

சு. நடராஜன்

விலை ரூ. 1—00

# இலக்கணத்தில் புதிய சிந்தனைகள்.

சு. நடராஜன்

89, புதுக்கிராமம்,
தூத்துக்குடி—628003.

விலை ரூ. 1—00

தேவி பிரஸ், தூத்துக்குடி-628001.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| முகவுரை | | 1—3 |
| சொல் | | 4—10 |
| பெயர்ச்சொல் | | 11—45 |
| திணை | 15 | |
| இடம் | 16 | |
| எண் | 16 | |
| பால் | 17 | |
| வேற்றுமை | 22 | |
| ஆக்கப் பெயர் | 37 | |
| ஆக்கச் சொற்கள் | 40 | |
| பலவகைப் பெயர்கள் | 41 | |
| வினைச் சொல் | | 46—70 |
| பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி | 46 | |
| தன்வினை, பிறவினை | 58 | |
| ஒட்டுரை | | 71—73 |
| பிழை திருத்தம் | | 74 |

# இலக்கணத்தில் புதிய சிந்தனைகள்.

## இலக்கணம்:

இலக்கிய ஆசிரியர்கள் தங்கள் இலக்கியங்களில் மரபுக்குக் கட்டுப்பட்டு அமைத்துக்கொண்ட முறைகளையும், கட்டுப்பாடுகளையும், விதிகளையும் பிரித்து எடுத்துத் தொகுத்ததையே இலக்கணம் என்று கூறுகிறோம். "இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பல்" என்பது பவணந்தி முனிவர் வாக்கு. இலக்கியம் சமுத்திரம் போன்று மிகப் பெரியது. பல ஆசிரியர்களால், பல்வேறு காலத்தில், பல்வேறு இடங்களிலும் சூழ்நிலைகளிலும் தோன்றியது. பல ஆயிரக் கணக்கான நூற்களை அடிப்படையாகக் கொண்டது. அவற்றில் அமைந்துள்ள எல்லா நுட்பங்களை யும் முறைகளையும் பிரித்தெடுத்துத் தொகுத்து வகைப் படுத்துவது மிகவும் சிரமமான காரியம், முடியாத காரியம் என்றே கூறலாம். தமிழ்த் தாயின் அருந்தவத்தால் இந்த முடியாத காரியத்தையும் செய்து முடிப்பதற்குத் தோன்றி யவர் தொல்காப்பியர். இவர் எழுதிய நூல் 'தொல் காப்பியம்' என்று ஆசிரியருடைய பெயரையே பெற்று வழங்குகிறது.

இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் வகுத்தல் என்பது தான் முறை என்றாலும் ஒரு சிறந்த இலக்கண நூல் தோன்றிய பின்னர், அதுவே பின்வரும் இலக்கிய ஆசிரியர் களுக்கு ஒருவிதி நூலாகவும் வழிகாட்டியாகவும் அமைந்து விடுகிறது. இளம் ஆசிரியர்களுக்கு வழிகாட்டியாக நிற்பதால் அதுவே மொழிக்குக் காவலாகவும் ஆகிவிடுகிறது. இத் தகைய காப்பு அமையாவிட்டால் மொழி விரைவிலேயே மாறிவிடக்கூடும். இதைத்தான் 'California' பல்கலைக் கழகப் பேராசிரியர் M. B. Emeneau என்பார் 'A normative grammer of the kind that was authoritative in India might have worked to prevent the variations that we see in the

Morphology, Syntax and Lexicon of Latin and Greek as they were written" என்று கூறுகிறார். தமிழுக்கு அந்த மொழிகளின் நிலை ஏற்படாமல் அரண் அமைத்த பெரு மகனாரைப் பணிந்து போற்றி வணங்குகிறேன்.

## புதிய சிந்தனைகள்:

பூரணமாக இலக்கணம் வகுத்துவிடுவது முடியாத காரியம் என்று கூறிவிட்டு, அதில் வெற்றிகண்டவர் தொல் காப்பியர் என்று கூறினால் வெற்றி பெறும் அளவுக்குப் பெற்றார் என்றுதான் கூறவேண்டும். ஆகவேதான் தொல் காப்பியர் காலத்துக்குப் பின்னும் பல இலக்கண நூல்கள் தோன்றியுள்ளன. இவையெல்லாம் தொல்காப்பியத்துக்கு வழி நூல்களாகவே அமைந்தன. 'முன்னோன் நூலின் முடிபு ஒருங்கொத்து, பின்னோன் வேண்டும் விகற்பம் கூறி' என்பது வழி நூலுக்குப் பவணந்தி முனிவர் கூறும் இலக் கணம். பின்னால் தோன்றிய நூற்களில் மிகச் சிறந்தது பவணந்தி முனிவரின் 'நன்னூல்'. இன்று தமிழ் இலக் கணம் என்றாலே தொல்காப்பியமும், நன்னூலும் என்றே பலரும் எண்ணக்கூடிய அளவில் இவை ஏனைய நூல்களை விடச் சிறந்து விளங்குகின்றன. நன்னூல் தொல்காப்பியத் துக்கு வழிநூலாக இயற்றப்பட்டிருந்தாலும் பல இடங்களில் பல மாறுபாடுகள் உள்ளன. தொல்காப்பியர் 'எழுத்திலக் கணம்' முதல் சூத்திரத்தில் சார்பு எழுத்துக்கள் மூன்று என்று கூறுகிறார். பவணந்தி முனிவர் சார்பு எழுத்துக்கள் பத்து என்று கூறுகிறார். இலக்கணச் சிந்தனைகளில் முடிவு என்பது இல்லை, மேலும் மேலும் சிந்திக்க இடமுண்டு என்பதை இதன்மூலம் நன்கு விளக்குகிறார். நானும் பவணந்தி முனிவர் காட்டும் வழியைப் பின்பற்றிச் சில புதிய சிந்தனைகளை வெளியிடுகிறேன்.

புதிய சிந்தனைகள் என்று காட்டப்படும் மாறுபாடுகள் இரண்டு அடிப்படையில் தோன்றுகின்றன. 1) தொல் காப்பியர், பவணந்தி முனிவர் இருவரும் கூறிய கருத்துக் களினின்றும் வேறுபட்ட கருத்துக்களைக் கூறுவது.

2) அவர்கள் சுட்டிக் காட்டாது விட்ட கருத்துக்களைக் காட்டுவது. நான் கூறும் புதிய சிந்தனைகளில் இந்த இரண்டும் கலந்தே நிற்கின்றன.

புதிய கருத்துக்களை கூறுவதை மட்டும் 'புதிய சிந்தனைகளின்' இலக்காகக் கொள்ளாமல், பழைய கருத்துக்களை வகைப்படுத்தி, தொடர்பற்று நிற்கும் கருத்துக்களைத் தொடர்ப்படுத்தி, இன்றைய மக்களுக்கு விளங்கக்கூடிய நடையில் எடுத்துக் கூறுவதையும் புதிய சிந்தனை என்றே கொள்ளவேண்டும். தொல்காப்பியர், பவணந்தி முனிவர் இருவரும் கூறிய கருத்துக்களை வகைப்படுத்தியும் தொடர்ப் படுத்தியும் காட்டியிருப்பதே இந்நூலில் பெரும் பகுதியாக அமைத்து நிற்கும்.

தொல்காப்பியர் வகுத்த இலக்கணம் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று பெரும் பகுதி கொண்டது. இங்கு சொல் இலக்கணத்தைப் பற்றி மட்டும் கூறுகிறேன்.

## சொல்.

எழுத்துக்கள் தனித்து நின்றே, பல எழுத்துக்கள் கூடி நின்றே பொருள் உணர்த்தினால், பொருள் உணர்த்தும் எழுத்தை அல்லது எழுத்துத் தொகுதியைச் சொல் என்று கொள்ளவேண்டும் என்பது சாதாரணமாக சொல்லுக்குக் கூறப்படும் இலக்கணம். இவ்வாறு கூறினால் சொல்லுக்கு அடிப்படை எழுத்து என்று கொள்ளவேண்டும். ஆனால் எழுத்திலிருந்து சொற்கள் பிறக்கின்றன என்று கூறுவதை விட எழுத்திலிருந்து அசைகள் பிறக்கின்றன, அசைகளி லிருந்து சொற்கள் பிறக்கின்றன என்று கூறுவது பொருத்த முடைத்து.

ஆனால் பலர் இந்தக் கருத்தை ஒத்துக்கொள்வதில்லை. அதற்கு ஒரே காரணம் தொல்காப்பியர் எழுத்திலக்கணத் திலும் சொல்லிலணக்கத்திலும் அசையைப்பற்றிக் கூறாமல் யாப்பிலக்கணத்தில் அசையைப்பற்றிக் கூறியிருப்பதே. இதைக் காரணமாகக் கொண்டு, அசை ஓசைநயம் ஏற்படு வதற்காக அமைந்தது, ஓசை நயம் செய்யுளுக்குத்தான் வேண்டும், ஆகவே செய்யுளுக்குத்தான் அசை உரித் தானது, வசன இலக்கியத்துக்கு இது தேவையில்லை என்று கூறுகிறார்கள். செய்யுளுக்குரிய உருபுகள் எழுத்து அசை, சீர், தளை, அடி, என்பன. இவற்றில் சீர் அமைப்பிலும், சீர்களை இணைக்கும் தளை அமைப்பிலிருந்தும்தான் ஓசை இன்பம் அதிகமாகப் பிறக்கிறது. அசையும் இதில் சிறிது பங்கு கொள்ளுகிறது என்று கூறலாமே தவிர அசைதான் ஓசை இன்பம் கொடுக்கிறது என்பது சரியல்ல.

செய்யுளுக்கு உருப்புக்களாக அமைந்தது போல வசன இலக்கியத்துக்கு உருப்புக்களாக அமைந்தன எழுத்து, அசை, சொல், புணர்ச்சி, சொற்றொடர், வாக்கியம். சீர் அமைப்புக்கு அசை உதவியாக அமைவதுபோல் சொல் அமைப்புக்கும் அசைதான் உதவுகிறது. எழுத்தின்றி சொல் அமையாது என்று கூறுவது எவ்வளவு உண்மையோ அவ் வளவு உண்மை அசையின்றி சொல் அமையாது என்று கூறுவதும். சீர் எவ்வாறு ஓரசை, ஈரசை, மூவசை,

நாலசைகளால் அமைகின்றனவே. அதேபோன்று சொல்லும் ஓரசைச் சொல், ஈரசைச் சொல், மூவசைச் சொல் என்று அமைகிறது. சொற்களை ஒலித்துப் பார்த்தாலே சொற்கள் அசைகளால் உண்டாகின்றன எழுத்துக்களால் அல்ல என்பது விளங்கும். 'படம்' என்ற சொல் ஒரு நிறையசைச் சொல். இதை ஒலிக்கும்போது இடையில் நிறுத்தாது ஒலிக்கிறோம். 'பாடம்' என்ற சொல் 'நேர் நேர்' என்று ஈரசை கொண்டது. ஒலிக்கும்போது 'பா' என்றும் 'டம்' என்றும் தனித் தனியாகவே ஒலிக்கிறோம். 'படிக்கின்றான்' என்ற சொல் நிறை நேர். நேர். என்ற மூவசைச் சொல். 'படிக்', 'கின்', 'றான்' என்று அசை அசையாகத்தான் ஒலிக்க முடியும்.

யாப்பிலக்கணத்தில் அசைகளுக்கு ஒரு குறில் அல்லது ஒரு நெடில் தனித்தும் அல்லது ஒரு ஒற்றுடன் இணைந்தும் என்றும் ஒரு குறில் இணை அல்லது குறில் நெடில் தனித்தும் அல்லது ஒரு ஒற்றுடன் இணைந்தும் என்று 8 வடிவங்கள் காட்டப்பட்டுள்ளன. வசன இலக்கியத்தின் சொற்கள் எல்லாம் இந்த 8 அசைகளின் தொகுப்பால் மட்டுமே அமைந்துள்ளன. எந்தச் சொல்லிலும் ஒரு எழுத்துக்கூட அதிகமாக வருவதில்லை.

ஒரு அசை தனித்து நின்றோ அல்லது சில அசைகள் சேர்ந்து கூட்டாக நின்றோ பொருள் உணர்த்தினால் அதை சொல் என்று கூறுகிறோம். தொல்காப்பியர் 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்று கூறுகிறார். ஆகவே சொற்கள் பொருளை நன்கு உணர்த்த வேண்டுவதில்லை, பொருளைக் குறிப்பிட்டாலே 'சொல்' என்ற பெயர் பெறும் என்று உரையாசிரியர்கள் கூறுகிறார்கள். இந்த அடிப்படையில்தான் இடைச்சொல் என்ற பகுதியே தோன்றியுள்ளது. 'அன், ஆன், அள், ஆள்' முதலிய சொற்கள் பால் பொருளை ஊட்டுகின்றன, த், ட், ற், இன், கிறு, கின்று என்பன காலம் குறிக்கின்றன. இவற்றுக்குத் தனிநிலைமையில் பொருள் அன்றாயினும் ஒரு பகுதியுடன் சேர்ந்து பகுதிப் பொருளுக்கு மாற்றம் உண்டாக்குவதால் இவைகளும் சொற்களாகவே கருதப்படுகின்றன.

தொல்காப்பியர் தனித்து நின்று பொருள் உணர்த்தும் வலிமை பெற்ற சொற்களைத் தனியாகவும் தனித்து நின்று பொருள் உணர்த்தும் ஆற்றல் அற்ற ஏனையச் சொற்களைத் தனியாகவும் பிரித்தே கூறுகிறார். "பெயர்ச் சொல்லும் வினைச் சொல்லும்தான் சொற்கள் எனப்படும்" என்று கூறிவிட்டு அடுத்த நூற்பாவில் "இடைச் சொல்லும், உரிச் சொல்லும் இவற்றுடன் இணைந்து வரும்" என்று கூறுகிறார். இவ்வாறு இவற்றைப் பிரித்துக் கூறுவதற்குக் காரணம் இந்தச் சொற்கள் தனித்து நிற்க மாட்டாமல் வேறு சொற்களுடன் இணைந்தே நிற்கவேண்டிய நிலைதான்.

இவ்வாறு தனித்து நிற்கும் ஆற்றல் அற்ற சொற்களை இலக்கண ஆசிரியர்கள் இடைச்சொல், உரிச் சொல் என்று இரண்டு பிரிவாக மட்டும் பகுத்துவிட்டார்கள். இந்த இரண்டு பிரிவுகளையும் பெயரியல், வினையியல், கிளவியாக்கம், வேற்றுமை இயல் முதலிய பிரிவுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் ஒரு பெரிய வித்தியாசம் புலப்படும். அந்த இயல்களில் பெயர் சொற்களும் வினைச் சொற்களும் எவ்வாறு தோற்றுவிக்கப்படுகின்றன, பல உருவங்களாக எவ்வாறு மாற்றியமைக்கப் படுகின்றன. உருவம் மாறிய வடிவில் எத்தகைய பொருள் மாற்றம் உண்டாகின்றன என்று அந்தச் சொற்களின் இலக்கணங்களாக காட்சியளிக்கின்றன. ஆனால் இந்த இரண்டு இயலிலும் அந்த வகையை விடுத்து பலசொற்களைப் பொறுக்கி எடுத்து அகராதியில் கொடுத்திருப்பதுபோல் அந்தச்சொற்கள் என்ன பொருள் குறிக்கின்றன என்றுதான் கொடுக்கப்பட்டிருக்கிறது தனித் தொகுதிகளாக அமைந்த இடைநிலை, விகுதி, வேற்றுமை உருபுகள், அசை போன்ற சில பிரிவுகளை இடைச் சொல் பகுதியில் குறிப்பிட்டபோதிலும் பெரும் பகுதி தனிச்சொல் அகராதியாகவே நிற்கிறது. ஆகவே இவற்றை பழைய முறையிலேயே ஏற்றுக்கொள்வதைவிட இவற்றில் அமைந்த சொற்களை வேறு வழிகளில் பிரித்து அமைத்தால் உபயோகமாக இருக்கும்.

## சொற்களின் பலவகைப்பட்ட பிரிவுகள்:

முதல் பிரிவாக அமைத்த பிரிவு பகாப்பதம் பகுபதம். பகாப்பதம் என்றால் அந்த சொல்லிலிருந்து எந்தப் பகுதியை (எழுத்து, அசை, விகுதி முதலியன) எடுத்துவிட்டாலும் சொல்லின் பொருள் முழுதும் மறைந்துவிட்டால் அந்தச் சொல் பகாப்பதம். உ-ம்-படம். இதில் எந்த எழுத்தை நீக்கினாலும் பொருள் கெட்டுவிடுகிறது, ஆகவே அது பகாப்பதம். பகுபதச் சொற்களிலிருந்து ஒன்று அல்லது பல எழுத்துக்களையோ அசைகளையோ நீக்கினாலும் எஞ்சிய சொல் அதே பொருளை ஒரு வகையில் உணர்த்தும்-உ-ம்-காண்கிறேன் இதில் 'கிறேன்' என்ற பகுதியை நீக்கினாலும் 'காண்' என்றஎஞ்சிய பகுதி அந்த பொருள் உணர்த்துகிறது. தொல்காப்பியர் காட்டாத இந்தப் பிரிவை பவணந்தி முனிவர் காட்டுகிறார். இதே பிரிவை பின்னால் இலக்கணக் கொத்து எழுதிய திரு. சுவாமிநாத தேசிகர் 'தனிமொழி', 'தொடர்மொழி' என்று அழைக்கிறார். (சொல், மொழி, பதம் என்ற மூன்றும் ஒரே பொருள் கொண்டன) வேறு வகையாக இவற்றை இயல் சொல் ஆக்கச் சொல் என்று அழைத்தால் இந்தப் பிரிவுக்கு உள்ள விளக்கம் பெயரிலேயே நன்றாகத் தெரிகிறது. 'மலை, நீர்' என்பன இயல் சொற்கள். 'மலையன், தண்ணீர்' என்பன ஆக்கச் சொற்கள். 'ஓடு. செய்' என்பன இயல்சொற்கள், 'ஓட்டு, செய்கிறான்' என்பன ஆக்கச் சொற்கள். இயல் சொற்கள் பொருள்களை, செயல்களை, பண்புகளைக் குறிக்க இடுகுறியாக இட்டபெயர்கள். இயற் சொற்களுடன் வேறு சொற்களை அல்லது சொல் உருபுகளை சேர்த்து ஆக்கச் சொற்கள் அமைக்கப்படுகின்றன. தொல்காப்பியர் ஆக்கச் சொற்கள் எவ்வாறு அமைக்கப்படுகின்றன என்று ஒரு தனி இயல் 'கிளவி ஆக்கம்' என்ற பெயரில் அமைத்துள்ளார்.

இரண்டாவது வகைப்பிரிவு — 1) தனித்து நிற்கும் ஆற்றல் அமைந்த சொற்கள், 2) தனித்து நிற்கும் ஆற்றல் அற்ற சொற்கள்: இவைகளில் தனித்து நிற்கும் ஆற்றல் உள்ள சொற்களில் இரண்டு பிரிவுகள் உள்ளன — பெயர்ச்

சொல், வினைச் சொல். வினைச் சொற்களுடன் பெயரெச்சம், வினையெச்சம் என்ற இரு தொகுதிகளை இணைத்தே கூறுவது வழக்கு இந்த இரண்டு பிரிவுகளும் வினைப் பகுதியை அடிப் படையாகக் கொண்டு ஆக்கப்பட்ட சொற்கள். இக்காரணம் பற்றியே இவற்றை வினைச் சொற்களுடன் இணைத்து விட்டோம். ஆனால் அவ்வாறு இணைப்பதைவிட தனித்து நிற்கும் ஆற்றல் அற்ற தொகுதியின் பிரிவாக அமையும் அடைச் சொல் பிரிவில் இவற்றைச் சேர்ப்பது பொருத்த மானது.

தனித்து நிற்கும் ஆற்றல் அற்ற சொற்கள் :— இவற்றில் இரண்டு பிரிவுகள். 1) வடிவம் அற்ற சொற்கள், 2) வடிவம் உள்ள சொற்கள் என்று பிரிக்கலாம். சொற்கள் எழுத்துக்களி லிருந்து நேராகப் பிறக்கவில்லை. எழுத்துக்கள் அசைகளாக வடிவமெடுத்து அசைகள் சொற்களாக மாறுகின்றன என்று முன்பு குறிப்பிட்டிருக்கிறேன். இந்த அசை வடிவம் எடுக் காமல் எழுத்து வடிவத்திலேயே நின்று பொருள் குறிக்கும் சொற்களும் உள்ளன. 'ப்' 'வ்' எதிர்கால இடைநிலைகள். 'த், ட், ற்' இறந்தகால இடை நிலைகள். இவைகள் எழுத் தாகவே நின்றாலும் தாங்கள் சேர்ந்து வரும் பகுதிச் சொற் களுக்கு பொருள் மாற்றம் கொடுக்கின்றன. தன்னில் பொருள் கொண்டன அல்லது பிற சொற்களுக்குப் பொருள் மாற்றம் கொடுப்பன இரண்டும் சொற்களே. ஆகவே இவற்றையும் சொற்களாகவே இலக்கண ஆசிரியர்கள் ஏற்றிருக்கிறார்கள். இடைச் சொல் பிரிவில் அடங்கியுள்ளன.

எழுத்து நிலையை விட்டு அசை நிலை ஏற்று தங்களுக் கென்று தனிப் பொருள் அமையாது பிற சொற்களுக்குப் பொருள் மாற்றம் கொடுக்கும் பல சொற்கள் உள்ளன. இவை விகுதிகளாகவும் இடை நிலைகளாகவும் பணியாற்றுகின்றன.

பொருள் உள்ள சொற்கள், தங்களுக்கு தனித்துப் பொருள் இன்றி தாங்கள் கூட்டுச்சேரும் சொற்களுக்குப் பொருள் மாற்றம் உண்டாக்கும் சொற்கள் என்ற பிரிவைத் தனிப் பிரிவாகக் கொள்ள வேண்டும். இடை நிலைச் சொற்கள்

விகுதிச் சொற்கள் எல்லாம் இந்த இரண்டாம் பிரிவைச் சார்ந்தன.

தனித்து நிற்க முடியாத ஆனால் தங்களுக்குத் தனிப் பொருள் அமைந்த சொற்களில் பல பிரிவுகள் உள்ளன. 1) அடைச் சொற்கள் — வினை இயலில் அடங்கியுள்ள பெயரெச்சமும், வினையெச்சமும் தனித்து நிற்கும் ஆற்றல் அற்ற சொற்கள். அவற்றை பிறப்பு நோக்கி வினைச் சொற்களுடன் இணைத்து வைப்பதைவிட அடைச் சொற்கள் என்ற பெயரிட்டுத் தனித் தொகுதியாக அமைப்பது சிறந்தது என்று முன்னமே குறிப்பிட்டேன். தொல்காப்பியரே அடைச் சொல்லைப் பற்றிக் கூறுகிறார். 'அடைச் சொல், சினைச் சொல், முதல் சொல் மூன்றும் இதே வரிசையில் வரவேண்டும், முறை மயங்குவது தவறு என்று கூறுகிறார். இங்கு உதாரணம் காட்டும் உரையாசிரியர்கள் 'செம் கால் நாரை. 'சிறு கண் யானை' என்று காட்டுகிறார்கள். 'செம், சிறு' என்பன அடைச் சொற்கள். பெயர்ச் சொற்களை அடுத்து நிற்பன பெயரடைச் சொற்கள். வினைச் சொற்களை அடுத்து நிற்பன வினையடைச் சொற்கள் என்று கொள்ளலாம். 'செய்து வந்தாள், கண்டு விடுவாள்'—'செய்து, கண்டு' வினையடைச் சொற்கள்.

2) சுட்டுச் சொற்கள் 'அ, இ, உ', வினைச் சொற்கள் 'யா, எ' என்பனவும் இந்தப் பிரிவில் சேரும். இரண்டையும் சேர்த்து 'சுட்டுச் சொற்கள்' என்றே அழைக்கலாம்.

3) சுட்டுச் சொற்கள் விகுதிச் சொற்களுடன் இணைந்து, 'அவன், இவன், உவன்' என்றும், வினைச் சொற்கள் விகுதிகளுடன் இணைந்து 'யாவன், எது' என்றும் சுட்டுப் பெயர், வினைப் பெயர்களை ஆக்குகின்றன. அவை சில காலச் சொற்களுடன் சேர்ந்து 'அப்பொழுது, இப்பொழுது, எப்பொழுது' என்று சில காலம் காட்டும் சொற்களும் 'கு' விகுதியுடன் சேர்ந்து 'அங்கு, இங்கு, எங்கு' என்று இடம் காட்டும் சொற்களும் அமைந்து விட்டன. இவற்றிற்கு தனிப்பெயர் கொடுப்பதனால் 'சுட்டிணைச் சொற்கள் என்று கூறலாம்.

4) அடுத்த பிரிவாக உவமைச் சொற்களையும் ஒப்புச் சொற்களையும் ஒரு கூருக இணைத்து 'ஒப்புச் சொற்கள்' என்று பெயரிட்டு அழைக்கலாம். 'போன்ற, ஒத்த என்ற வடிவத்தில் பெயர்ச் சொல்லையும், 'போன்று ஒத்து' என்ற வடிவத்தில் வினைச் சொல்லையும் சார்ந்துவரும். ஆனால் இவை 'எச்சங்கள்' அல்ல.

5) இந்தப் பிரிவுகளில் அடங்காமல் ஐயம் உணர்த்தும் 'கொல்' போன்ற சொற்களும், தேற்றம் உணர்த்தும் 'மட்டும், தான், ஏ' போன்ற சொற்களும் விகுதிகளும், வினாவாக அமையும் 'ஒ, ஆ' போன்ற விகுதிகளும், பிறவும் உள்ளன. சிறுசிறு தொகுதிகளாக அல்லது தனிச் சொற்களாக அமைந்த இவற்றை முன்னோர் வகுத்த இடைச் சொல் பிரிவிலேயே வைத்து விடுவது இலகுவாகத் தோன்றுகிறது.

மேலே காட்டிய பிரிவுகள் எல்லாம் பழைய இலக்கண ஆசிரியர்கள் காட்டிய சொற்களை, மாற்றுத் தொகுதிகளாக மாற்றி அமைத்த பிரிவுகள். தற்கால மொழி இயலார் இந்தச் சொற்களுக்கெல்லாம் அடிப்படையாக, இயல் சொல்லாக அமைந்த பகாப்பதத்துக்கும் அடிப்படையாக, 'வேர்ச் சொல்' அல்லது 'அடிச் சொல்' என்று உள்ளது என்றும் காட்டுகிறார்கள்.

## பெயர்ச் சொல்

பெயர்ச் சொல்லுக்குத் தொல்காப்பியர் சுருக்கமாகவே விளக்கம் தருகிறார். உயர்திணைக்கும், அஃறிணைக்கும், இரண்டு திணைக்கும் பொதுவாகவும், ஐந்து பாலுக்கும் உரியன பெயர்ச் சொற்கள் என்று கூறுகிறார். பவணந்தி முனிவர் இன்னும் விரிவாகப் பெயர்ச் சொற்கள் 'இடுகுறி, காரணம், மரபு, ஆக்கம் ஆகிய பிரிவுகள் கொண்டன, காலம் காட்டா, வேற்றுமைக்கு இடனாயிருப்பன, திணைபால், இடம் இம்மூன்றையும் சார்ந்த உட்பிரிவுகளில் ஏதாவது ஒரு பிரிவை ஏற்பன அல்லது பொதுப்பிரிவாக அமைவன' என்று கூறுகிறார். பெயர்ச் சொற்களின் பிரிவுகளைக் கொண்டே பெயர்ச் சொற்களைச் சிறந்த முறையில் விளக்கி விட்டார்கள்.

### முக்கிய பிரிவுகள்:- தோன்றும் வகைபற்றி எழுந்தன

பெயர்கள் தோன்றும் வகைகளை வைத்து தொல்காப்பியராலும் பவணந்தி முனிவராலும் காட்டப்பட்ட பிரிவுகள் ஏழு. 1) இடுகுறி, 2) காரணம், 3) மரபு, 4) இயல், 5) ஆக்கம், 6) பொது, 7) சிறப்பு. — 1) காடு, மலை, ஆறு, முதலியன இடுகுறிப் பெயர்கள். இவை யாதொரு காரணம் இன்றி குறியீடாக இட்ட பெயர்கள். காரணம் முன்பு இருந்தாலும் இப்பொழுது மறைந்துவிட்டன. — 2) சிறுவன், அறிஞர் முதலியன காரணப்பெயர்கள். சிறிய நிலையின், அறிவு முதிர்ச்சியின் காரணமாக ஏற்பட்ட பெயர்கள். — 3) தொன்று தொட்டு வழங்கிவரும் பெயர்கள் எல்லாம் மரபுப் பெயர்கள். அரசன், அமைச்சன், ஆசிரியர் முதலியன. — 4) இயற் பெயர்களும் மரபுப் பெயர்கள்தான். மரம், செடி, பட்சி முதலியன. — 5) மொழியின் வளர்ச்சி காரணமாக அவ்வப்போது தோற்றுவிக்கப்படும் பெயர்கள் எல்லாம் ஆக்கப் பெயர்கள். சிறியவன், நல்லவன், சேரன், மாவட்டம், பணிமனை முதலியன. —6) ஒரே வகையான எல்லாப் பொருள்களுக்கும் பொதுவாக அமைந்த பெயர்கள் பொதுப் பெயர். — 7) ஒவ்வொரு தொகுதியிலும் தனிக்குணம் காரணமாகப் பிரித்துக் கொடுக்கப்பட்ட பெயர்கள் சிறப்புப் பெயர்-(உ-ம்) மரம் பொதுப் பெயர். மாமரம்,

தென்னை மரம், பலா மரம், சிறப்புப் பெயர். விலங்கு பொதுப் பெயர், புலி, கரடி, நாய் சிறப்புப் பெயர். ஒருவருக்குரிய தனிச் சிறப்புப் பற்றிவரும் பெயர்களும் சிறப்புப் பெயர்களே. (உ–ம்) கவியரசன் கம்பன், முனிவன் அகத்தியன், பிரதமர் நேரு இவற்றின் முன்பகுதி சிறப்புப் பெயர்கள்.

இந்தப் பெயர் பிரிவுகளில் இராமன், சீதை, கங்கை, இமயம் என்று ஒருவனை, ஒருத்தியை, ஒன்றினைக் குறிக்கும் பெயர்கள் ஒரு பிரிவிலும் அடங்கவில்லை. இடுகுறிப் பெயர், இயற்பெயர், சிறப்புப் பெயர் என்று கூறலாம். ஆனால் இந்தப் பெயர்கள் எல்லாம் வேறு ஒரு வகைப் பொருள்களையும் மேலே காட்டியபடி உணர்த்தி நிற்கின்றன. தனி மனிதர் களுக்கும், தனிப் பொருள்களுக்கும், தனி ஊர்களுக்கும் இடப்படும் பெயர்கள் வேறு எந்தப் பிரிவிலும் அடங்கா. அவ்வப்போது தனித்தனியாக இடப்படுவதால் அவற்றை “இடுபெயர்” என்று அழைக்கலாம், முன்னால் கூறிய ஏழு பிரிவுகளுடன் சேர்த்து இந்தப் பிரிவுகளை எட்டாகக் கொள்ள லாம்.

## பொருள்பற்றி எழுந்தன:

பெயர்கள் உணர்த்தும் பொருள்களின் தன்மையை வைத்து ஏற்பட்ட பிரிவுகள் ஆறு. அவை 1) பொருள், 2) இடம், 3) காலம், 4) சினை, 5) குணம், 6) தொழில் என்பன. இந்த ஆறுடனும் சேர்க்கக்கூடிய சில பிரிவுகளும், ஒன்றாகக் காட்டியதைப் பலவாகப் பிரிக்கக்கூடிய சில பிரிவு களும், வேறு பிரிவுடன் இணைத்து விடக்கூடிய சில பிரிவு களும் உள்ளன. சினை என்பது பொருள்களின் பாகங்களைக் குறிக்கின்றன. மனிதன் பொருள், கண், கால், கை முதலி யன சினை. மரம் பொருள், கிளை, காய், கனி, முதலியன சினை. ஆனால் இந்தச் சினைகள் எல்லாம் தனித் தனியாகப் பொருள் கள்தாம் கை பொருள், விரல், நகம் – சினை. கனி பொருள், கொட்டை, தோல் சினை. ஆகவே சினை என்ற தனிப் பிரிவு தேவை இல்லாதது. பொருட் பெயரின் உட்பிரிவாகக் கொள்ளலாம்.

பொருட் பெயர் என்பது ஒரு மிகப் பெரிய தொகுதியை உணர்த்தி நிற்கிறது. தனித்து நிற்கும் பலவகைப்பட்ட பிரிவுகளை இந்த பெரும் பிரிவில் சேர்க்கலாம். அவற்றை முன்னோர்கள் இந்த ஆறினுள்ளும் சேர்க்காமல் தனிப்பிரிவுகளாகச் சுட்டுப் பெயர்கள், வினுப் பெயர்கள் என்று ஏற்படுத்தியுள்ளனர். இவற்றுள் சுட்டுப் பெயர், ஒரு பொருளை முதன் முறை அதன் இயற் பெயரால் கூறிவிட்டுப் பின்னுல் திரும்பத் திரும்பக் கூறும்பொழுது பயன்படுகிறது. 'மாணுக்கன் ஆசிரியரிடம் சென்ருன். அவன் அவரிடம் பாடம் கேட்டான்' என்று இரண்டாவது முறையும், பிந்திய இடங்களிலும் அவன், அவர் என்று சுட்டுப் பெயரால் கூறுகிருேம் ஆனுல் உணர்த்தப்படும் பொருள் ஒன்றே. அதே போன்று 'யார் ஆசிரியரிடம் பாடம் கேட்பது, மாணுக்கனுக்கு யார் பாடம் கற்பிக்கிருர்' என்று வினுப் பெயரால் அதே மாணுக்கனேயும் அதே ஆசிரியரையும் சுட்டிக் கேட்கிருேம். ஆகவே சுட்டுப் பெயரையும் வினுப் பெயரையும் பொருட் பெயரின் உட்பிரிவுகளாகவே ஏற்றுக்கொள்ளுவது சிறப்புடைத்து.

ஐந்தாவது பிரிவாகிய குணப் பெயரை இரண்டாகப் பிரித்துக் கூறினுல் நல்லது. ஒரு பிரிவைப் பொருள்களின் தன்மை என்றும் மற்ருெரு பிரிவைப் பொருள்களின் குணம் என்று குறிப்பிடலாம். தன்மை என்பது நம்முடைய புலன்களால் உணரப் படுவன. குணம் என்பது தன்மையை அடிப்படையாகக் கொண்ட பண்பு என்று கூறலாம். வெள்ளை, சிகப்பு, இனிப்பு, குளிர், சூடு, முதலியன பொருள்களின் தன்மைகள். வெண்மை, செம்மை, இனிமை, தண்மை, வெப்பம் முதலியன குணப் பெயர்கள். தன்மைப் பெயர்கள் மொழி வளர்ச்சி, நாகரீக வளர்ச்சி அதிகம் இல்லாத மிகப் பழைய காலத்திலேயே தோன்றியிருக்க வேண்டும். குணப் பெயர்கள் நாகரீகத்தின் விளைவாகப் பிற்காலம் தோன்றியவைகள். அறிவினுல் மட்டும் உணரப்படுவன.

திசைகளை கிழக்கு, மேற்கு என்று நான்காகவும், வடகிழக்கு, தென்மேற்கு என்று சேர்த்து எட்டாகவும், மேலும் அதிகமாகவும் பிரித்துக் கூறுகிருேம். இந்தப் பெயர்கள் முன்பு

சொல்லப்பட்ட எந்தப் பிரிவுகளிலும் சேரக் கூடியனவல்ல. ஆகவே திசைப் பெயர் என்று தனித் தொகுதி ஏற்படுத்துவது நல்லது.

ஒன்று, இரண்டு மூன்று, முதலிய எண்களை எண் பெயர் என்றே கூறுகிறோம். அதை அளவுப் பெயர் என்று மாற்றி விட்டால் படி, ஆழாக்கு, லிட்டர், கஜம், மைல், கிலோமீட்டர், ஏக்கர், கிராம், டன், போன்ற பெயர்களையும் அந்தத் தொகுதி யில் அடக்கிவிடலாம்.

இவற்றை எல்லாம் தொகுத்து எடுத்தால் பொருள்பற்றி அமைந்த பெயர்ப் பிரிவுகள் கீழ்வருமாறு அமையும்.

1 பொருட் பெயர்
1/1 சினைப் பெயர்
1/2 சுட்டுப் பெயர்
1/3 வினாப் பெயர்
2 இடப் பெயர்
3 காலப் பெயர்
4 தன்மைப் பெயர்
4/1 குணப் பெயர்
5 தொழில் பெயர்
6 திசைப் பெயர்
7 அளவுப் பெயர்

## நிலைபற்றியும், ஆண், பெண் பிரிவுபற்றியும் எழுந்த பிரிவுகள்:

இந்தப் பிரிவுகளைத் திணை, பால், எண், இடம் என்று கூறுகிறோம். ஒவ்வொரு பிரிவும் சில உட்பிரிவுகள் அமைந்த ஒரு தொகுதியாகவும் உள்ளது. இவற்றில் திணையில் இரண்டு பிரிவுகளும், பாலில் ஐந்து பிரிவுகளும், எண்ணில் இரண்டு பிரிவும், இடத்தில் மூன்று பிரிவுகளும் உண்டு. ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு பெயர் உண்டு. இவ்வாறு பெயர் ஏற்று தனிநிலை ஏற்பட்ட பிரிவுகளைத் தவிர ஒவ்வொரு தொகுதி யிலும் ஒரு பொதுப் பிரிவும் உண்டு.

எவ்வாறு பொதுப் பிரிவு உண்டாகிறது என்று தெரிந்து கொள்ள வேண்டும். ஒரு தொகுதியில் ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவுகள் இருந்தால், அந்தப் பிரிவுகளுக்கு உள்ள சிறப்புக் குணங்கள் ஒரு பொருளில் வெளிப்படையாகத் தெரியாமல் இருந்தால் அந்தப் பொருளைப் பொதுப் பிரிவு என்றுகொள்ள

வேண்டும். வேறு ஒரு வகையாகவும் பொதுப் பிரிவு உண்டாகும். எந்தக் காரணத்தை முன்னிட்டு பிரிவுகள் ஏற்படுத்தினேமோ அந்தக் காரணம் ஒரு பொருளுக்குப் பொருந்தாவிட்டாலும் அந்தப் பொருளையும் பொதுப் பிரிவு என்று கொள்ளவேண்டும் பால் பிரிவில் ஆண்பால், பெண்பால் என்று இரண்டு பிரிவுகள் உண்டு. காளை என்னும் பெயர் ஓர் ஆண் மிருகத்தைக் குறிக்கிறது. ஆகவே காளை ஆண்பால். பசு பெண்பால். மாடு என்னும் பெயர் காளையையும் குறிக்கும், பசுவையும் குறிக்கும். குறிப்பிட்ட ஒரு மாடு ஆணுகவோ அல்லது பெண்ணுகவோதான் இருக்க முடியும். ஆனல் மாடு என்ற பெயர் அதை ஆண் பெண் என்று தெளிவாக வெளிப்படுத்தவில்லை. ஆகவே 'மாடு' பொதுப்பால். மலை என்ற பெயர் குறிப்பிடும் பொருள் இந்த ஆண் பெண் பிரிவில் அடங்காத பொருள். ஆகவே மலையும் பொதுப்பால்.

## திணைத் தொகுதி :

உயர்திணை, அஃறிணை, என்றும் பொதுத் திணை என்றும் மூன்று பிரிவுகள் கொண்டது. இந்தப் பிரிவுகள் பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்டது. பகுத்தறிவு படைத்த மனிதர்கள் மட்டும் உயர்திணை, தேவர்களையும் நரகர்களையும் சேர்த்து மக்கள், தேவர், நரகர், உயர்திணை என்று கூறுவதுமுண்டு ஏனைய பகுத்தறிவற்ற உயிருள்ள பொருட்களும், உயிரற்ற பொருட்களும், இடம், காலம், குணம், தொழில், அளவு, திசைப் பெயர்கள் எல்லாம் அஃறிணை. 'தாய்' என்ற பெயர் குழந்தை பெற்ற பெண்ணையும், குட்டி ஈன்ற பசுவையும், குஞ்சு பொறித்த பறவையையும் குறிக்கிறது. ஆகவே தாய் என்ற பெயர் பொதுத்திணை. இலக்கிய ஆட்சியை வைத்துத்தான் தாய் என்ற பெயரை இவ்வாறு பொதுத்திணையாகக் கூறுகிறேம். இலக்கிய ஆட்சியற்ற இதர உறவுகளைப் பொதுத்திணை என்று கூறலாகாது. பொதுத் திணையை விரவு திணை என்றும் கூறுவதுண்டு. பொருள் பெயர்களுக்கு மட்டும் திணைப்பிரிவு உண்டு இடம், காலம், குணம் முதலிய மற்றய பெயர்களுக்கு திணைப் பிரிவு பொருந்தாது என்று கூறலாம் என்றும் தோன்றுகிறது.

## இடத் தொகுதி:

தன்மை, முன்னிலை, படர்க்கை என்று மூன்று பிரிவுகள் கொண்டது இந்தப் பிரிவுக்கு அடிப்படை 'பேச்சு' ஒருவன் பேச ஆரம்பித்தவுடன் அல்லது பேசுவதாகக் கருத ஆரம்பித்தவுடன் அவனுடைய உலகம் மூன்று பிரிவாகப் பிரிந்து விடுகிறது. 1) பேசுகின்ற தான், 2) பேச்சைக் கேட்கும் பொருள், 3) உலகத்திலுள்ள ஏனைய எல்லாப் பொருள்களும் இந்த மூன்று நிலைகளையும் தன்மை, முன்னிலை, படர்க்கை என்று அழைக்கிறோம் — தன்மைப் பெயர்கள் நான், நாம், யான், யாம், நாங்கள். முன்னிலைப் பெயர்கள் நீ, நீர், நீவிர், நீயிர், நீங்கள். ஏனைய எல்லாப் பெயர்களும் படர்க்கை நிலையே.

நாம் என்ற பெயர் தன்மையையும் முன்னிலையையும் உள்ளடக்கியும், நாங்கள் என்ற பெயர் தன்மையையும் படர்க்கையையும் உள்ளடக்கியும், நீங்கள் என்ற பெயர் முன்னிலையையும் படர்க்கையையும் உள்ளடக்கியும் வரும். 'நாம்' உடன் எல்லோரும் சேர்த்தால் 'நாம் எல்லோரும்' என்று தன்மை, முன்னிலை. படர்க்கை மூன்று நிலைகளையும் உணர்த்துகிறது. இவற்றையெல்லாம் உடன்பாட்டு பன்மை என்று கூறுவார்கள். பொதுநிலை என்றும் கூறலாம்.

## எண் தொகுதி:

ஒருமை, பன்மை, பொது என்று மூன்று பிரிவுகள் உண்டு இதன் பெயரே இந்தத் தொகுதி எண்ணிக்கையை அடிப்படையாக வைத்து அமைந்தது என்பதை விளக்குகிறது. பொருள் ஒன்றாக இருக்கும்போது ஒருமை என்றும், இரண்டு அல்லது இரண்டுக்கு அதிகமான பொருள்கள் சேர்ந்திருந்தால் பன்மை என்றும் கூறுகிறோம். நீர், காற்று போன்ற பொருள்களுக்குத் தனி உருவம் இல்லை. அவைகளை எண்ணிக் கணக்கிட முடியாது ஆகவே அவைகள் பொதுச் சொற்கள். இன்னும் சில பொருள்களுக்குத் தனி உருவம் இருந்தாலும் மிகவும் சிறிய உருவமாக இருப்பதாலும்

எப்பொழுதும் மிகப் பல பொருள்கள் இணைந்த தொகுதி யாகவே இருப்பதாலும் அவற்றையும் எண்ணுவதில்லை அரிசி, பருப்பு, மணல் போன்ற பொருள்கள் இத்தகையன. இவற்றையும் பொது என்றே கூறவேண்டும்.

**பால் தொகுதி:**

ஆண்பால், பெண்பால், பலர்பால் என்று உயர்திணைக்கு மூன்று பாலாகவும், ஒன்றன்பால் பலவின்பால் என்று அஃறிணைக்கு இரண்டு பாலாகவும் ஆக மொத்தம் ஐந்து பால் என்று கூறுவது மரபு முந்திய தொகுதிகளைப்போல் இந்தத் தொகுதி எந்த அடிப்படையில் அமைந்திருக்கிறது என்று கூறமுடியாத நிலையில் இருக்கிறது. 'ஆண், பெண்' என்ற இனப் பிரிவையும், 'ஒன்று, பல' என்ற எண் பிரிவையும், உயர்திணை, அஃறிணை பிரிவையும் உள்ளடக்கி நிற்கிறது. திணைப் பிரிவையும், எண் பிரிவையும் தனித் தனித் தொகுதி களாகவே வகுத்து ஏற்படுத்தியுள்ளபோது எஞ்சிய ஆண், பெண் என்ற இனப் பிரிவை மட்டும் குறிக்கவேண்டிய பால் தொகுதியிலும் இவற்றை ஏன் கலந்திருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. அவ்வாறு சேர்த்து வைப்பதிலும் ஒரே முறை யாகச் செய்யாமல் உயர்திணைக்கு ஆண் ஒருமை, பெண் ஒருமை, ஆண் பெண் அற்ற பன்மை என்றும், அஃறிணைக்கு ஆண், பெண் அற்ற ஒருமை, பன்மை என்றும் கூறப்பட்டுள் ளது. ஏன் இவ்வாறு வித்தியாசமாக வகுத்துள்ளனர் என்ப தும் தெரியவில்லை.

ஆனால் பெயர்ச் சொற்களை மட்டும் வைத்துக்கொண்டு ஆராய்ந்ததால்தான் காரணம் தெரியவில்லை. பெயருடன் கூடிவரும் வினைச்சொல்லை வைத்துக்கொண்டு பார்த்தால் இந்த முறைக்கு ஓரளவு காரணம் தெரிகிறது. தமிழ்மொழியில் ஏனைய எந்த மொழியிலும் இல்லாத ஒரு பெருமை வினைச் சொற்களுக்கு இருக்கிறது வினைச் சொற்கள் பெயர்ச் சொல் உதவியன்றியே திணை, பால், எண், இடம் இவற்றை ஓரளவு உணர்த்தும். இவற்றை உணர்த்துவதற்காக வினைச் சொற்களுடன் வெவ்வேறு விகுதிகளை இணைக்கிறோம்.

2 திணை, 3 பால் (ஆண், பெண், பொது), 2 எண் இவை எல்லாவற்றையும் குறிக்கப் 12 விகுதிகள் தேவை. ஆனால்

நம்மிடம் ஐந்து விகுதிகள்தான் உள்ளன. உயர்திணையில் ஆண் பன்மை, பெண் பன்மை, பொது ஒருமை ஆகிய மூன்றுக்கும், அஃறிணையில் ஆண் ஒருமை, பன்மை, பெண் ஒருமை, பன்மை ஆகிய நான்குக்கும் ஆக மொத்தம் ஏழுக்கும் விகுதிகள் ஏற்படுத்தவில்லை. ஆக்கப் பெயர்களாக அமைந்த சுட்டுப் பெயர்களுக்கும், வேறு ஆக்கப் பொருள் பெயர்களுக்கும் இதே ஐந்து விகுதிகள்தான் நம்மொழியில் உள்ளன.

ஏனைய மொழிகளில் இல்லாத வகையில் (வடமொழியிலும் வினைச் சொல் ஆண் பெண் வித்தியாசம் காட்டாது) நம் மொழியில் வினைச் சொல்லுக்கு அமைந்துள்ள இந்தப் பெருமையில் மயங்கி வினைச் சொல்லிலும் சுட்டுச் சொல்லிலும் அமைந்த விகுதிகளை மட்டும் எடுத்துக் கொண்டு பால் தொகுதிக்கு ஐந்து பிரிவுகள் என்று வகுத்து விட்டதாகத் தோன்றுகிறது. இவ்வாறு வகுக்கப்பட்டதில் ஏதும் குறைபாடு இல்லாவிட்டாலும், ஏதோ சிறிதளவுதான் குறைபாடு இருந்தாலும், முன்னோர்கள் வகுத்து விட்டார்கள் நாமும் அவ்வாறே ஏற்றுக் கொள்ளுவது நல்லது என்ற எண்ணத்தோடு ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் குறைபாடுகள் அதிகமாக இருக்கின்றன.

இந்தப் பிரிவு வினைச் சொற்கள் நம்மிடம் இல்லை என்று முன்பு காட்டப்பட்ட ஏழு பிரிவுகளும் பெயர்ச் சொற்களில் இருக்கின்றன — உயர் திணையில் 1) ஆண் பன்மை, தந்தையர், தம்பியர், அண்ணன்மார், 2) பெண் பன்மை, தாயர், தங்கைமார், சிறுமியர், குறத்தியர், 3) பொதுப்பால் ஒருமை, குழந்தை, விருந்து இவையும், அஃறிணையில் 4) ஆண் ஒருமை, காளை, களிறு, சேவல், 5) இவற்றின் 'கள்' விகுதி சேர்ந்த பன்மை, 6) பெண் ஒருமை பசு, பிடி, கோழி, பெடை 7) இவற்றின் பன்மை. இலக்கியத்தில் இந்தச் சொற்கள் அமைந்து நிற்கும் போது இலக்கண ஆசிரியர்கள் இவற்றை ஒதுக்கிவிடுவது சரியல்ல.

திணை, எண், இடம் என்ற மூன்று பிரிவும் ஆண், பெண் என்ற பால் பிரிவும் பெயர்ச் சொற்களுக்கே சிறப்பாக

உரியன. வினைச் சொற்களுக்கும் ஓரளவு அவை பொருந்தி வந்தாலும் வினைச் சொற்களுக்குரியன அல்ல. வினைச் சொல்லுக்கு விளக்கம் சொல்லும் வகையில், ''வினையெனப்படுவது வேற்றுமை கொள்ளாது, நினையும் காலை காலமொடு தோன்றும்'' என்று காலம் காட்டுவதைத்தான் வினையின் சிறப்பு இயலாகத் தொல்காப்பியர் கூறுகிறார். அவ்வாறே பெயர்ச் சொல்லுக்கு விளக்கம் கூறும்பொழுது, 'பெயரெனப் படுபவை தெரியும் காலை உயர்திணைக்குரிமையும், அஃறிணைக்குரிமையும்' என்றும், ''இருதிணைப் பிரிந்த ஐம்பால் கிளவிக்கும்' என்றும் முன்னால் ஏற்கனவே கிளவி ஆக்கத்தில் காட்டியுள்ள திணையையும் ஐம்பாலையும் பெயர்ச் சொல்லுடன் இணைத்தே கூறியுள்ளார். பவணந்தி முனிவரும் 'வேற்றுமைக் கிடனாய்த் திணை பால் இடத்தொன்று ஏற்பவும் பொதுவுமாவன பெயரே' என்று திணைபால் இடத்தை பெயர்ச் சொல்லுடன் தான் இணைத்துக் கூறுகிறார் இவ்வாறு பெயர்ச் சொல்லுக்கே சிறப்பாய் அமைந்த திணை பால் இடம் வினைச் சொல்லுக்கு ஓரளவே அமைந்துள்ள காரணத்தால் பெயர்ச் சொல்லுக்கும் அந்த அளவே பால் கூறுவது சரியல்ல, இலக்கியத்தைப் புறக்கணித்ததாகும்.

மேலும் தமிழில் சொற்களின் முடிவை வைத்துப் பால் கூறுவது இல்லை. சொற்கள் எந்தப் பொருள்களை உணர்த்துகின்றன என்று தெரிந்து அந்தப் பொருள்கள் ஆணா, பெண்ணா என்று அறிந்துதான் அந்தப் பொருளுக்குரிய பாலைச் சொல்லுக்கு கூறுவது வழக்கு. வடமொழியிலும் வேறு சில மொழிகளிலும் சொற்கள் குறிக்கும் பொருளை நோக்காது சொற்கள் என்ன எழுத்தில் முடிகின்றன என்று மட்டும் நோக்கி, அந்தச் சொற்களுக்குப் பால் கூறுவார்கள். வடமொழியில் 'அ'கரத்தில் முடியும் எல்லாச் சொற்களும் ஆண்பால் — ராம (ராமன்), கஜ (யானை), 'அஜ' (ஆடு), 'ஆ' காரத்தில் முடியும் எல்லாச் சொற்களும் பெண்பால்—ரமா (ஒரு பெண்ணின் பெயர்), லதா (கொடி), மாலா (மாலை). யானையும் ஆடும் ஆணா, பெண்ணா, என்பது முக்கியமல்ல 'அ' கரத்தில் முடிவதால் ஆண் தான். கொடியும் மாலையும் உயிரற்ற பொருட்களாயினும் 'ஆ' காரத்தில் முடிவதால் பெண் பால் தான். தமிழில்

இவ்வாறு பொருள்களை அதன் தன்மை நோக்காது பிரிப்ப தில்லை என்று நாம் பெருமையாகக் கூறுகிறோம்.

தமிழில் ஆக்கச் சொற்கள் புதிது புதிதாக அமைப் பதற்கு பண்புச் சொற்களுடனும், அடைச் சொற்களுடனும் மற்றச் சொற்களுடனும், இந்த ஐந்து வகை விகுதிகளை சேர்ப் பது இலகுவான வழி என்று கருதினர்போலும். ஆக்கச் சொற் களை அவைகள் என்ற பொருள் குறிக்கின்றன என்று தெரிந்து கொள்ளாது அந்தச் சொல் எந்தத்திணை, எந்தப்பால், எந்த எண் என்று அறிந்துகொள்ள வசதியாக உள்ளது. ஆனால் ஆக்கப் பெயர்கள் உள்ள அளவுக்கு அதிகமாகவே இயற் பெயர்கள் இருக்கின்றன. இவற்றைப் பொருள்தெரியாது பால் கூற ஆரம்பித்தால் 'தம்பி, நம்பி' என்ற உயர்திணை ஆண் பால் பெயர்களையும் 'கதலி, கழனி', முதலிய அஃறிணை பொதுப்பால் பெயர்களையும், 'இ' விகுதி பெற்ற பெண்பாலாக வும், 'மஞ்சள்' என்ற பெயரை 'அள்' விகுதிபெற்ற பெண் பாலாகவும் தவறுகக் கூறநேரிடும்.

இந்தக் காரணங்களை யெல்லாம் மனத்துள் கொண்டு பார்த்தால், 'பால்' தொகுதியை இப்பொழுது உள்ளே ஐந்து பிரிவுகளாகப் பிரிக்காமல் ஆண்பால், பெண்பால், பொதுப் பால் என்று மட்டும் பிரித்துக்கொண்டு, திணை, எண், இரண் டையும் பால் தொகுதியுடன் இணைக்காது தனியாக விட்டு விடுவதுதான் சிறந்தது. வினைச் சொற்களும் திணை பால் எண் உணர்த்தும். ஆனால் பெயர்ச் சொற்களுடன் சமமாக நின்று உணர்த்தமாட்டா என்று கூறவேண்டும். இலக்கியம் அவ்வாறுதான் அமைந்திருக்கிறது. நாம் இலக்கியத்துடன் தான் ஒட்டி நிற்கவேண்டும். வினைச் சொற்கள் பெயர்ச் சொற் களுடன் சமமாக நின்று திணை பால் எண் உணர்த்தமாட்டா என்று கூறிவிட்டதால் ஏதோ பெரிய குழப்பம் நேரிடும் என்று எண்ணவேண்டியதில்லை. ஆண்பால் பெயர்கள் பெண்பால் வினை ஏற்றும், பெண்பால் பெயர்கள் ஆண்பால் வினை ஏற்றும் வாரா ஆனால் ஆண்பால், பெண்பால் பெயர்கள் பொதுப்பால் வினை ஏற்கும்.

மாறி அமைந்த நிலை எவ்வாறு அமைந்துள்ளது என்று சிறிது பார்ப்பது நல்லது. உயர்திணையில் பெயர்ச் சொல்லில் ஆண்பால் ஒருமை, ஆண்பால் பன்மை, பெண்பால் ஒருமை, பெண்பால் பன்மை, பொதுப்பால் ஒருமை, பொதுப்பால் பன்மை என்று ஆறு பிரிவும் அஃறிணையிலும் இந்த ஆறு பிரிவுகளுமாக 12 பிரிவுகள் உண்டு. வினைச் சொற்களில் உயர்திணையில் ஆண்பால் ஒருமை, பெண்பால் ஒருமை, பொதுப்பால் ஒருமை குறிப்பதற்கு ஆன், ஆள், து என்ற விகுதிகள், இவற்றின் பன்மை குறிக்க 'ஆர்' விகுதி (அள விகுதி), அஃறிணையில் ஆண்பால், பெண்பால், பொதுப்பால் ஒருமைக்கு 'து' விகுதி பன்மைக்கு 'அன' விகுதி இவ்வகள் சேர்ந்து ஆறு நிலைகள். ஆனால் இவற்றில் 'து' விகுதி பொதுப் பால் ஒருமையில் உயர்திணைக்கும், அஃறிணையில் எல்லா ஒருமைக்கும் பொது. ஆகவே மொத்தம் விகுதிகள் ஐந்து தான். ('அ' விகுதி 'அன்' சாரியையுடன் சேர்ந்து 'அன' ஆகிறது. வசதிக்காக 'அன' விகுதி என்று குறிப்பிட்டிருக் கிறது)

பெயர்ச்சொல் வினைச்சொல் இணைப்பு கீழ்க்கண்டவாறு அமையும்:—

| பால் | உயர்திணை | |
|---|---|---|
| | ஒருமை | பன்மை |
| ஆண்பால் | அண்ணன் வந்தான்<br>1 1 | அண்ணன்மார் வந்தனர்<br>4 4 |
| பெண்பால் | நங்கை வந்தாள்<br>2 2 | நங்கையர் வந்தனர்<br>5 4 |
| பொதுப் பால் | குழந்தை அழுதது<br>3 3 | குழந்தைகள் அழுதனர்<br>6 4<br>அழுதன<br>5 |

| பால் | அஃறிணை | |
|---|---|---|
| | ஒருமை | பன்மை |
| ஆண்பால் | காளை வந்தது<br>7 3 | காளைகள் வந்தன<br>10 5 |
| பெண்பால் | பசு வந்தது<br>8 3 | பசுக்கள் வந்தன<br>11 5 |
| பொதுப்பால் | மாடு வந்தது<br>9 3 | மாடுகள் வந்தன<br>12 5 |

பெயர்ச் சொற்களில் 1, 2, 3 குறியிட்ட உயர்திணை ஒருமைச் சொற்களும், 7, 8, 9 குறியிட்ட பன்மைச் சொற்களும் இயல் சொற்கள், விகுதிகள் கிடையா. மற்ற எல்லா உயர்திணை, அஃறிணைச் சொற்களும் ஆக்கச் சொற்கள். விகுதிகள் சேர்ந்தன.

## வேற்றுமைகள்:

எல்லாப் பெயர்ச் சொற்களும் தனித்து நிற்கும் நிலையை விட்டு மற்றச் சொற்களுடன் சேர்ந்து சொற்றொடர்களாகவும் வாக்கியங்களாகவும் அமையும்போது தங்களுடன் சேர்ந்து வரும் வினைச் சொற்களுக்கும் மற்ற பெயர்ச் சொற்களுக்கும் தங்களுக்கும் உள்ள உறவு நிலைகளுக்கேற்ப தங்கள் வடிவத்தில் சிறிது வேறுபாடு கொள்கின்றன. இத்த வேறுபட்ட உறவு நிலைகளையும், வேறுபட்ட வடிவங்களையும்தான் வேற்றுமை என்று அழைக்கிறோம். சொற்களின் உருவவேறுபாடுகளை உண்டாக்கும் கூட்டு எழுத்துக்களை (சொற்களை) வேற்றுமை உருபுகள் என்று கூறுகிறோம். மற்றச் சொற்களுடன் அமைந்த உறவு எத்தகையது என்பதை விளக்குவது 'வேற்றுமையின் பொருள்' என்று கூறப்படுகிறது. பவணந்தி முனிவர் வேற்றுமைகளுக்குரிய பொருள்கள் என்று மொத்தம் 24 பொருள்கள் காட்டுகிறார். அவற்றை எட்டுப் பிரிவுகளாகப்

பிரித்து சில பிரிவுகளில் ஒரு பொருளை மட்டும் வைத்தும், சில பிரிவுகளில் மூன்று, நான்கு, ஆறு, ஏழு பிரிவுகளை வைத்தும் ஒரு வரையறை செய்திருக்கிறார். அந்தப் பொருள் களாவன 1) முதல் வேற்றுமைக்கு வினை, பெயர், வினாக் கொள்ளல் (சாதாரணமாக எழுவாய் என்று கூறுகிறோம்) 2) இரண்டாம் வேற்றுமை. ஆக்கல் அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடமை 3) மூன்றும் வேற்றுமை கருவி கர்த்தா, உடனிகழ்ச்சி, 4) நான்காம் வேற்றுமை, கொடை, பகை, நேர்ச்சி, தகவு, அதுவாதல், பொருட்டு, முறை 5) ஐந்தாம் வேற்றுமை. நீங்கல் ஒப்பு, எல்லை,ஏது 6) ஆறும் வேற்றுமை — உடமை 7) ஏழாம் வேற்றுமை — இடம், 8, எட்டாம் வேற்றுமை — விளி.

இவ்வாறு வேற்றுமையின் பொருள்கள் என்று கூறப்படு வனவெல்லாம் அந்த உருபு ஏற்ற பெயர்ச் சொல் காட்டும் பொருள்கள் அல்ல. சில பொருள்கள் பெயர்ச் சொல்லின் பொருள்களாகவும் பல பொருள்கள் அதனுடன் சேரும் வினைச் சொல்லின் (வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம்) பொருள்களாகவும், சில வேறு பயனிலைகளில் பொருள்களாக வும், சில பெயரால் சுட்டப்படும் வேறு பெயர்களின் பொருள் களாகவும் அமைந்துள்ளன.

உதாரணங்கள் — பெயர்ச் சொல்லின் பொருள்களே வேற்றுமைக்கு பொருளாக அமைந்தன. இராமன் வந்தான், இராமன் இவன், இராமன் யார். வினை, பெயர், வினை ஆகிய வற்றை இராமன் என்னும் பெயரே ஏற்கிறது. 'கத்தியால் வெட்டினான்' பெயர் சொல்லே கருவிப் பொருளைத் தருகிறது. 'தந்தையொடு மகன் வந்தான், தந்தை வந்தான், மகனும் வந்தான். இதில் உடனிகழ்ச்சி 'மகன் வந்தான்'. இந்த உட னிகழ்ச்சிப் பொருள் 'தந்தையொடு' என்ற உருபு ஏற்ற பொருளில் அல்லாமல் அதனுடன் சேர்ந்த பெயரிலும், வினை யிலும் அமைந்துள்ளது. பாம்புக்கு கீரி பகை, இரமனுக்கு குகன் தோழன், தேவகிக்கு கண்ணன் மகன். இவற்றிலும் உருபு ஏற்ற பெயருடன் அமைந்த பெயரும், பெயர் பயனிலை

யும்தான் பகை, நேர்ச்சி, முறை' என்ற வேற்றுமைப் பொருளைத் தருகின்றன.

'கிணற்றை வெட்டினன், குடத்தை உடைத்தான், அழுக்கை அகற்றினன், வீட்டை அடைந்தான்' இவற்றில் எல்லாம் வினையின் பொருள்தான் ஆக்கல், அழித்தல், நீத்தல், அடைதல் என்று வேற்றுமைக்குப் பொருளாக அமைந்தன. 'இராமனது கை, கண்ணனது வீடு,' இவற்றில் உருபு ஏற்ற பெயர்ச் சொற்களின் கூட்டாக அமைந்த 'கை, வீடு' என்ற பெயர்கள்தான் உடைமைப் பொருள்கள்.

இவ்வாறு மாறுபட்ட அமைப்புகளைக்கொண்ட நிலைகளை யெல்லாம் மொத்தமாகத் தொகுத்து அவற்றை எட்டுப் பிரிவாகப் பிரித்திருப்பதில் எட்டுப் பிரிவுகளும், சமமான பிரிவுகள் அல்ல என்று பார்த்தோம். ஒரே தொகுதியில் சேர்க்கப்பட்டுள்ள பல நிலைகளுக்குள் தொடர்பு உள்ள நிலைகளும் உண்டு. சிறிதும் தொடர்பற்ற நிலைகளும் உண்டு. வேற்றுமை நிலைகளைக் காட்டுவதற்குதவும் வேற்றுமை உருபுகளும் ஒவ்வொரு வேற்றுமைக்கும் வெவ்வேறு அளவில் அமைந்துள்ளன. முதல் வேற்றுமைக்கு உருபு கிடையாது. தன்னுடைய இயல் உருவத்தில் விளங்குகிறது.

வேற்றுமை உருபுகள் எப்பொழும் ஒரே நிலையில் நின்று விடாமல் காலப் போக்கில் மாறி அமைந்து கொண்டே வருகின்றன· சில உருபுகள் மறைந்துவிடுகின்றன. சில உருபுகள் புதிதாகத் தோன்றுகின்றன புதிதாகத் தோன்றிய உருபுகளுள் சில பழைய உருபுகளுடன் இணைந்து நிற்கின்றன (இரண்டாம் வேற்றுமை 'ஐப்போல்', ஐந்தாம் வேற்றுமை இன்னின்று 'இல்லிருந்து') சில உருபுகள் பழைய உருபுகள் உதவியின்றி தனித்தே நிற்கின்றன. (மூன்றும் வேற்றுமை - உடன்) பழைய உருபுகளில்'இல்'உருபு ஐந்தாம் வேற்றுமைக்கும் ஏழாம் வேற்றுமைக்கும் பொதுவாக அமைந்துள்ளது. இவ்வாறு வேற்றுமை உருபுகள் மாறியும் பல வேற்றுமைகளை உணர்த்தியும் நிற்பதால் வேற்றுமை உருபுகளை மட்டும்

வைத்து ஒரு பெயர் எந்த வேற்றுமையில் உள்ளது என்று கூறினால் தவறு நேரிடலாம். எந்தப் பொருளில் நிற்கிறது என்று பார்த்தே வேற்றுமை கூறவேண்டும். தொல்காப்பியர் இக்கருத்தை அழுத்தமாக "யாதன் உருபின் கூறிற்றாயினும், பொருள் செல் மருங்கில் வேற்றுமை சாரும்" என்று கூறுகிறார்.

முதல் வேற்றுமைக்கு 'எழுவாய்' வேற்றுமை என்றும் எட்டாம் வேற்றுமைக்கு 'விளி' வேற்றுமை என்றும் தனிப் பெயர்கள் அமைந்துள்ளன. மற்ற ஆறு வேற்றுமைகளும் வரிசையில் தங்கள் எண்ணிக்கையின் பெயராலே குறிப்பிடப் படுகின்றன.

## முதல் வேற்றுமை:

இதற்கு உருபு கிடையாது. இயல் நிலையிலேயே இருந்து வாக்கிய அமைப்பில் ஒரு வினைச் சொல்லுக்கு, அல்லது பெயர் பயனிலைக்கு, அல்லது வினாவுக்கு எழுவாயாக வரும். 'அவன் இராமன்' என்று பெயர்ப் பயனிலையாகவும் வரும். வேறொரு எழுவாய்க்கு 'நேர் நிலைப்' பெயராக 'தம்பி பரதன் அரசேற்க மறுத்தான்'. 'குரு வசிஷ்டர் கூறினார்' என்றும் வரும். பொதுப் பெயரோடு சேர்ந்த சிறப்புப் பெயராக 'தென்னை மரம் காய்த்தது' 'மல்லிகைச் செடி பூத்தது' என்றும் வரும்.

## இரண்டாம் வேற்றுமை:

இதற்கு உருபு 'ஐ' இதற்குரிய பொருள் 28 என்று தொல் காப்பியர் விரித்துக் கூறுகிறார். பவணந்தி முனிவர் 'ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடமை' என்று ஆறு பொருள் கூறுகிறார். எல்லா உரையாசிரியர்களும் 'செயப்படு பொருள்' என்று ஒன்றாகச் சுருக்கிக் கூறுகிறார்கள். பல பொருள்கள் உள்ளபோது எல்லாப் பொருள்களுக்குமிடை யில் ஒரு பொது ஒற்றுமை இருந்தால் அவற்றை அப்பொது ஒற்றுமையால் ஒன்றாய் இணைத்துக் கூறுவது சிறப்புடைத்து. ஆனால் செயப்படுபொருள் என்ற சொற்றொடருக்கு உரிய நேர் பொருள்செய்யப்பட்டபொருள். இந்தப்பொருள் மட்டும்கொண் டால் ஆக்கலும், அழித்தலும்தான் இந்தத் தொகுதியில் அடங்கும். ஆகவே உரையாசிரியர்கள் இச் சொற்றொடருக்கு

சிறிது விரிபொருள் ஊட்டுகின்றனர் நச்சினார்க்கினியர் "ஒரு வினை முதல் செய்யும் தொழிலினை உறுவது செயப்படு பொருள்' என்றும், "வினை நிகழ்த்தப்படும் பொருளாய் கிடக்கின்ற தன்மை செயப்படு பொருள்" என்றும் இருவகையாகப் பொருள் கூறுகிறார். இவற்றில் இரண்டாவது விளக்கமும் முதல் விளக்கத்திலேயே அடங்கி நிற்கிறது. "பூமியைத் தோண்டினான், கடலைக் கடைந்தனர்" என்று கூறும்போது பூமியும், கடலும் வினை நிகழ்த்தப்படும் பொருளாக அமைந்தன என்று கூறலாம், வினைகளுக்கு உள்ள பொருள்கள், 'உற்றபொருள்கள்' என்றும் கூறலாம்.

ஒத்தலும், உடைத்திருத்தலும் — புலியை ஒக்கின்றான், பொன்னை உடையான் — இந்த உறு பொருளில் அடங்கும். ஒக்கின்ற வினைக்கு புலி உறுபொருள், உடைத்தாயிருக்கிற வினைக்கு பொன் உறுபொருள். அதேபோன்று அடைதலும், நீக்கலும் இப்பொருளில் அடங்கும். "மதுரையை அடைந்தான்; அழுக்கை அகற்றினான்" என்பதில் அடைந்த வினைக்கு மதுரை உறுபொருள், நீக்கிய வினைக்கு அழுக்கு உறுபொருள். 'ஆக்கல், அழித்தல்' இரு பொருள்களும் இந்த 'உறுபொருள்' விளக்கத்தில் நன்கு பொருந்தவில்லை. கோவிலைக் கட்டினான், வில்லை ஒடித்தான் என்பவற்றை செயப்படு பொருள் என்று கூறுவதே அதிக பொருத்தம் உள்ளதாக இருக்கிறது ஆகவே இரண்டாம் வேற்றுமைப் பொருளைத் தொகுத்து கூறும்போது செயப்படு பொருளும், செயலுக்கு உறு பொருளும் என்று கூறுவது பொருந்தும்.

இரண்டாம் வேற்றுமை உருபு பல இடங்களில் வேற்றுமைத் தொகையாக மறைந்து நிற்கும் தன்மை உள்ளது — (உ-ம்) சோறு சாப்பிட்டேன், தண்ணீர் குடித்தான், சம்பளம் கொடுத்தான். ஒரு பொருளைப் புதிதாகத் தோற்றுவிக்கும் போது அனேகமாக வேற்றுமைத் தொகையாகவே கூறுகிறோம் — உ-ம் கிணறு தோண்டினான், குளம் வெட்டினான், பானை செய்தான். இவற்றை வேற்றுமை விரியாக கிணற்றைத் தோண்டினான், குளத்தை வெட்டினான், பானையைச் செய்தான் என்று கூறுவதில்லை. அவ்வாறு கூறினால் ஏற்

கனவே இருந்த கிணற்றை மேலும் ஆழமாகத் தோண்டி ஞன் என்று பொருள்படும். கிணறு முன்பு இல்லாத இடத்தில் தோண்டும்போது கிணறு தோண்டிஞன் என்றுதான் கூற வேண்டும். பானையை உடைத்தான் என்று ஏற்கனவே இருந்த பானையை யாராவது உடைத்துவிட்டால் அவ்வாறு கூறலாம். ஆனுல் புதிதாக ஒரு பானையைச் செய்யும்போது பானை செய்தான் என்று தொகையாகக் கூறவேண்டும். பானையைச் செய்தான் என்று கூறிஞல் தவறில்லை. ஆனுல் அவ்வாறு கூறுவதில்லை.

பவணந்தி முனிவர் இரண்டாம் வேற்றுமைக்குக் கூறிய பொருள்கள் ஆறில் 'நீத்தல்' ஒரு பொருள், 'ஒத்தல்' ஒரு பொருள். ஐந்தாம் வேற்றுமைப் பொருள்களில் 'நீங்கல், ஒப்பு' என்று இரண்டு பொருள்கள் கூறப்படுகின்றன. இவ்வாறு இரண்டு வேற்றுமைகளில் ஒருவகைப்பட்ட பொருள்களைக் கூறியிருப்பதால் பலர் இங்கு இடர்ப்படுகின்றனர். உரையாசிரியர்கள் வேண்டிய உதாரணம் காட்டியுள்ளார்கள். ஆனுல் இரண்டு வேற்றுமை நிலைகளிலும் என்ன வித்தியாசம் உள்ளன என்று விளக்கவில்லை. ஐந்தாம் வேற்றுமையில் உள்ள நீங்கல் பொருளை நீக்கல் பொருள் என்றும் குறிப்பிடுகிருர்கள். இரண்டாம் வேற்றுமைக்குச் சொல்லப்பட்ட 'நீத்தல்' என்பது தொழில் பெயர். நீங்கலாகிய தன்வினைக்கும் நீக்கலாகிய பிறவினைக்கும் பொதுவாய் அமைந்த சொல். ஆனுல் இரண்டாம் வேற்றுமையில் சொல்லப்பட்ட பொருள் நீக்கல் என்ற பிறவினைப் பொருள் — (உ-ம்) அழுக்கை அகற்றிஞன், உமியை நீக்கிஞன். ஐந்தாம் வேற்றுமையில் கூறப்பட்ட பொருள் 'நீங்கல்' என்ற தன்வினைப் பொருள் — (உ-ம்) அழுக்கின் அகன்ருன், மதுரையின் நீங்கினேன். — 'உயிர் நீத்தான்' உன்பது உலக வழக்கு, இந்தப் பொதுச் சொல்லை இங்கு நீங்கிஞன் என்று கொள்ளுவதா, நீக்கிஞன் என்று பொருள் கொள்வதா. உயிரை நீக்கிஞன் என்று பொருள் கொள்ள முடியாது. (யாரும் உயிர் தேவையற்றது, நான் அதை நீக்குகிறேன் என்று நீக்குவதில்லை. உயிர் தாஞக நீங்கியது) அப்படியாஞல் உயிர் நீங்கிஞன் என்று கூறலாமா வென்ருல் அதுவும் பொருந்தவில்லை. நீங்கிஞன் என்று கூறும் போது உடம்பை இறந்தவஞக எண்ணி அவ்வாறு கூறு

கிறோம். ஆனால் உடம்பு உயிரைவிட்டு விலகி அப்பால் போக வில்லை அது இருந்த இடத்திலேயே இருக்கிறது. ஆகவே நீக்கினான் என்றும் கூறமுடியாது, நீங்கினான் என்றும் கூற முடியாது. அதனால்தான் நீத்தான் என்று பொதுச் சொல்லை உபயோகிக்கிறோம். உயிர் நீங்கியது என்று கூறுவதுதான் சரி.

ஒப்புப் பொருள். இரண்டு பொருள்களை அவற்றின் ஆற்ற லுக்கோ, பண்புக்கோ, தோற்றத்துக்கோ ஒப்பிடும்போது எப்பொழுதும் மூன்று நிலைகள் தோன்றும். முதல் பொருள் அடுத்த பொருளைவிட 1) பெரிய நிலையில் இருக்கும் 2) சம நிலையில் இருக்கும் 3) சிறிய நிலையில் இருக்கும். இவற்றில் முதல் நிலையையும் மூன்றும் நிலையையும் 'ஏற்றத் தாழ்ச்சி' என்று ஒன்றாய் இணைத்து, ஒன்றைவிட ஒன்று 'ஏற்றத் தாழ்ச்சி' எவ்வாறு உள்ளது என்று பார்ப்பதை 'உறழ்ந்து பார்த்தல்' என்று கூறுகிறோம். சமநிலையாக உள்ளபோது ஒன்றுக்கொன்று உவமைப் பொருளாக அமைகின்றன. உவமைப் பொருள் இரண்டாம் வேற்றுமை — தாயைஒத்த அன்புடையான், உறழ் பொருள் ஐந்தாம் வேற்றுமை — தாயின் சிறந்த தயை உடையான். இவற்றில் சிறிது மயக்கம் ஏற்படுவதால் பின்னால் 'போல்', 'விட' என்று சொல்லுருபுகள் தோன்றி, தாயைப்போல் அன்புடையான் என்றும் தாயை விட தயை உடையான் என்றும் ஆட்சி தோன்றியுள்ளன.

## மூன்றும் வேற்றுமை :

பழைய உருபுகள் ஆல், ஆன், ஒடு, ஓடு இவற்றில் 'ஆன்' அநேகமாக மறைந்து விட்டது. ஆல், ஆன், இவற் றுக்குப் பதிலாக 'கொண்டு' என்ற உருபும் தோன்றி உள்ளது — (உ-ம்) 'வாளால் வெட்டினான்', 'வாள் கொண்டு வெட்டி னான்' 'ஒடு, ஓடு' என்பவற்றுக்குப்பதில் 'உடன்' என்ற உருபும் தோன்றியுள்ளது — (உ-ம்) 'இராமனோடு சென்றான்' 'இராமனுடன் சென்றான்'.

இவ்வேற்றுமைக்குரிய பொருள் 'கருவி, கர்த்தா, உடன் நிகழ்ச்சி, கருவிப் பொருள், கர்த்தாப் பொருள் குறிக்க 'ஆல்'

உருபு, உடனிகழ்ச்சியைக் குறிக்க 'ஒடு' உருபு. கருவிப் பொருள்—கலப்பையால் உழுதான், மண்ணால் செய்யப்பட்ட பொம்மை, கர்த்தாப் பொருள்—அரசனால் கட்டப்பட்ட கோவில், குயவனால் செய்யப்பட்ட பானை. கருவிப் பொருளில் வரும்பொழுது செய்வினையுடனும் செயப்பாட்டு வினையுடனும் வரும். கர்த்தாப் பொருளில் வரும்போது செயப்பாட்டு வினை யுடன் மட்டும் வரும்.

உடனிகழ்ச்சி என்பது வினைமுதல் வேறொருவன் செய்கின்ற காரியத்தில் ஈடுபட்டாலும் வினைமுதல் செய்கின்ற காரியத்தில் மற்றொருவன் ஈடுபட்டாலும் உடனிகழ்ச்சிதான். இராமனோடு இலக்குவன் காடு சென்றான் என்பதில் வாக்கிய அமைப்பில் இலக்குவன் வினைமுதலாக உள்ளது. ஆனால் அமைந்துள்ள கருத்து இராமன்தான் காடு சென்றான். இலக்குவனும் கூடச் சென்றான். 'இராமன் இலக்குவனோடு காடு சென்றான்' இங்கும் அதே நிகழ்ச்சிதான். ஆனால் இங்கு இராமனே வினைமுதலும் ஆகிவிடுகிறான். இரண்டு அமைப்பும் உடனிகழ்ச்சிதான்.

"மலையொடு பொருத மால் யானை" இந்த நிகழ்ச்சியில் கூட்டு நிகழ்ச்சி கூறுவதற்கில்லை. மால் யானைதான் பொருதது மலை அதில் பங்கு கொள்ளவில்லை. உரையாசிரியர்கள் 'மலை'யை 'வேறு வினைக் கிளவி' என்ற தொல்காப்பியர் சூத்திரப் பொருளுடன் இணைத்துக் கூறுகிறார்கள், ஆனால் மலைக்கு வேறு வினை இருப்பதாக கூறுவதுவும் பொருந்தாது. மலை எந்த வினையிலும் ஈடுபடவில்லை. 'தலைவன் அன்போடு பேசினான்' "மாணவன் சிரத்தையோடு படித்தான்", "அண்ணன் திறமையோடு செய்கிறான்" முதலிய ஆட்சி பழைய இலக்கியத்தில் இல்லை என்று கூறுகிறார்கள். ஆனால் இன்றைய இலக்கியத்தில் பெருவழக்காக உள்ளன. இவற்றி லும் உடனிகழ்ச்சி இல்லை. ஆனால் இந்த அமைப்புக்களில் எல்லாம் மலை, அன்பு, சிறத்தை, திறமை முதலியன நிகழ்ச் சிக்கு கூட்டுப் பொருளாக நிற்கின்றன. 'நிகழ்ச்சிக் கூட்டு' என்று கூறினால் பொருந்தும். 'நின்னொடும் ஐவர் ஆனோம்' என்பதும் 'உடனிகழ்ச்சி' என்று கூறுவதைவிட நிகழ்ச்சிக் கூட்டு என்று கூறுவது பொருத்தமாக உள்ளது.

'ஒடு, ஓடு' என்பதற்குப் பதிலாக 'உடன்' என்ற சொல்லுருபு அமைந்ததுபோன்று 'ஆக' என்ற சொல்லுருபும் சில இடங்களில் வருகிறது. 'அன்பாகப் பேசினுன்' 'சிரத்தையாகப் படித்தான்'. 'திறமையாகச் செய்தான்'.

'ஆக' என்ற உருபு நான்காம் வேற்றுமையில் 'பொருட்டு'ப் பொருளிலும் 'கு' உடன் இணைந்து வரும். அவனுக்காகச் செய்தேன் சில இடங்களில் அசையாகவும் வருகிறது—(உ–ம்) தானுகச் செய்தான். 'ஒடு, ஓடு' என்னும் சொற்கள் எண் இடைச் சொல்லாகவும் வரும் என்று பவணந்தி முனிவர் கூறுகிருர். நிலனேடு, நீரோடு, தீயோடு, காற்ருேடு, அளவறு ஆகாயமோடாகிய பூதம்', 'இன்ருெடு பதிமூன்ருண்டுகள் கழிந்தன'

## நான்காம் வேற்றுமை :

உருபு 'கு'. பொருள் 'கொடை, பகை, நேர்ச்சி, தகவு, அதுவாதல், பொருட்டு, முறை' என்பன. இரண்டாம் வேற்றுமையைப்போல ஒரே உருபு பல பொருள்களைத் தருகிறது. ஆனல் இரண்டாம் வேற்றுமைப் பொருள்களையெல்லாம் ஒன்று சேர்த்து, 'செயப்படு பொருள்' என்று கூற முடிந்தது நான்காம் வேற்றுமைப் பொருள்கள் எல்லாவற்றையும் ஒன்று சேர்க்க முடியாவிட்டாலும் சில பொருள்களை ஒன்று சேர்த்துக் கூறமுடியும். 'பகையும், நேர்ச்சியும்' ஒருவகை முறைகளே இவற்றை இறுதியிலுள்ள முறையுடன் சேர்த்துவிடலாம்.

கொடைப் பொருள் என்பது கொடையின் பயனை அனுபவிப்பவர் என்ற பொருளில் வருகிறது — மாணுக்கனுக்குப் பரிசு கொடுக்கப்பட்டது. (கிடைத்தது) (கொடுத்தனர்). ஒரு பொருளைப் பெறுவதைக் கொடை என்று கூறுவதுபோல ஒரு பொருள் தேவைப்படுவதும், ஒரு பொருளை விரும்புவதையும் கொடை என்ற விரிந்த பொருளாகக் கூறலாம். அவ்வாறு கூறினல்தான் 'சமையலுக்குப் பாத்திரம் (அடுப்பு, நெருப்பு, தண்ணீர், அரிசி) தேவை', 'குழந்தைக்குப் பால் தேவை', முதலிய அமைப்புக்களை நான்காம் வேற்றுமையாகக்கொள்ள

முடியும் இந்த ஆட்சிகளிலெல்லாம் சம்பந்தப்பட்ட வினை கொடுக்கப்பட்டது. தேவைப்படுகிறது என்று செயப்பாட்டு வினையாக உள்ளன அல்லது 'கிடைத்தது, உள்ளன' என்று வினை முதலின் முயற்சி இல்லாத வினைகளாக உள்ளன. ஆகவேதான் கொடைப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

பகை, நேர்ச்சி, முறை என்ற மூன்றும் ஒரே வகைப் பட்டன. மூன்றும் ஒரு வகையான முறை என்று சொல்லுவது பொருந்தும் என்று கூறினேன். பாம்புக்கு கீரி பகை, இராம னுக்கு குகன் நண்பன், யசோதைக்கு கண்ணன் மகன் என்ற மூன்றையும் முறை அல்லது உறவு என்று கூறலாம். அதேபோன்று 'சுமந்தரன் மந்திரி பதவிக்கு தகுந்தவன்', 'கைக்கு உரியது காப்பு', 'மங்கலத்துக்குரியது மஞ்சள்', 'வளையலுக்குப் பொன்' என்ற 'தகவு, அதுவாதல்' என்ற இரண்டு பொருள்களையும் 'உறவு, முறை' என்ற பொருளி லேயே அடக்கிக்கொள்ளலாம். உரிமைப் பொருளையும் உற வாகவே கொள்ளலாம்.

'பொருட்டு' மற்றவைகளுடன் சேராமல் தனித்தே நிற் கிறது 'கூலிக்கு வேலைசெய்தான். தாகத்துக்கு தண்ணீர் கொடுத்தான். படிப்புக்கு பணம் தேவை' முதலிய சொற் றொடர்கள் பல இடங்களில் ஆக என்ற உருபையும் சேர்த்து 'கூலிக்காக உழைத்தான்' 'படிப்புக்காகப் பணம் கேட்டான்' என்றும் வருகிறது

நன்னூலில் கொடுக்கப்பட்ட ஏழு பொருள்களுடன் இடப் பொருள், காலப் பொருள், இரண்டையும் சேர்க்க வேண்டும். 'மதுரைக்குப் போனான்' வீட்டுக்குப் போகிறேன்' முதலியன வும், 'நாளைக்கு வருவான், காலை எட்டு மணிக்கு ஆரம்பம்' முதலிய அமைப்புகளும் வேறு பொருள்களில் அடங்கா. ~~ஏழாம்~~ 'இடப்' பொருளில் வரும்போது 'மதுரைக்குப் போகிறேன்', கோவிலுக்குப் போகவேண்டும்' என்று 'அடைதல்' வினை யுடன் சேர்ந்தே வருகிறது.

இரு சொல் அடுக்காக மொழியும் போது நான்காம் வேற்றுமையில் கூறுகிறோம். — யாரே அழகுக்கு அழகு

செய்யவல்லார், பதிலுக்குப் பதில் செய்தான், இடத்துக்கிடம் மாற்றம் உண்டு, காலத்துக்குக் காலம் மாறுகிறது.

## ஐந்தாம் வேற்றுமை :

பழைய உருபுகள் 'இல், இன்' இப்பொழுது இல் உடன் 'இருந்து' சேர்ந்து 'இலிருந்து' என்றும் 'இன்' உடன் 'நின்று' சேர்ந்து 'இனின்று' என்றும் உருபுமேல் உருபாக வருகின்றன. பொருள் 'நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது.' இரண்டாம் வேற்றுமைக்கு விளக்கம் கூறும்போது இந்த வேற்றுமைக்குரிய 'நீங்கல், ஒப்பு' இரண்டு பொருள்களுக்கும் விளக்கம் கிடைத்துவிட்டது. எல்லை என்பது தெரியாத ஒரு இடத்தை தெரிந்துகொள்ள ஒரு தெரிந்த இடத்தைக் காட்டுவது. திசையைக் குறிக்கவும், தூரத்தைக் குறிக்கவும், பயன்படும் — பள்ளிக்கூடம் ஊரின் மேற்கே இருக்கிறது. இந்த இடத்திலிருந்து ஒரு மைல் தூரத்தில் உள்ளது. ஏதுப் பொருள் என்பது ஒரு நிகழ்ச்சிக்குக் காரணமாய் இருப்பது காரணம், ஏது, கருவி, இம் மூன்றும் ஒரே பொருள் குறிக்கும். இவற்றுள் கருவிப் பொருள் மூன்றும் வேற்றுமையாகக் கொள்ளப்பட்டது ஆகவே இந்த ஏதுப் பொருள் மூன்றும் வேற்றுமைக்குரியது என்று சந்தேகப்படக்கூடிய நிலைமையில் இருக்கிறது 'உழைப்பின் உயர்ந்தான்' (உழைப்பு காரணமாக உயர்நிலைக்கு வந்தான்) என்று கூறுவதற்கும் 'உழைப்பால் உயர்ந்தான்' என்று மூன்றும் வேற்றுமையாகக் கூறுவதற்கும் அதிக வித்தியாசமில்லை. 'உயர்நிலை அடைவதைக் குறிக்கோளாகக்கொண்டு உழைத்தால் 'உழைப்பைக்' கருவி என்று கூறுகிறோம். 'உழைப்பு' ஒரு தன்மையாக அமைந்த காரணத்தால் உயர் நிலைக்குப் போவதை 'ஏது' என்று கூறுகிறோம் ஆனால் அதிக வித்தியாசம் இல்லை ஆகவேதான் சங்கர நமச்சிவாயப் புலவர் 'ஏதுப் பொருள் மூன்றும் வேற்றுமைக்கன்றி இதற்கு அத்துணைச் சிறப்பின்மையின் பின் கூறப்பட்டது என்று கூறுகிறார்.

அதிக வேறுபாடு இல்லாத ஏதுப் பொருளையும் மூன்றும் வேற்றுமையுடனேயே இணைத்து 'இல் உருபையும் மூன்றும்

வேற்றுமைக்கும் உரியது என்று கொண்டால் உழைப்பால் உயர்ந்தவன், உழைப்பில் உயர்ந்தவன் இரண்டையும் மூன்ரும் வேற்றுமை என்று கூறிவிடுவது எளிதாக இருக்கும். ‘இல்’ உருபு ஐந்தாம் வேற்றுமைக்கு மட்டும் உரியதன்று, ஏழாம் வேற்றுமைக்கும் உரியது. மூன்ரும் வேற்றுமைக்கும் உரியது என்று கொள்ளலாம் என்று தோன்றுகிறது

‘கல்வியில் பெரியவன் கம்பன்’ என்ற அமைப்பைச் சில உரையாசிரியர்கள் ஐந்தாம் வேற்றுமைக்கு எடுத்துக்காட்டாகக் கூறுகிருர்கள். இந்த வாக்கியத்துக்குப் பொருள் ‘கல்வித் துறையில் கம்பனுடைய இடம் உயர்ந்தது’ என்பது தான். கல்வியினுல் கம்பன் முன்னுக்கு வந்தான் என்று கூறுவது சிறப்புடைய கூற்று அன்று. வீட்டிற் பெரியவர் தந்தை என்பதற்கு சமமாகக் கொண்டு ஏழாம் வேற்றுமை யாகக் கொள்ளவேண்டும். ‘இல், இன்’ என்ற இரண்டு உருபு களில் ‘இன்’ உருபு மற்ற வேற்றுமைளுடன் எளிதாகக் கலந்து விடுகிறது நாம் ஏற்கனவே பார்த்தபடி ‘உழைப்பின் உயர்ந்தான்’ என்னும் சொற்ருெடர் ‘உழைப்பினுல் உயர்ந்தான்’ என்று மூன்ரும் வேற்றுமையாக ‘ஆல்’ உருபையும் சேர்த்துக் கொண்டு விரிகிறது. ‘மாவின் கனி, பசுவின் கன்று’ என்று கூறுவதை ‘மாவினுடைய கனி, பசுவினது கன்று’ என்று ஆரும் வேற்றுமை உருபுகளையும் சேர்த்து விரித்துக்கொள்ள முடிகிறது.

## ஆரும் வேற்றுமை:

பழைய உருபுகள் ‘அது, ஆது’ ஒருமைக்கும், ‘அ’ பன்மைக்கும் இவற்றுள் ‘ஆது’ வழக்கொழிந்துவிட்டது. ‘உடைய’ என்னும் சொல்லுருபுதான் தற்போது பெரும்பான்மை ஆட்சியில் உள்ளது. இதன் பொருள் ‘உடைமை’ ஒருவனுக்கு அல்லது ஒன்றுக்கு உரிய பொருள் என்பதைக் காட்டுகிறது. இந்த வேற்றுமை ஏற்கும் பெயர் வினைச் சொல்லுடன் சம்பந்தப்படாமல் உடைமையாக உள்ள பொருளைக் குறிக்கும் பெயருடன் மட்டும் கூடி நிற்கும். ‘கூடிநிற்கும் உடைமைப் பொருள் எல்லா வேற்றுமைகளிலும் வரும். உடைமைப் பொருள் என்று பொருளைச்சார்ந்த சினைப்பொருள்

களையும் (எனது கை, எனது கால்) தன்னால் மற்றவர்களுக்கு விலையாகவோ, தானமாகவோ கொடுக்கக்கூடிய இதர பொருள்களையும் (அவனுடைய வீடு, பசு) மட்டும் குறிப்பிடுவது பழைய வழக்கு. முறைப் பொருளைக் குறிப்பிட அவனுக்கு மகன், கண்ணனுக்கு மாமன் என்று நான்காம் வேற்றுமையையே பயன் படுத்தியதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இப்பொழுது என்னுடைய மகன், அவனுடைய மனைவி என்று உடைமைப் பொருளாகவே கூறுகிறோம். 'பசுவின் கன்று' 'பசுவின் பால்' என்று கூறுவதில் 'பால்' பசுவுக்கு எவ்வளவு உடைமைப் பொருளோ அவ்வளவு உடைமை கன்றிடத்தும் உண்டு என்றுதான் தோன்றுகிறது. தொல்காப்பியர் 'முறைப் பொருளை ஆறும் வேற்றுமைப் பொருளாகவே கூறுகிறார்.

முறை நான்காம்வேற்றுமை, உடைமை ஆறும்வேற்றுமை, சொந்தம் எந்த வேற்றுமை? இவர் எனக்கு சொந்தம் என்று ஒரு மனிதரைக் கூறினால் அவர் ஏதோ முறையினர் என்று பொருள் படுகிறது. இந்த வீடு எனக்குச் சொந்தம் என்று ஒரு பொருளைக் கூறினால் உடைமையைக் குறிக்கிறது. இதே பொருளை இவர் என்னுடைய தந்தை என்றும் இது என்னுடைய வீடு' என்றும் மாற்றிக் கூறமுடிகிறது. ஆகவே முறைக்கும் உடைமைக்கும் நெருங்கிய உறவு இருக்கிறது.

முறையாகக் கூறுவதைவிட உடைமையாகக் கூறுவதில் தான் நெருக்கம் உண்டாகிறது. ஒருவன் தன் நண்பனிடம் 'நேற்று எனக்கு ஒரு மகன் பிறந்தான்' என்று நான்காம் வேற்றுமையாக முறையை வெளிப்படுத்திக் கூறுகிறான். பின்னால் மகனைப்பற்றி பேசும் பொழுதெல்லாம் 'என்னுடைய மகனுக்கு இன்று பெயரிடுகிறோம்,' 'என்னுடைய மகன் இப்பொழுது பள்ளிக்கூடம் போகிறான்' என்று ஆறும் வேற்றுமை உடைமைப் பொருள் ஆக்கிவிடுகிறான். நண்பனுக்கு இதுவரை கலியாணம் ஆகவில்லை, ஒரு நாள் வந்து 'அடுத்த மாதம் எனக்கு ஒரு மனைவி வரப்போகிறாள்' என்று நான்காம் வேற்றுமை உபயோகித்து முறையை ஏற்படுத்திக் கொள்ளுகிறான். பின்னால் ஒரு பொழுதும் 'எனக்கு மனைவி என்னுடன் ஊருக்கு வருவாள்' என்று கூறமாட்டான். எப்பொழுதும் ஆறும் வேற்றுமையாக 'என்னுடைய மனைவி' என்றே கூறுவான்.

நான்காம் வேற்றுமை உடைமைப்பொருள் அனேக இடங்களில் வேற்றுமைத் தொகையாக வரும். 'என் மகன் பள்ளிக்கூடம் போனுன்' என்று கூறினுல் 'என்னுடைய மகன் பள்ளிக்கூடம் போனுன்' என்றுதான் விரிக்கலாமே ஒழிய 'எனக்கு மகன் பள்ளிக்கூடம் போனுன்' என்று விரிக்க முடியாது. நான்காம் வேற்றுமை இதுபோன்று வேற்றுமைத் தொகையாக வருவதில்லை. 'எனக்கு ஒரு வீடு வாங்கினேன் 'என்பதை' 'என் வீடு வாங்கினேன்' என்று கூறமுடிவதில்லை ஆகவே 'சாத்தன் மைந்தன்' என்ற உரையாசிரியர்கள் காட்டும் வேற்றுமைத் தொகையை ஆறும் வேற்றுமையாகத்தான் விரிக்க வேண்டும்.

## ஏழாம் வேற்றுமை:

இந்த வேற்றுமைக்கு மொத்தம் 28 உருபுகள் கூறப்பட்டுள்ளன. ஆனுல் அதிகமாக நடைமுறையில் உள்ளது 'இல்'. மற்றும் 'முன், பின், மேல், கீழ், உள், முதல், இடம்' முதலியனவும் வழக்கில் உள்ளன. இதன் பொருளை இடப்பொருள் என்று சுருக்கிக் கூறுகிறோம். ஆனுல் எல்லா வகைப் பொருள்களிலும் குணங்களிலும் அமைந்த நிலைகளையும் குறிப்பிடுகின்றது. "வீட்டில் இருக்கிருன், காலையில் வந்தான், கோபத்தில் பேசினுன்" என்று இடத்தோடும், காலத்தோடும், குணத்தோடும் சேர்ந்து வருகிறது. இடம் விரிந்த ஒரு பொருள் அதில் வீடு ஒரு குறிப்பிட்ட நிலை, காலை என்பது காலத்தில் ஒரு குறிப்பிட்ட நிலை. கோபம் குணத்தில் ஒரு நிலை. ஆகவே ஏழாம் வேற்றுமைக்கு நிலைப் பொருள் என்று கூறினுல் இவை எல்லாம் இலகுவாக அதில் அடங்கும்.

## எட்டாம் வேற்றுமை:

இதை விளி வேற்றுமை என்றும் கூறுகிறோம். இதற்குத் தனி உருபு கிடையாது. இறுதி உயிர்மெய்யில் உள்ள உயிர் இரட்டிக்கும் ஒற்றில் முடிந்தால் ஒற்று மறைந்து ஈற்றயல் எழுத்தின் உயிர் இரட்டிக்கும். ஒற்றுடன் 'ஏ' சேரும், ஒற்று இரட்டித்து 'ஏ' சேரும். பெயருக்கு முன்னுல் 'ஏ, ஓ' என்ற விளிச் சொற்கள் சில இடங்களில் சேர்ந்து வரும். 'ஓ' பின்

ஞல் உருபுபோல் இணைந்தும் 'அண்ணவோ' என்று வரும். ஒருவனை அல்லது ஒரு பொருளை விளிப்பது இதன் பொருள், தன்மை முன்னிலைப் பெயர்களுக்கும், சுட்டுப் பெயர்களுக்கும், வினாப் பெயர்களுக்கும் விளிவேற்றுமை கிடையாது.

வேற்றுமை உருபை மட்டும் துணைகொண்டு குறிப்பிட்ட நிலை எந்த வேற்றுமை என்று நிச்சயித்தல் கூடாது பொருளைக் கொண்டே நிச்சயிக்கவேண்டும். என்று எல்லோரும் ஒப்புக் கொள்ளுகிரும். ஆனல் வேற்றுமைப் பொருள்களை நன்ருக ஐயம் திரிபுக்கு இடமின்றித் தெளிவாக வரையறை செய்யப் படவில்லை. இந்தநிலையில் சில முக்கிய வேற்றுமை உருபுகளைத் துணைகொண்டு அவற்றை எது, யார், என்ற வினாச் சுட்டுக் களுடன் இணைத்துச் சில வினாக்களை உண்டாக்கி அவ்வினாக் களின் மூலம் வேற்றுமைகளை தவறின்றிக் கூற முடியுமானல் அவ்வழியைப் பின்பற்றலாம் என்று தோன்றுகிறது.

1) இரண்டாம் வேற்றுமை—வேற்றுமைப் பெயருடன் கூடிய வினைச் சொல்லை 'எதை, யாரை', என்று வினவுதல்.

2) மூன்ரும் வேற்றுமை — யாரால், எதனல், யாரொடு, எதனொடு.

3) நான்காம் வேற்றுமை — எங்கு, என்றைக்கு, எத்தனை மணிக்கு, யாருக்கு, எதற்கு.

4) ஐந்தாம் வேற்றுமை — எதிலிருந்து, யாரிலிருந்து, எதுவரை, யாரைவிட, எதைவிட.

5) ஆரும் வேற்றுமை — கூடவரும் பெயர் சொல்லை வினவுதல் — யாருடைய, எதனுடைய,

6) ஏழாம் வேற்றுமை — எவ்விடத்தில், யாரிடத்தில், எக்காலத்தில், எக்குணத்தில்.

உருபைக் கொண்டு வேற்றுமையை விளக்கும் முறையை தொல்காப்பியர் மிகுதியும் கையாளுகிருர். ''அதனேடியைந்த,

அதற்குப்படுபொருள், இதனில் இற்றிது" என்று வேற்றுமை உருபை சுட்டுப் பெயர்களுடன் இணைத்துப் பொருள் விளக்கு கிறார். பள்ளியாசிரியர்கள் எல்லோரும் இந்த முறையை இரண்டாம் வேற்றுமை செயப்படுபொருள் காண்பதற்கு மட்டும் எடுத்துக் கூறுகிறார்கள். எல்லா வேற்றுமைகளுக்கும் பயன்படுத்தலாம்.

## ஆக்கப் பெயர்கள் :

ஆக்கப் பெயர் என்ற பெயரை மரபுப் பெயர் ஆக்கப் பெயர் என்ற இரண்டு மாறுபட்ட நிலைகளில் ஒன்றை உணர்த் தும் பெயராக முன்பு பார்த்தோம். இங்கு அந்தப் பொருளி லன்றி ஒரு வகைப்பட்ட சொற்களிலிருந்து வேறுவகைப்பட்ட பெயர்கள் உண்டாக்கப்படுவதைக் குறிக்கிறது.

'பொருள் இடம், காலம்,' என்று பிரிக்கப்பட்டுள்ள பிரிவுகளில் பொருள் பெயர் ஏனைய எல்லாப் பெயர்களையும் விட முக்கிய நிலைமை கொண்டது. பொருள் பெயர்களில் பெரும் பகுதி இயற் பெயராக அமைந்தன. அடுத்த ஒரு பெரும் பகுதி ஆக்கச் சொற்களாக அமைந்துள்ளன. ஆக்கம் என்பது இக்காலத்தில் ஆக்கப்பட்டது என்றும்கருத்தில் அல்ல. இவை கள் எல்லாம் மிகப் பழமையான சொற்களே ஆனால் ஏனைய வகைப் பெயர்களுடனும் வேறு சொற்களுடனும் சில விகுதி களைச் சேர்த்து, அந்த குணங்களைக் கொண்ட மனிதர்களையோ பொருள்களையோ காட்டுவதற்காக ஆக்கப்பட்ட சொற்கள். மதுரை என்ற (ஊர்) இடப் பெயருடன் 'ஆன்' என்ற விகுதி சேர்த்து மதுரையான் என்றும் ஆதிரை என்ற காலப் பெய ருடன் சேர்த்து ஆதிரையான் என்றும் ஆக்கப்படுகின்றன.

இவ்வாறு விகுதிகள் சேர்த்து மூன்று வகையான பெயர் கள் உண்டாக்கப்படுகின்றன. உயர்திணையைச் சார்ந்த ஆண்பால் பெயர் (1), பெண்பால் பெயர் (2), அஃறிணையைச் சார்ந்த பொதுப்பால் பெயர் (3) ஆக மொத்தம் மூன்று வகைப் பெயர்களை உண்டாக்கியிருக்கிறோம். இவ்வாறு ஆக்கப் பெயர் கள் அமைப்பதற்காகச் சேர்க்கப்படும் விகுதிகள் — 'அன்' ஆண்பால், 'அள்', 'இ' பெண்பால், 'து' பொதுப்பால்.

ஏனைய பெயர்ச் சொற்களுடன் இந்த விகுதிகளை இணைப்பது போன்று அடைச் சொற்கள், வினைச் சொற்கள், வேர்ச் சொற்களுடனும் இணைத்து இதே பொருள் பெயர்களை அமைத்துள்ளோம். அவற்றுள் வேர்ச் சொற்களான சுட்டு சொற்களுடனும் வினுச் சொற்களுடனும் சேர்ந்து அமைந்த பெயர்கள் மிகவும் முக்கியம் வாய்ந்தன. அவற்றைச் சுட்டுப் பெயர், விஞப் பெயர் என்று அழைக்கிறோம். — அவன், அவள், அது இவன், இவள் இது, யாவன், யாவள், யாது, எவன், எவள், எது.

விகுதிகளின் உதவியால் வேறு வகைப் பெயர்களிலிருந்தும், வேறு வகை சொற்களிலிருந்தும் பொருள் பெயர்கள் அமைப்பதைப் போன்று, பெயர்ச் சொற்களின் இயல் நிலையாகிய ஒருமை நிலையிலிருந்து பன்மை நிலைப் பெயர்களாக மாற்றுவதற்கும் சில விகுதிகளின் துணைகொண்டே அமைத்துள்ளோம், ஆகவே பன்மைப் பெயர்கள் எல்லாம் ஆக்கப் பெயர்களே. உயர்திணைப் பன்மைப் பெயர்கள் அமைக்க 'அர், மார், கள்' என்ற மூன்று விகுதிகள் உதவுகின்றன (உ-ம்) பெண்பால் — நங்கை, நங்கையர், நங்கைமார், நங்கைகள், தாய்—தாயர், தாய்மார், தாய்கள், அழகி — அழகியர், அழகிகள், ஆண்பால்—தம்பி—தம்பியர், தம்பிமார், தம்பிகள், தந்தை — தந்தையர், தந்தைமார், தந்தைகள், பொதுப்பால் — குழந்தை — குழந்தைகள். ஆனல் பன்மை உண்டாக்குவதற்கு இயல் பெயர்களுடன்தான் இந்த விகுதிகளை நேரடியாக இணைக்க முடியும். ஏற்கனவே விகுதிகள் பெற்று ஆக்கப் பெயர்களாக அமைந்த சொற்களுடன் இந்த விகுதிகளை நேரடியாக இணைக்க முடியாது ஏற்கனவே பெற்றுள்ள ஆண்பால், பெண்பால், பொதுப்பால் விகுதிகளை எடுத்துவிட்டு இந்த விகுதிகளை இணைக்கவேண்டும்—'பெரியவன், பெரியவள்' என்று ஆண்பால், பெண்பால் பெயர்களில் அமைந்த 'அன், அள்' விகுதிகளை எடுத்துவிட்டுத்தான் 'அர்' விகுதியை சேர்க்கவேண்டும். 'பெரியவனர்', 'பெரியவளர்' என்று விகுதிமேல் விகுதியாகச் சேர்க்கமுடியாது. ஆகவே ஆக்கப் பெயர்களைப் பன்மை நிலைக்கு மாற்றினல் அந்தப் பெயர்களில் அமைந்த 'ஆண், பெண்' தன்மை மறைந்து விடுகின்றன. பொதுப்பால் பன்மையாக மட்டும் அமைந்து

நிற்கின்றன. இந்த முறைக்கும் ஒருபுறநடை உள்ளது. பெண் பால் ஆக்கப் பெயர் 'அள்' விகுதி சேராமல் 'இ' விகுதி சேர்ந்து அமைந்திருந்தால் விகுதிமேல் விகுதியாக 'அர்' விகுதி இணைந்துகொள்ளும். பெண்தன்மை மாருது நிற்கும்— கண்ணள், கண்ணி இரண்டும் அழகிய கண்களையுடைய பெண்ணைக் குறிக்கும் பெயர்கள். 'கண்ணள்', 'கண்ணர்' என்றுதான் மாறும். பெண்மை இழந்துவிடும். ஆனால் 'கண்ணி, குறத்தி' முதலிய 'இ' விகுதிப் பெயர்கள் தங்கள் பெண்மை மாருது கண்ணியர், குறத்தியர் என்று வரும். ஆண்பால் அன் விகுதி மாருமல், 'மார்' என்ற பன்மை விகுதி விகுதிமேல் விகுதியாகவும் கேரளத்தைச் சார்ந்த பகுதிகளில் வழங்குகின்றன. குறவன் — குறவன்மார்.

அஃறிணையில் இயல் பெயர்களுடன் 'கள்' விகுதியும், ஆக்கப் பெயர்களுடன் 'வை' விகுதியும், 'அ' விகுதியும் அமைந்துள்ளன. 'கள்' விகுதி சேர்க்கவேண்டிய இயற் பெயர்கள் விகுதி ஏற்காமலேயே பன்மை உணர்த்தி வருவதும் பெரும் வழக்காக அமைந்துள்ளன.

ஆகவே ஆக்கச் சொற்களின் ஒருமை பன்மை இரு நிலைகளையும் சேர்த்துப் பார்த்தால் 'அவன், அவள்' அவர், அது, அவை என்று ஐந்து வகைச் சொற்கள் உள்ளன இவற்றில் அது என்னும் சொல் உயர்திணை அஃறிணை இரு திணைகளுக்கும் பொதுவான ஒருமைச் சொல், ஆண் பெண், இரு பால்களும் பொதுவான சொல்லாகவும் உள்ளது (குழந்தை ஆணுக இருந்தாலும், பெண்ணுக இருந்தாலும் 'அது' என்றே அழைக்கிருேம்.) சுட்டுப் பெயர்களாக ஆக்கப்பட்ட பெயர்களில் பெண்பாலுக்கு 'இ' விகுதி சேர்ந்த 'அவி' என்ற சுட்டுப் பெயர் தோன்றவில்லை. 'அள்' விகுதி சேர்ந்த 'அவள்' என்ற பெயர் மட்டும் உண்டு. ஆனல் இதர ஆக்கப் பெயர்கள் இரு விகுதிகளும் பெற்றுவரும்.

'அன், அள்' விகுதிகள் சேர்த்து ஆக்கப்படும் பெயர்கள் பழங்காலத்திலேயே தோன்றியவை சமீப காலத்தில் 'ஆள்' என்ற பெயர்ச்சொல்லை விகுதியாக இணைத்து ஆண், பெண் குறிப்பிடாமல் பொதுப்பாலாக சொற்கள் அமைத்திருக்கிருேம்

— வேலையாள், பார்வையாள், செயலாள், பணியாள் முதலி யன. பன்மை குறிக்க விகுதிமேல் விகுதியாக 'அர்' 'கள்' சேர்ந்து — செயலாளர், செயலாட்கள், பணியாளர், பணி யாட்கள் என்று வரும். இவற்றிலும் தற்போது 'அர்' விகுதி மரியாதைப் பன்மையாக மாறி மேலும் பன்மை குறிக்க 'கள்' சேர்ந்து செயலாளர்கள் பொருளாளர்கள் என்றும் வருகின்றன.

பொருள் பெயர்களை ஆக்கச் சொற்களாக அமைப்பது போல், பண்புப் பெயர்களையும் 'மை' விகுதி சேர்த்து அமைக்கிறோம். 'சிறு' என்ற அடைச்சொல்லிலிருந்து 'சிறுமை' என்ற பண்புப் பெயர் தோன்றுகிறது. பல பெயர்கள், வேர்ச் சொற்களிலிருந்து பிறக்கின்றன. நல்—நன்மை, இன்—இனிமை, பொருள் பெயர்களிலிருந்து நீர்—நீர்மை, ஆண்—ஆண்மை என்றும், தன்மைப் பெயர்களிலிருந்து கறுப்பு — கறுமை, பச்சை—பசுமை என்றும் தோன்றுகின்றன. வினைப் பகுதி களுடன் 'தல்' விகுதி சேர்த்து பல தொழில் பெயர்களை உண் டாக்குகிறோம்—பார்த்தல், தோண்டுதல், கூடுதல், ஒளித்தல் முதலியன 'அல், இ, பு, வி, கை', விகுதிகள் சேர்த்து வற்றல் உதவி, நடப்பு, கல்வி, வாழ்க்கை என்ற பெயர்கள் பிறக் கின்றன.

### ஆக்கச் சொற்கள் :

ஏனைய சொற்களிலிருந்து பெயர்ச் சொற்கள் பிறப்பது போன்று பெயர்ச் சொற்களிலிருந்து குறிப்பாகப் பண்புப் பெயர்களிலிருந்து பல அடைச் சொற்கள் பிறக்கின்றன — அழகு — அழகிய, இருள் — இருண்ட, இருண்டு, அன்பு — அன்பான, அன்பாக முதலியன.

எண்ணுப் பெயர்களிலிருந்து இரு வகையான அடைச் சொற்கள் பிறக்கின்றன. இவற்றுள் முதல்வகை ஒரு தொகுதி யில் எத்தனை பொருள்கள் இருக்கின்றன என்று காட்டுவதற் கும் இரண்டாவது வகை குறிப்பிட்ட பொருள் ஒரு தொகுதி யில் எந்த இடத்தில் உள்ளது என்பதைக் காட்டுவதற்கும் உதவுகின்றன ஒன்று என்ற எண்ணைத் தவிர ஏனைய எல்லா

எண்களும் தங்கள் இயல் நிலையிலேயே இருந்து முதல் வகை அடையாகப் பணியாற்றுகின்றன—இரண்டு பசுக்கள் பத்துவீடுகள், ஐம்பது ஆடுகள் என்று கூறுகிறோம். ஒன்று முதல் எட்டு வரை உள்ள எட்டு எண்களும் வேறு வகையாக உருவம் மாறியும் இதே பணியைச் செய்கின்றன. இரண்டெழுத்துக்கு மேற்பட்ட எழுத்து உள்ள சொற்கள் முதல் இரண்டெழுத்துக்களைத் தவிரப் பிந்திய எழுத்துக்களை ஒழித்துவிட்டு, முதல் இரண்டு எழுத்துக்களும் சில மாற்றங்களையும் ஏற்று 'ஒரு தலை, இரு கண்கள், மும்மூர்த்தி, நால்வேதம், ஐந்தெழுத்து, அறு சமயம், எழு பிறப்பு, எண்திசை என்று வருகின்றன. இரண்டாவதுவகை அடைச்சொற்கள் உண்டாக்குவதற்கு எண்ணுப் பெயர்களுடன் 'ஆம்', 'ஆவது' என்ற விகுதிகளைச் சேர்க்கிறோம்—ஒன்றும் வகுப்பு, மூன்றும் புத்தகம், ஐந்தாவது மாணவன், ஏழாவது நாள் என்று வரும். ஒன்றும் என்ற சொல் அதிகமாக வழக்கில் இல்லை. 'முதல் என்ற சொல்லே பெரும்பாலும் ஆட்சியில் உள்ளது.

## ஆகுபெயர்:

ஆக்கப் பெயர்கள் என்பது மற்றவர்களால் ஆக்கப்பட்டது என்ற பொருளில் அமைந்துள்ளது. 'ஆக்கு' என்ற பிறவினைக்குரிய தன்வினை 'ஆகு'.பிறரால் ஆக்கப்படாமல்தானே தன் இயல் வடிவத்தில் நின்று தன்னுடன் சம்பந்தப்பட்ட பொருள்களை உணர்த்தும் நிலையை 'ஆகு' பெயர் என்று கூறுகிறோம்—'ஊர் மகிழ்ந்தது' என்று கூறும்போது 'ஊர்' என்ற பெயரே ஊர் மக்களைக் குறிக்கிறது. தெருவில் கத்தரிக்காய் விற்போனை 'ஏ கத்தரிக்காய்! இங்கே வா' என்று அவன் விற்கும் பொருள் பெயரால் அழைக்கிறோம். 'ஊர்' ஊர் மக்களுக்கும், 'கத்தரிக்காய்' அதை விற்பவனுக்கும் ஆகி வந்தன.

## பலவகைப் பெயர்கள், எல்லோரும் எல்லாம்:

ஒருவன், ஒன்று என்றும் ஒருமைப் பெயர்களுக்குப் பலர், பல என்ற பன்மைப் பெயர்கள் அமைந்துள்ளன ஆனால் ஒரு குறிப்பிட்டத் தொகுதியில் உள்ள அனைவரையும் அல்லது அனைத்தையும் ஒன்று விடாமல் கூறுவதற்கு இந்தப் பொதுப்

பன்மைச் சொற்கள் பயன்படா. அப்படிப்பட்ட நிலைமையில் உபயோகிப்பதற்கு உயர்திணைப் பெயராக எல்லோரும் என்றும், அஃறிணைப் பெயராக எல்லாம் என்றும், இரண்டு பெயர்கள் ஆக்கப் பெயர்களாக அமைந்துள்ளன. 'எல்லா' என்ற அடைச் சொல் 'அர்' விகுதியும், தொகுப்பு 'உம்' விகுதியும் சேர்ந்து 'எல்லோரும்'என்ற உயர்திணைப் பெயராகவும், 'அர்' விகுதி கொள்ளாமல் 'உம்' விகுதி மட்டும்கொண்டு 'எல்லாம்' என்ற அஃறிணைப் பெயராகவும் அமைந்துள்ளன— எங்கள் வகுப்பில் 30 மாணவர்கள் உள்ளனர். எல்லோரும் பரீட்சையில் தேறிவிட்டார்கள் என்று கூறலாம். அவ்வாறு 'எல்லோரும் தேறிவிட்டார்கள்' என்று கூறுவதைவிட 'அவர்கள் எல்லோரும்' என்று வேறு ஒரு பெயருடன் இணைத்துச் சொல்லுவதுதான் பெரும்பான்மை வழக்கு. கடையில் 10 பழங்கள் வாங்கினேன். அவைகள் எல்லாம் அழுகிவிட்டன. (எல்லாம் என்ற அஃறிணைப் பெயர் உயர்திணைக்கும் வருகிறது.) இவை பெயர்ச் சொற்களாக இருப்பதால் எல்லா வேற்றுமை உருபுகளும் ஏற்கும்—எல்லோரையும், எல்லோராலும், எல்லோருக்கும் என்று உயர்திணையிலும் அஃறிணைக்கு வேற்றுமை உருபுக்கு முன்னால் 'அற்று'ச் சாரியையும்கொண்டு எல்லாவற்றையும், எல்லாவற்றிலும், எல்லாவற்றுக்கும் என்றும் வரும்.

## ஒவ்வொருவன், ஒவ்வொன்று:

ஒரு தொகுதியிலுள்ள அனைவரையும் ஒன்றுவிடாமல் தனித் தனியாகக் கூறுவதற்கு 'ஒரு' என்ற அடைச் சொல்லை இரட்டித்து 'ஒவ்வொரு' என்ற அடைச்சொல் தோன்றியுள்ளது. அந்த அடைச் சொல்லிலிருந்து 'ஒவ்வொருவன்', 'ஒவ்வொன்று' என்ற ஆக்கப் பெயர்கள் அமைந்துள்ளன. மாணவர்கள் ஒவ்வொருவனும் ஆசிரியரை வந்து வணங்கினார்கள். பழங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சுவை உடையனவாக இருந்தன,

'எல்லா', 'ஒவ்வொரு' என்ற பெயர் அடைச் சொற்கள் பல பொருள்களை ஒன்று சேர்த்துக் கூறுவதால் இந்த இரண்டு சொற்களும் அடைச் சொற்களாக வரும் பொழுதும், ஆக்கப்

பெயர்களாக வரும் பொழுதும் 'உம்' என்ற தொகுப்பு விகுதியுடன் சேர்ந்தே வரும். (உ-ம்) எல்லா மாணவர்களும், மாணவர்கள் எல்லோரும்)

**தான், தாம் :**

இந்த இரண்டு பெயர்களும், தன்மை, முன்னிலையில் உள்ள நான், நாம், நீ, நீர் என்பதற்கிணையாக ஆண், பெண் பாலற்ற படர்க்கைப் பெயர்களாக முன்பு இருந்தன போலும். தொல்காப்பியர் 'தாமென் கிளவி பன்மைக் குரித்தே,' 'தானென் கிளவி ஒருமைக் குரித்தே' என்று கூறும்பொழுது இந்த நிலையைத்தான் குறிப்பிடுகிருர். இந்தச் சூத்திரத்துக்கு விளக்கம் கூறிய உரையாசிரியர்கள் 'தாம் வந்தார், தாம் வந்தன, தான் வந்தான், தான் வந்தாள், தான் வந்தது' என்று இருதிணை ஐம்பால் விணைகளுடன் வரும் படர்க்கைப் பெயராகவே காட்டியுள்ளனர். ஆனால் இந்த ஆட்சி இப்பொழுது இல்லை. இக்கால இலக்கியத்தில் இந்தச் சொற்களுக்கு மூன்று நிலைகள் இருக்கின்றன. 1) எதிரொலிப் பெயர் 2) அசைச் சொல் 3) அசைப் பெயர்.

எதிரொலிப் பெயராக வரும் பொழுது எல்லா வேற்றுமைகளிலும் வரும். எழுவாயாக வரும்போது 'ஏ' அசை ஏற்று வரும்.— அவன் தானே செய்தான். குகன் தன்னை அறிமுகப் படுத்தினன். தன்னல் உதவ முடியும், தன்னேடு தங்கவேண்டும், தனக்கு இராமன் நட்பு வேண்டும் என்று கூறினன் என்று எல்லா வேற்றுமை உருபுகளும் ஏற்று வரும். அசை நிலையாக வரும்பொழுது தேற்றப் பொருளில் வருகிறது. கூட வரும் பெயருக்கு அழுத்தம் கொடுக்கிறது. பெயர்ச் சொல் அல்லவாதலின் வேற்றுமை ஏற்காது. கூடவரும் பெயர்தான் வேற்றுமை ஏற்கும்— அவனைத்தான் பார்த்தேன். அவனேடு தான் போனேன், அவனுக்குத்தான் கொடுப்பேன் என்று வரும்.

மூன்ருவதாக அமைந்த அசைப் பெயர் அதிகமாக ஆட்சி கிடையாது. இந்த நிலையில் அசையாக நின்று இணைந்த பெயருக்கு அழுத்தம் கொடுப்பதுடன், இவைகளேவேற்றுமை

உருபையும் ஏற்றும் அழுத்தம் அதிகமாக் கொடுக்கின்றன. "ஒரு மகள் தன்னையுடையேன்" (பெரியாழ்வார்). "தந்தது உன் தன்னைக் கொண்டது என் தன்னை." (மாணிக்க வாசகர்) சாதாரண இலக்கியத்தில் இவைகள் "ஒரு மகளைத்தான் உடையேன்" என்றும் "தந்தது உன்னைத் தான் கொண்டது என்னைத்தான்" என்றும் வரவேண்டும். ஆனால் சிறந்த இலக்கிய கர்த்தாக்கள் இவைகளை அசைப் பெயர்களாகவே மாற்றியுள்ளனர்.

## இணைச் சுட்டு:

ஒரு கருத்துக்கு அழுத்தம் கொடுப்பதற்கு ஒரு வினைப் பெயரையும் அல்லது அடையையும், ஒரு சுட்டுப் பெயரையும் அல்லது அடையையும் சேர்த்து அமைத்துக் கூறினால் கூறப் பட்ட கருத்துக்கு அழுத்தம் கிடைக்கிறது. — "என்னுடைய வில்லை வளைக்கக் கூடிய ஆற்றல் உள்ள அரச குமாரனுக்கு என் மகளைக் கொடுப்பேன்", "என்னுடைய மனத்திலுள்ள கருத்தைச் செய்யுளில் அமைத்துத் தரும் புலவனுக்கு இந்தப் பொற்கிழி உரித்தாகுக" என்று சாதாரணமாகக் கூறவேண் டிய கருத்துக்களை "எந்த அரச குமாரன் என்னுடைய வில்லை வளைப்பானோ அந்த அரச குமாரனுக்கு என் மகளைக் கொடுப் பேன்" என்றும், "எந்தப் புலவன் என் மனக் கருத்தைச் செய்யுளில் அமைத்துத் தருவானோ அந்தப் புலவனுக்கு இந்தப் பொற்கிழி உரித்தாகுக" என்று 'எந்த ........ அந்த' என்ற அடைகளைக் கூட்டாக இணைப்பதால் கருத்துக்கள் வலிவடைகின்றன.

இந்த இணைச்சுட்டு ஆட்சி எல்லா இலக்கியங்களிலும் கையாளப்பட்டுள்ளன.

திருக்குறள் — எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்பதறிவு

யாதலின் யாதலின் நீங்கியான் நோதல்
ஆதலின் ஆதலின் இலன்.

நம்மாழ்வார் — உயர்வற உயர்நலம் உடையவன் எவன் அவன்
மயர்வற மதிநலம் அருளினன் எவன் அவன்

தாயுமானவர் — அங்கிங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்தது எது - - - - -
தங்கும்படி இச்சைவைத்து - - - - - - - - -
உயிராய்த் தழைத்தது எது
மனவாக்கில் தட்டாமல் நின்றது எது
- - - - - - - - - - - - - - -
எல்லையுள்ளது எது, அது கருத்திற்கு இசைந்ததுவே.

பவணந்தி முனிவர் — எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே.

ஆனால் இதைத் தனிப்படுத்தி ஒருவரும் எடுத்துக் காட்டததால் பலருக்கு இதில் மயக்கம் உண்டாகிறது பிஷப் கால்ட்வெல் தம்முடைய ஒப்பிலக்கணத்தில் தமிழில் Relative pronoun கிடையாது என்று கூறுகிறார். நம்மவர்களும் பலர் இந்த ஆட்சி வினாவும் விடையும் என்று கூறுகின்றனர். அவ்வாறு கூறுவதற்கு சிறிதளவும் ஆதாரமில்லை. இந்த இணையின் முன் பகுதியை வினா என்று கூறமுடிகிறது. ஆனால் பின் பகுதி அந்த வினாவுக்குரிய விடை அல்ல. அந்த வினாவையே சுட்டுகிற சுட்டுச் சொல். இணைச் சுட்டு என்ற பெயர் பொருத்தமில்லாவிடில் வேறு ஏதாவது பெயரிட வேண்டும்.

## வினைச்சொல்

### பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி :

வினைச் சொற்கள் பல பாகங்களை ஒன்றாகத் தொகுத்து அமைக்கப்பட்ட கூட்டுச் சொற்களாக, ஆக்கச் சொற்களாக உள்ளன. ஒன்றாகத் தொடுக்கப்பட்ட 'பாகங்களைப் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம்' என்று கூறு கிறோம். இவ்வாறு தொடுக்கப்பட்ட பாகங்களுள் பகுதிதான் வினையின் பொருளை உணர்த்துகிறது. ஏனைய பாகங்களுள் வினையைச் செய்பவன் யார் என்பதையும், வினை எப்பொழுது நடந்தது என்பதையும் காட்டுவதற்குச் சேர்க்கப்படும் விகுதி யையும், இடைநிலையையும் முக்கிய உருபுகளாக கருதலாம். எஞ்சிய மூன்று உருபுகள் பொருள் உணர்த்துவதற்காக அல் லாமல் சொல்லின் அமைப்பு செவ்வனே அமைவதற்காக சேர்க்கப்படுகின்றன. இவற்றை இணைப்பு உருபுகள் என்றே கூறலாம்.

இந்த ஆறு உருபுகளில் பகுதி மட்டும் தனிச் சொல்லாக விளங்குகிறது. வேறு உருபுகளின் துணையின்றி தானே தனித்து இயங்கும் வல்லமை கொண்டது. வினையின் பொருளை யும் பகுதிதான் தருகிறது. இப்பகுதியையே வினைச்சொல் என்று கூறலாம் என்றே தோன்றுகிறது. ஆனால் இலக்கணப் பெரியார் இருவரும் வினைமுற்றையே வினைச்சொல் என்று விளக்குகிறார்கள். நாமும் அவ்வாறே ஏற்றுக்கொள்ளுகிறோம்.

### பகுதி:

பகுதியில் இரண்டு வகை உண்டு என்பதை பவணந்தி முனிவர் காட்டுகிறார். 'நட, வா, மடி, சீ........' என்ற நூற் பாவில் இருபத்து மூன்று பகுதிகளைக் காட்டி, வாய்ப்பாடு பகுதியாக 'செய்' என்ற பகுதியையும் காட்டி, இந்த இருபத்து மூன்று பகுதிகளும் 'செய்' வாய்பாட்டைச் சார்ந்த பகுதிகள், ஏவல் பொருள் கொண்டன, பகாப்பதங்கள் என்று கூறு கிறார். அடுத்த நூற்பாவில் இந்த வினைகளுடன் வி பி. என்ற இரண்டு விகுதிகள் தனித் தனியாகவோ அல்லது இரண்டும்

இணைந்தோ கூடி நின்று பகுபத ஏவல் பகுதிகளைத் தருகின்றன என்று கூறுகிறார். உரையாசிரியர்கள் 'செய்' வாய்பாடு பகுதிகளுடன் வல்லின 'உ' கரங்கள் 'கு, சு, டு, து, பு, று' ஆகிய விகுதிகள் இணைந்தும், ஏற்கனவே 'கு, சு, டு, து, பு, று' எழுத்துக்களை ஈறாகக் கொண்ட பகுதிகளில் ஈற்றெழுத்தைச் சார்ந்த வல் ஒற்று இரட்டித்தும், ஈற்றயல் எழுத்தாக ஓர் மெல்லின ஒற்று அமைந்திருந்தால் அந்த ஒற்று அதன் இன வல் ஒற்றாக மாறியும் புது பகுபத ஏவல் பகுதிகள் உண்டாகின்றன என்றும் கூறுகிறார்கள். இந்தப் பகாப்பத ஏவல் பகுதிகள் எல்லாம் தன்வினைகள் என்றும், மேலே காட்டிய விதிகளின்படி அமைந்த பகுபத ஏவல் பகுதிகள் எல்லாம் பிறவினைகள் என்றும் கூறுகிறார்கள். சில பகாப்பத ஏவல் பகுதிகள் யாதொரு மாற்றமுமின்றி, இயல் நிலையிலேயே நின்று தன் வினையாகவும் பிறவினையாகவும் பணியாற்றுவதையும் காட்டுகிறார்கள். பின்னால் இவற்றைக் குறிப்பதற்காக இவற்றுக்கு 'பொதுப் பகுதிகள்' என்று பெயரிட்டுக்கொண்டால் உபயோகமாக இருக்கும்.

## விகுதி, இடை நிலை :

பகுதிகளை வினைமுற்றுக்களாக மாற்றுவதற்குரிய உருபுகளை இலக்கண ஆசிரியர்களும் உரையாசிரியர்களும் விரிவாக எடுத்துக் காட்டுகிறார்கள். விகுதிகள் ஐம்பால் உணர்த்துகின்றன. இடை நிலைகள் முக்காலம் உணர்த்துகின்றன. இவற்றுள் ஒவ்வொரு பாலை உணர்த்துவதற்கும் ஒவ்வொரு காலத்தை உணர்த்துவதற்கும் பல விகுதிகளும் இடைநிலைகளும் அமைந்துள்ளன. பாலை உணர்த்துவதற்கு வினைச் சொற்களுக்கு அமைந்த விகுதிகளே ஆக்கப் பெயர்ச் சொற்களும் கொடுக்கப்பட்டுள்ளன, காலம் காட்டும் இடைநிலைகள் எல்லா வினைச் சொற்களுக்கும் பொதுவாகவே கொடுக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது.

ஆனால் சிறிது ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் பெயர்ச் சொற்களுக்கு வேறு விகுதிகள் இருப்பதும், வினைச்சொற்களுக்கு வேறு விகுதிகள் இருப்பதும் தெரியவரும். ஆதே

போன்று வினைச் சொற்களைச் சில பிரிவுகளாகப் பிரித்துக் கொண்டால் குறிப்பிட்ட பிரிவுகளுக்கு குறிப்பிட்ட இடைநிலை களே உபயோகப்படுகின்றன என்பதும் தெரியவரும்.

பால் காட்டும் விகுதிகள் — ஆண்பால், பெண்பால், பலர் பால், இவைகளுக்கு உரிய விகுதிகள் 'அன், ஆன்' 'அள், ஆள்' 'அர், ஆர்' என்பன. இந்த விகுதிகளை வினைச்சொற் களுக்கும் பெயர்ச் சொற்களுக்கும் பொது என்று சொல்வதை விட அன், அள், அர், என்பன பெயர்ச்சொல் விகுதிகள். ஆன், ஆள், ஆர், என்பன வினைச்சொற்களுக்குரிய விகுதி கள் என்று கூறுவது சிறப்புடைத்து. கண்ணன், கரியன், பொன்னன், குயவன், அறிஞன், மாணவன் என்ற பெயர்கள் எல்லாம் 'அன்' விகுதி பெற்றே வருகின்றன. இடம், காலம், இவற்றின் அடியாகப் பிறக்கும் பெயர்கள் மட்டும் இவ்விதிக் குப் புறநடையாக 'மதுரையான்', 'ஆதிரையான்' என்று 'ஆன்' விகுதி பெற்று வருகின்றன. ஆனால் இவற்றை 'மதுரையன், ஆதிரையன்' என்று கூறினாலும் தவருகக் கொள்ளுவதில்லை. (தொழில் அடியாகப் பிறந்த 'வண்ணான், கருமான்' முதலிய பெயர்களிலிருந்து 'ஆன்' விகுதி மாற்ற முடியாத புறநடையாக அமைந்துள்ளது.)

வினைச் சொற்களுக்கு வந்தான், வருகிறான், வருவான் என்று மூன்று காலம் உணர்த்தும் பொழுதும் 'ஆன்' விகுதி தான் வருகிறது. பெயர்ச் சொல்லுக்குரிய 'அன்' விகுதியை வினைச்சொல்லுக்கு மாற்ற முயன்றால், 'துணையின்றி நான் அங்கு போகேன்' என்று கூறி இறந்த காலத்துக்கு ஒரு 'அன்' சாரியைத் துணைகொண்டு 'கண்டனன், வந்தனன்' என்றும், 'அன்' சாரியைப் போன்ற உருவம் அமைந்த 'இன்' இடை நிலையாக அமைந்த வினைகளுடன் 'கூவினன், கூசினன்' என்று சாரியை துணையின்றியும் வருகிறது. நிகழ்காலத்தில் 'கிறு' இடைநிலைக்கு 'ஆன்' விகுதிதான் வருகிறது. சாரியை சேர்த்தும் 'அன்' விகுதி வருவதில்லை. 'கின்று' இடைநிலையில் ஒரு 'இன்' அமைந்திருப்பதால் அத்துடன் மேலும் ஒரு 'அன்' சாரியையும் துணைக்கொண்டு 'வருகின்றனன், பாடுகின் றனன்' என்றும் வருகிறது. எதிர்காலத்துக்கு பிராமண

சமுகத்தார் மட்டும் 'வருவன்', 'செல்வன்' என்று 'அன்' விகுதியை அப்படியே சாரியை துணையின்றி உபயோகிக்கிறார்கள். 'வருவல்'. 'செல்வல்' என்று 'அல்' விகுதி எதிர்கால விதியாகப் பல இலக்கியங்களில் வருகின்றது. அந்த 'அல்' விகுதி இவ்வாறு விகாரமடைந்து 'அன்' விகுதியாக மாறி நிற்கிறதோ என்ற ஐயம் உண்டாகிறது.

மேலே காட்டிய குறிப்பிட்ட சில புறநடைகளைத் தவிர்த்து 'அன், அள், அர்' விகுதிகள் பெயர்ச் சொற்களுக்கும் 'ஆன், ஆள், ஆர்' விகுதிகள் வினைச் சொற்களுக்கும் உரியன என்று கூறுவது பொருத்தமாகத் தோன்றுகிறது.

இடைநிலைகள்— இறந்த காலம் காட்டுவதற்கு 'த், ட், ற், இன்' என்று நான்கு இடைநிலைகளும், நிகழ்காலம் காட்ட 'கிறு, கின்று, ஆநின்று' என்று மூன்று இடைநிலைகளும், எதிர்காலம் காட்ட, 'ப், வ்' என்று இரு இடைநிலைகளும் பொது இடைநிலைகளாகக் காட்டப்படுகின்றன.

ஆனால் எல்லா இடைநிலைகளும் எல்லா வினைகளுக்கும் பொது என்று அமையாமல் குறிப்பிட்ட பிரிவுகளில் அடங்கும் வினைகள் குறிப்பிட்ட இடைநிலைகளையே ஏற்பதைக் காணலாம். இங்கு வினைப்பகுதிகளையே வினைகள் என்று குறிப்பிடுகிறேன்.

**வினைப்பகுதிகளின் பிரிவுகள் :**

- வினைப்பகுதிகள்
  - வி. பி. விகுதிகள் கொண்டன (1)
  - வி. பி. விகுதிகள் சேராதன.
    - ஓர் அசை கொண்டன
      - தன்வினை பிறவினை இரண்டுக்கும் மாறுபட்ட தனித்தனிப் பகுதிகள் கொண்டன. I இயல் வடிவத்தில் தன்வினையாக நின்று, வடிவத்தில் சில மாறுதல்கள் ஏற்று பிறவினை ஆவன (வடிவத்தில் மாறுதல் ஏற்ற பகுதிகள் ஈரசையாகவே மாறுகின்றன. அந்த நிலையில் (2) பிரிவோடு சேர்ந்து நிற்கும்) II பிறவினை ஏலாதன.
      - தன்வினை பிறவினை இரண்டையும் பகுதியின் இயல்நிலையில் மாற்றம்இன்றி, இடைநிலை, சந்தி மாற்றங்களால் உணர்த்துவன—பொதுப் பகுதிகள். (10)
    - ஈரசை கொண்டன (2)

தனித்தனி பகுதி வினைகளை ஈற்றுவாரியாகப் பிரித்தல்

கு, சு, டு, து, பு, று | 4 ண் | 5 ற் | 6 ல் | 7 ன் | 8 ய், ர், ழ் | 9 ஏனைய உயிர்மெய்

கு, பு, று, ஈறு கொண்டு இடைநிலை ஏற்காமல் பகுதியின் ஈற்றெழுத்து இரட்டித்து காலம் உணர்த்தும் சில பகுதிகள் | இடைநிலை ஏற்று காலம் காட்டும் இதர பகுதிகள் (3)

இந்த பத்துப் பகுதிகளும் வெவ்வேறு வகையில் இடைநிலை ஏற்கின்றன. நிகழ் காலத்தில் எல்லா பிரிவுகளும் 'கிறு, கின்று, ஆநின்று' என்ற மூன்று இடைநிலைகளையும் ஏற்கின்றன. இவற்றில் 'ஆநின்று' உயர்நடைக்கு மட்டும் பெரும்பாலும் பயன்படுகிறது. எஞ்சிய இரண்டில் 'கின்று' இடைநிலைதான் அஃறிணை படர்க்கை பன்மை 'அ' விகுதியுடன் 'வருகின்றன, ஓடுகின்றன' என்று இணைந்துவருகிறது. ஒருமைக்கு கிறு, கின்று இரண்டு இடைநிலைகளும் 'ஓடுகிறது, ஓடுகின்றது' என்று வருகின்றன. உயர்திணை ஒருமை, பன்மை, இரண்டுக்கும் இரண்டு இடைநிலைகளும் வருகின்றன. அஃறிணை பன்மைக்கு 'கின்று' மட்டும் அமைந்திருப்பதைக் கவனித்தால் முன்பு எல்லா அஃறிணைகளுக்கும் 'கின்று' இடைநிலையும், உயர்திணைக்கு 'கிறு' இடைநிலையும் தனித்தனியாக அமைந்திருந்து, பின் காலப் போக்கில் கலந்துவிட்டதோ என்று எண்ண இடம் தருகிறது.

நிகழ் காலத்தை விடுத்து ஏனைய இரண்டு காலத்துக்கும் எல்லா பிரிவு வினைப் பகுதிகளும் இடைநிலை ஏற்கும் வகை பின்வருமாறு : (சந்தியும் காட்டப்பட்டுள்ளது).

வினைகளின் ஈற்றுக்கு ஏற்ப சந்தி, இடைநிலை மாறியமைதல்

| காலம் | உருபு | 1 டு, டூ | 2 ஈ, ஐ, ச | 3 கு, சு, டு, து, பு, று | 4 ண் | 5 ள் | 6 ல் | 7 ன் | 8 ய், ர், ழ் | 9 உயிர்மெய் | | 10 பொதுப் பகுதி தன் வினை | 10 பொதுப் பகுதி பிறவினை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இறந்த காலம் | சந்தி | த் | × | த் | × | × | × | × | ந் | த், ந் | | ந் | த் |
| | இடைநிலை | த் | இன் | த் | ட் | ட் | ற் | ற் | த் | த் | | த் | த் |
| எதிர் காலம் | சந்தி | ப் | × | ப் | × | × | × | × | × | ப் | × | × | ப் |
| | இடைநிலை | ப் | வ | ப் | ப் | வ் | ப், வ் | ப் | வ் | ப் | வ் | வ் | ப் |

மேலே காட்டியவாறு குறிப்பிட்ட வினைகள் குறிப்பிட்ட இடைநிலைகள் ஏற்பதை இடைநிலை விதி என்றே கூறலாம்.

**சந்தி**

குறிப்பிட்ட பிரிவு வினைகள் குறிப்பிட்ட இடைநிலைகள் ஏற்று வருவதுபோல் குறிப்பிட்ட சந்திகள்தான் ஏற்கின்றன. எதிர்காலத்துக்கு 'வ்' இடைநிலை ஏற்ற வினைகளெல்லாம் சந்தி ஏதும்

ஏற்கவில்லை. 'ப்' இடைநிலை ஏற்ற வினைகள் சந்தியாக மேலும் ஒரு 'ப்' ஏற்கின்றன. (4, 7 இரண்டும் புறநடை)

இடைநிலைகளைப் பிரித்துக்காட்டியிருப்பது எவ்வளவு தூரம் சரியாக உள்ளது என்று சரிபார்ப்பதற்கு உதவியாக சுமார் 200 வினைப் பகுதிகளை ஈற்றுவாரியாகப் பிரித்துக் காட்டியிருக்கிறேன். கு, டு, று ஈற்றுப்பகுதிகளில் இடைநிலை ஏற்கா பகுதிகளை (1) என்றும், ஏற்கும் பகுதிகளை (2) என்றும் குறியிட்டுக் காட்டியிருக்கிறேன். 'படு, தொடு' போன்ற சில பகுதிகள் இரண்டு பொருள் கொண்டன.. ஒரு பொருளில் (1) பிரிவிலும் வேறுபொருளில் (2) பிரிவிலும் வருகின்றன.

சில வினைப்பகுதிகளை (ஈ) குறியிட்டு காட்டியிருக்கிறேன். பேண், எண், பின், சொல், போ என்பன. இவை நான் ஈரசை வினைகளுக்கு மட்டும்தான் 'இன்' இடைநிலை சேரும் என்று காட்டியுள்ள விதிக்கு புறம்பாக பேணினன், எண்ணினன், பின்னினன், சொன்னன், போனன் என்று முழு 'இன்' இடைநிலை பெற்றும், 'இ' மறைத்து 'ன்' மட்டும் இடைநிலையாக அடைந்தும் நிற்கின்றன.'ஏன் இந்த வினைகள் இவ்வாறு 'ட், ற், த்' இடைநிலைகள் ஏற்காமல் 'இன்' இடைநிலை ஏற்கின்றன' என்று சிந்தித்துப் பார்க்கும்போது, இந்த ஓரசை வினைப்பகுதிகளுக்கு இணையாக ஒவ்வொரு ஈரசை வினைப் பகுதி — பேணு, எண்ணு, பின்னு, சொல்லு, போகு என்று இருப்பது தெரிகிறது. அவ்வாறு ஈரசையாக அமைந்த வினைப் பகுதிகள்தான் தங்களுக்கேற்பட்டவிதிக்கொப்ப 'இன்' இடைநிலை இறந்த காலத்துக்கும், எதிர்காலத்துக்கு 'வ்' இடைநிலையும் பெற்றுவருகின்றன என்பது தெரிகிறது. இதர ண், ன் ஈற்று வினைகளுடனும் 'உ' சேர்க்கிற பழக்கம் இருக்கிறது. 'காணு, பூணு, உண்ணு, தின்னு, ஈனு' என்று கூறும் பழக்கம் உண்டு. ஆனல் அந்த வடிவத்தில் வினை முற்ருக வருவதில்லை. இடையின ஒற்று ஈற்று வினைகளுடனும் இவ்வாறு 'உ' சேர்க்கும் பழக்கம் இருக்கிறது. அவைகளும் வினை முற்ருக வருவதில்லை.

## தனிப்பகுதி—ஓரசை

| கு | சு | டு | து | பு | று | ண் | ன் | ய் | ர் | ல் | ள் | ழ் | உயிர் | மெய் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | | (1) | | | (1) | | | | பார் | சொல் (ஈ) | தள் (ஈ) | ஆழ் | வா | மிதி |
| நகு | | இடு | | | பெறு | உண் | தின் | செய் | ஊர் | கல் | விள் | வாழ் | போ (ஈ) | குதி |
| | | சுடு | | | உறு | காண் | ஈன் | பாய் | சோர் | நில் | ஆள் | தாழ் | கா | பறி |
| புகு | இசு | தொகு | | | | பூண் | | காய் | தேர் | வில் | மாள் | வீழ் | சா | மறி |
| மிது | பிசு | படு | | | | | | வேய் | நிமிர் | வெல் | கொள் | சூழ் | நட | விழு |
| | | | | | (2) | (ஈ) | (ஈ) | | புலர் | செல் | கேள் | அகழ் | கிட | எழு |
| | | | | | சிறு | பேண் | மின் | | உலர் | கொல் | திரள் | இகழ் | சுற | தொழு |
| (2) | | (2) | | | நிறு | நாண் | பின் | | உணர் | ஏல் | வரள் | திகழ் | பற | செழி |
| வகு | | அடு | | | வெறு | எண் | | | புணர் | நோல் | புரள் | புகழ் | அடி | நினை |
| தொகு | | படு | | | | நண் | | | | துயில் | | | பிடி | இரு |
| | | கொடு | | | | | | | | அகல் | | | கடி | பரு |
| | | தொடு | | | | | | | | புகல் | | | குடி | அடை |
| | | எடு | | | | | | | | சுழல் | | | சிரி | அரை |
| | | | | | | | | | | | | | எறி | அறை |
| | | | | | | | | | | | | | சொறி | குளி |
| | | | | | | | | | | | | | முனி | வை |
| | | | | | | | | | | | | | கணி | தை |
| | | | | | | | | | | | | | பணி | நோ |

## தனிப்பகுதி - ஈரசை ('உ' கர ஈற்றன)

| கு | கு | சு | டு | து | து | பு | று | வேறு |
|---|---|---|---|---|---|---|---|---|
| தயங்கு | தூங்கு | பேசு | போடு (1) | ஊது | பொருந்து | கூம்பு | தேறு | தள்ளு |
| இயங்கு | நக்கு | கூசு | ஓடு | ஓது | அழுந்து | ஓம்பு | கூறு | மின்னு |
| இலங்கு | உருகு | வீசு | சாடு | மோது | திருந்து | நம்பு | ஆறு | பின்னு |
| இரங்கு | மூழ்கு, முழகு | ஏசு | பாடு | கோது | வருந்து | திரும்பு | ஏறு | எண்ணு |
| இறங்கு | விலகு | அஞ்சு | ஊடு | கத்து | ஏந்து | தப்பு | மாறு | நண்ணு |
| நீங்கு | ஆகு | | தேடு | சாத்து | சிந்து | சூப்பு | தோன்று | பேணு |
| வீங்கு | | | மூடு | எழுது | | தேம்பு | போற்று | நாணு |
| தாங்கு | | | சுட்டு | | | | குழறு | சொல்லு |
| | | | முட்டு | | | | ஊறு | போகு |
| | | | தட்டு | | | | ஊற்று | கூவு |
| | | | சாப்பிடு | | | | | தாவு |

## பொதுப் பகுதி

| கு | டு | று | ள் | ய் | | ர் | வேறு | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| புகு | கெடு (1) | அறு | மீள் | மாய் | தேய் | சேர் | எரி | முடி | அழி | நுழை | நனை | குளி |
| உகு | வாடு | | | ஓய் | சாய் | தீர் | விரி | மடி | கிழி | குழை | வனை | குவி |
| மிகு | | | | மேய் | தோய் | | பிரி | ஒடி | ஒழி | மறை | கரை | செறி |
| | | | | | | | சரி | இடி | | அலை | உடை | |
| | | | | | | | திரி | | | | வளை | |

**சில புற நடைகள்:**

'கு,டு,று' ஈற்று வினைகளில் சில இடைநிலை ஏற்று காலம் உணர்த்தாது, தன் ஈற்று ஒற்று இரட்டித்து இறந்த காலம் உணர்த்தும் என்று முன்னமே கூறப்பட்டது. நகு—நக்கான், புகு—புக்கான், பெறு—பெற்றான், தொடு—தொட்டான், விடு-விட்டான் முதலியன. இவ்வாறு தனிக் குணம் படைத்த வினைகள் எதிர்கால இடைநிலை ஏற்கும்போது ஓரசை, 'கு, சு, டு, து, பு, று' ஈற்றெழுத்து வினைகளுக்குரிய 'ப்' இடைநிலை ஏற்காது நடுவான், புகுவான், பெறுவான், தொடுவான், விடுவான் என்று ஈரசைக்குரிய 'வ்' இடைநிலையை ஏற்று தங்கள் தனிக்குணத்தை விளக்குகின்றன.

தனிப் பகுதி பிரிவைச் சார்ந்த பார் என்ற 'ர்' ஈற்று ஓரசை வினை தன்வினை. இதற்குப் பிறவினை கிடையாது. ஆனால் இது தன் பிரிவைச் சார்ந்த இதர வினைகளைப் போலன்றி, பொதுப் பகுதிப் பிரிவைச் சார்ந்த 'சேர், தீர்' என்பனவற்றின் பிறவினை நிலைக்கு ஒப்ப இறந்தகால சந்தியாக 'த்' ஏற்றும், எதிர்கால இடைநிலையாக 'ப்' ஏற்றும், நிகழ்கால சந்தியாக 'க்' ஏற்றும் வருகிறது. ஏன் இவ்வாறு பொதுப் பகுதிப் பிறவினைத் தோற்றம் கொள்ளுகிறது என்பது விளங்கவில்லை.

'ள்' ஈற்று வினைகள் எல்லாம் எதிர்காலம் உணர்த்த 'வ்' இடைநிலை ஏற்கின்றன. ஆனால் கேள் என்ற வினைமட்டும் 'ப்' விகுதி ஏற்கிறது.

பல பிரிவு வினைப் பகுதிகள் எதிர்கால இடைநிலையாக 'ப்' ஏற்கின்றன 'ப்' இடைநிலையாக வரும்போதெல்லாம் சந்தியாக மற்றொரு 'ப்' கூடவே தோன்றுகிறது. ஆனால் 'ண், ன்' ஈற்று வினைப்பகுதி மட்டும் சந்தி இன்றியே 'ப்' இடைநிலை மட்டும் ஏற்று காண்பான், பூண்பான், தின்பான் என்று வருகின்றன.

ஈரசையில் சுமார் 70 வினைப் பகுதிகள் காட்டியுள்ளேன். அவற்றில் 'போந்' என்ற பகுதி மட்டும் விதிக்குக் கட்டுப்

படாமல் இறந்த காலத்துக்கு 'இன்' இடைநிலை ஏற்காமல் ஒற்று இரட்டித்து காலம் உணர்த்துகிறது.

'மீள்' என்ற 'பொதுப்பகுதி' வினை ஏனைய பொதுப்பகுதி வினைகளைப்போல இறந்த காலத்துக்கு 'த்' இடைநிலை ஏற்காமல் 'ட்' இடைநிலையை தன்வினைக்கும் பிறவினைக்கும் ஏற்கிறது. சந்தியும் தன்வினைக்கு 'ண்' சந்தியும், பிறவினைக்கு 'ட்' சந்தியும் ஏற்கிறது.

கட்டுரையின் ஆரம்பத்தில் விகுதியும் இடைநிலையும் தான் பொருள் மாற்றம் கொடுக்கும் உருபுகள், சந்தி, சாரியை விகாரம், மூன்றும் பொருள் மாற்றம் ஊட்டுவதில்லை, சொல் செவ்வனே அமைவதற்காக சேர்க்கப்படுவன என்று கூறினேன். இவற்றுள் 'சந்தி' பகுதிக்கும், இடைநிலைக்கும், இடையில் ஒரு கட்டாக அமைந்து சொல்லைச் செவ்வனே அமைப்பதற்கு உதவுகிறது என்றுதான் கூறுகிறோம். பல இடங்களில் இவ்வாறு ஏற்பட்டாலும் 'பொதுப்பகுதி வினைச் சொற்கள் வினை முற்றுகளாக மாறும்போது இறந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் தன்வினை பிறவினைப் பொருள் மாற்றத்துக்காக வெவ்வேறு சந்திகள் இணைக்கப்படுகின்றன. 'த்' என்ற இறந்தகால இடைநிலையும் 'ஆன்' என்ற விகுதியும் சேர்ந்து 'தான்' என்ற கூட்டு விகுதியாக அமைகிறது. இந்தக் கூட்டுவிகுதி, 'பொதுப்பகுதி' வினைப் பகுதிகளுடன் சேரும்போது — சேர் + தான், வளை + தான் — ந் சந்தி அமைத்தால் சேர்ந்தான், வளைந்தான் என்று தன்வினைப்பொருளையும், 'த்' சந்தி சேர்த்தால் சேர்த்தான், வளைத்தான் என்று பிறவினைப் பொருளையும் தருகிறது. பகுதியிலும் விகுதியிலும் என்ன மாற்றமுமின்றி, சந்தியே இந்தப் பொருள் மாற்றம் உண்டாக்குகிறது.

நிகழ் காலத்தில் 'கிறு' என்ற இடைநிலையும் 'ஆன்' விகுதியும் சேர்ந்து 'கிறான்' என்ற கூட்டு விகுதி பொதுப் பகுதி வினைகளுடன் சேர்ந்து வினைமுற்றாகும்போது தோய் + கிறான், நனை + கிறான் — சந்தி சேர்க்காவிட்டால் 'தோய்கிறான், நனைகிறான்' என்று தன்வினைப் பொருளையும், 'க்'

சந்தி சேர்த்தால் 'தோய்க்கிறான், நனைக்கிறான்' என்று பிற பிறவினைப் பொருளையும் கொடுக்கிறது. ஆகவே 'சந்தி' சொற்கள் செவ்வனே அமைவதற்கு உதவுவதுடன் விகுதி இடைநிலைகளுக்கொப்ப பொருள் மாற்றம் உண்டாக்கும் தொழிலையும் ஏற்கின்றது.

ஆகவே எல்லா விகுதிகளும், ஆக்கப் பெயர்ச் சொற்களுக்கும் ஆக்க வினைமுற்றுக்களுக்கும் பொது என்று கூறுவதை விட பெயர்ச் சொற்களுக்கு 'அன், அள், அர்' விகுதிகள் மட்டும் உண்டு, வினைச் சொற்களுக்கு 'ஆன், ஆள். ஆர்' விகுதிகள் மட்டும் உண்டு என்று கூறுவது பொருத்தமாக உள்ளது. அதுபோன்று, விதிகள் எதுவுமின்றி எல்லா வினைகளும் எல்லா இடைநிலைகளையும், சந்திகளையும் ஏற்கும் என்று கூறுவதைவிட, குறிப்பிட்ட பிரிவுகளைச் சார்ந்த எல்லா வினைகளும் குறிப்பிட்ட இடைநிலைகளையும் சந்திகளையும்தான் ஏற்கும் என்று கூறுவது பொருத்தமாகத் தோன்றுகிறது. சந்திகளுக்கும் பொருள்மாற்றம் கொடுக்கும் சக்தி உண்டு.

## தன்வினை, பிறவினை.

தன்வினை, பிறவினை என்ற வினைப்பாகுபாடு இந்திய மொழிகளுக்கு மட்டுமே உரியது. மேற்கு நாட்டு மொழிகளில் இவற்றை வெவ்வேறு வினைச் சொற்கள் என்று கருதுகிறார்கள். ஆங்கிலத்தில் Run—Drive, Walk—Perform, See—Show, Understand – explain முதலிய இரட்டை வினைகளின் வடிவ அமைப்பைப் பார்த்தால் ஒன்றுக்கொன்று சம்பந்தம் அற்றதாகக் கருதி அமைக்கப்பட்டவைகளாகத் தோன்றுகின்றன. ஆனால் பின்னால் வந்த இலக்கண ஆசிரியர்கள் இந்த இரட்டைகளில் பிந்தியது முந்தியதற்குக் காரணமாக அமைந்துள்ளதை அறிந்து அவற்றை Causative வினைகள் என்று அழைக்கிறார்கள். ஆனால் நம் நாட்டு மொழியாசிரியர்கள் மொழியின் ஆரம்ப காலத்திலேயே இந்தச் செயல்கள் ஒன்றுக்கொன்று தொடர்பு உள்ளனவாக இருப்பதை அறிந்து, ஒரே வினையை இருவிதமாக மாற்றி, சம்பந்தப்பட்ட செயல்களை அவற்றைக்கொண்டு குறிப்பிட்டார்கள். ஒரு இயல் வினைக்குக் காரணமாக அமைந்த மற்றொரு செயலையும் அதே வினையில் மாறுபாடு உண்டாக்கி இரண்டாவது செயலைக் குறிப்பிட வைத்தது போக மற்றொருவன் மூலமாக அந்தத் தொழிலைச் செய்வதை உணர்த்துவதற்கும் ஒரு மூன்றாவது மாறுபாட்டையும் உண்டாக்கிவிட்டனர். இத்தகைய சிறந்த அமைப்பை நாம் நன்கு உணர்ந்துகொள்ளவில்லை.

என்ன காரணத்தினாலோ நம் இலக்கண ஆசிரியர்கள் தன்வினை பிறவினைகளைப் பற்றி இலக்கணம் வகுத்துத்தரவில்லை. பின்னால் வந்த சாமிநாத தேசிகர் தம்முடைய இலக்கண கொத்தில் இவற்றைக் குறிப்பிடுகிறார். ஆனால் பல உதாரணங்கள் காட்டியுள்ளாரே தவிர, நல்ல விளக்கம் கொடுக்கவில்லை. உரையாசிரியர்கள் இளம்பூரணர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார் முதலியோர் தொல்காப்பியர் காட்டியுள்ள 'தீர்தல், தீர்த்தல்' என்ற இரண்டு வினைகளும் தன்வினை, பிறவினை என்று மட்டும் கூறுகிறார்கள் வேறு விளக்கம் ஏதும் கொடுக்கவில்லை. பவணந்தி முனிவர் பகாப்பதங்களாகக் காட்டிய 23 வினை ஏவல் பகுதிகளை தன்

வினைகள் என்றும், அவற்றுடன் விகுதி சேர்த்து மாற்றியமைக் கப்படும் பகுதிகளைப் பிறவினைகள் என்றும் ஆறுமுக நாவலர் கூறுகிறார். தன்வினை பிறவினைகளின் தோற்றத்தைப் பற்றி உதாரணங்கள் காட்டிக் கூறியுள்ளபோதிலும் அவைகளின் தன்மைகளைப் பற்றி மிகச் சொற்பமாகவே கூறியுள்ளார்.

இலக்கண ஆசிரியர்கள் தன்வினை பிறவினைகளைப்பற்றி தெளிவுபடுத்திக் கூறாத நிலையில் நாமும் அவற்றுக்கு விளக்கம் கூறாமல் அப்படியே விட்டுவைத்தால் பலவிதமான மயக்கங் கள் ஏற்படக்கூடும். ஆகவே இக்கால மொழிஇயலார் சிறுசிறு விளக்கங்கள் கூறுகின்றனர். ஆனால் அவர்கள் மிகவும் சுருக்கி ஒன்றிரண்டு அடிகளில் விளக்கம் அமைக்க முயல்வதால் இன்றும் இந்தப் பொருள்பற்றி நல்ல விளக்கம் அமைந்து விட்டதாக எண்ணமுடியவில்லை இந்த விஷயம் அதிக கடினமானதாக இல்லாதிருப்பதாலும், இலக்கிய கர்த்தாக்கள் மட்டுமின்றி பொதுமக்கள் எல்லோரும் கையாளும் பொருளாக இருப்பதாலும், மற்றவர்கள் காட்டியுள்ள விளக்கங்களையும் துணைகொண்டு ஒரு பூரண விளக்கம் அமைக்க முயல்கிறேன். அந்த முயற்சிக்கு உதவியாக இருப்பதற்காக ஒரு வினைப் பகுதியிலிருந்து தோன்றும் பல வடிவங்களைத் தொகுத்து எடுத்துக்கொளளுகிறேன்.

## வினைப் பகுதிகளின் மாறுபட்ட பல வடிவங்கள்

| இயல்வடிவம் | மாறுபட்ட வடிவங்கள் | | |
|---|---|---|---|
| நட | நடத்து | நடப்பி | நடத்துவி |
| ஓடு | ஓட்டு | ஓடுவி | ஓட்டுவி |
| போ | போக்கு | | போக்குவி |
| பாய் | பாய்ச்சு | பாய்வி | பாய்ச்சுவி |
| பயில் | பயிற்று | பயில்வி | பயிற்றுவி |
| காண் | காட்டு | காண்பி | காட்டுவி |
| உண் | ஊட்டு | உண்பி | ஊட்டுவி |
| செய் | | செய்வி | |
| உருகு | உருக்கு | | உருக்குவி |

| இயல்வடிவம் | மாறுபட்ட வடிவங்கள் | | |
|---|---|---|---|
| வருந்து | வருத்து | | வருத்துவி |
| நீங்கு | நீக்கு | | நீக்குவி |
| விலகு | விலக்கு | | விலக்குவி |
| எடு | | எடுப்பி | |
| பார் | | | |
| ஆடு | ஆட்டு | ஆடுவி | ஆட்டுவி |
| இரு | இருத்து | இருப்பி | இருத்துவி |
| எழுது | | எழுதுவி | |
| கேள் | | கேட்பி | |
| சிரி | | சிரிப்பி | |

இந்தத் தொகுப்பில் முதல் பிரிவில் கொடுக்கப்பட்ட வினைகள் எல்லாம் யாதொரு கூட்டும் இணைக்கப்படாத இயல் வடிவங்கள். இரண்டாவது பிரிவில் கொடுக்கப்பட்ட வினைகள் முதல்பிரிவு வினைகளைச் சிறிது மாற்றியமைத்து உண்டாக்கப்பட்டன — கு, சு, டு, து, பு, று எழுத்துக்களை ஈற்றெழுத்தாகக் கொள்ளாத வினைகளுக்கெல்லாம் "க்கு, ச்சு, ட்டு, த்து, ப்பு, ற்று" என்ற விகுதிகளை இணைத்தும், 'கு, சு, டு, து, பு, று' ஈற்றெழுத்துக்களைக் கொண்ட வினைகளை அவைகளின் ஈற்றெழுத்தில் உள்ளவல்ஒற்றை இரட்டித்தும், ஈற்று எழுத்துக்கு முந்திய (ஈற்றயல்) எழுத்து மெல் ஒற்றாக இருந்தால் அதை அதன் இனவல்ஒற்றாக மாற்றியும் அமைக்கப்பட்டிருக்கின்றன. மூன்றாவது பிரிவில் முதல் பிரிவு வினைகளுடன் 'பி'விகுதி சேர்த்தும்,அவை வல்வினை உகர ஈற்றெழுத்தாகக் கொண்டிருந்தாலும், இடையின ஒற்றுக்களை ஈற்றெழுத்தாகக் கொண்டிருந்தாலும் 'வி' விகுதி சேர்த்தும் அமைக்கப், பட்டன. நான்காவது பிரிவில் இரண்டாம் பிரிவு வினைகளுடன் 'வி' விகுதி சேர்த்து அமைத்திருக்கிறது.

இந்தத் தொகுப்பை ஆதாரமாக வைத்துப் பார்த்தால் ஆக்கவினைகள் (பிறவினைகள்) மூன்று வகையாக ஆக்கப்படுகின்றன என்பது தெரிகிறது. எல்லா வினைகளுக்கும் இந்த நான்கு வடிவங்களும் அமையவில்லை. சில வினைகள் தங்கள் இயல் வடிவத்திலேயே நிற்கின்றன. வேறு எந்த மாற்றமும் ஏற்கவில்லை. சில வினைகள் மூன்றும் பிரிவு மாற்றம் மட்டும்

ஏற்கின்றன, இரண்டாம் பிரிவு மாற்றம் அவைகளுக்கு அமைய வில்லை. இரண்டாம் பிரிவு அமையாத காரணத்தால் நான் காம் பிரிவு மாற்றமும் இல்லை. இவ்வாறு இரண்டாம் பிரிவு மாற்றம் அடையாத வினைகள் பெரும்பாலும் செயப்படு பொருள் குன்றுவினைகள். முதல் பிரிவு வினைகள் பல இரண் டாம் பிரிவு மாற்றம் ஏற்றாலும் மூன்றாம் பிரிவு மாற்றம் ஏற்க வில்லை. இரண்டாம் பிரிவு வினைகள் எல்லாம் நான்காம் பிரிவு மாற்றம் ஏற்கின்றன.

## பொருள் மாற்றம் :

உருவ மாற்றம் அடையும்போது எத்தகைய பொருள் மாற்றம் உண்டாகிறது என்று கவனிக்க வேண்டும். பொருள் மாற்றத்தை ஆராய்வதற்கு வினைப் பகுதியை வினைமுற்றாக மாற்றி வாக்கியங்களில் அமைத்துப் பார்க்க வேண்டும்.

இரண்டாம் பிரிவு வினைகள்:

1) இடையன் ஆட்டை ஓட்டினான் 2) வண்ணான் அழுக்கைப் போக்கினான் 3) உழவன் நீர் பாய்ச்சினான் 4) ஆசிரியர் மாணவனுக்குப் பாடம் பயிற்றினார். இந்த அமைப் புக்களை நன்கு கவனித்தால் அந்தந்த எழுவாய் அந்தந்தச் செயலைச் செய்யும்போது சம்பந்தமுள்ள ஒரு பிறபொருள் சம்பந்தப்பட்ட இயல்வினையைச் செய்கிறது, அல்லது சம்பந் தப்பட்ட பிறபொருளுக்கு இயல்வினை உண்டாகிறது. — 1) ஆடு ஓடியது 2) அழுக்குப் போயிற்று 3) நீர் பாய்ந்தது 4) மாணவன் பயின்றான். இரண்டு எழுவாயும், இரண்டு செயலும் தோன்றுகின்றன.

முதல் பிரிவு வினைகளை வாக்கியத்தில் அமைத்துப் பார்த் தால் இந்த வினைகளை அவற்றின் எழுவாய் செய்த காரணத் தால் இந்த வினையைச் செய்வதில் பங்கு அல்லது சம்பந்தம் அல்லது இந்த வினையின் மாறுபட்ட வடிவங்கொண்ட மாற்று வினையின் சம்பந்தம் வேறு எந்தப் பொருளுக்கும் உண்டாக வில்லை. சம்பந்தப்பட்ட எழுவாய் மட்டுமே இந்த வினையை அனுபவிக்கிறது என்பது தெரிகிறது. 1) கண்ணன் ஓடினான் 2) சிறுவன் பழத்தை உண்டான் 3) அழுக்கு நீங்கியது 4) நான்

நண்பனைக் கண்டேன். இந்த வினைகளில் ஈடுபட்டவர்கள் அந்தந்த வினைக்குரிய எழுவாய்தான். எழுவாய்தான் வினையைச் செய்கிறது, வினையை அனுபவிக்கிறது. சிறுவன் பழத்தை உண்டான் என்று கூறினால் பழம் இந்த வினையில் பங்குகொண்டது என்று கூறலாமா? பழம் உண்ணப்பட்ட வினையை அனுபவித்தது என்று கூறலாமே ஒழிய உண்ணும் வினையில் பழம் ஈடுபடவில்லை. சிறுவன்தான் இந்த வினையில் ஈடுபட்டவன். இக்காரணம்பற்றித்தான் பழம் என்ற பொருளை உண்டான் என்ற வினைக்கு செயப்படுபொருள் என்றுகூறுகிறோம். உழவன் மண்வெட்டியால் குழி தோண்டினான் என்று கூறும்போது மண்வெட்டிக்கு தோண்டிய வினையில் சம்பந்தம் உண்டு. ஆனால் அது எழுவாய் சம்பந்தமாக இல்லாமல் கருவி சம்பந்தமாக நிற்கிறது. வினை செய்ய உதவுகிறதே தவிர வினையை அது செய்வதில்லை. ஒரே எழுவாயும் ஒரே செயலும்தான் உள்ளன.

நான்காம் பிரிவு வினைகள் :

ஏனைய பிரிவுகளைப் போல் 'ஓட்டுவி, ஊட்டுவி' என்ற வினைகளை அந்த வினைகளின் எழுவாய்தான் செய்கிறது. ஆனால் எழுவாய் வேறு ஒருவரைக் கொண்டு தன்னுடைய 'வி' விகுதி நீங்கிய இரண்டாவது பிரிவு வினையை செய்கிறது என்ற பொருள் தருகிறது. 'ஓட்டுவி' என்று கூறினால் 'வி' விகுதி நீங்கிய வினை 'ஓட்டு'. அவன் ஆட்டை ஓட்டுவித்தான் என்று கூறினால், யாரோ ஒருவரைக் கொண்டு ஆட்டை ஓட்டினான் என்று பொருள். தந்தை ஊட்டுவித்தான் என்று கூறினால் தாயைக் கொண்டு ஊட்டினான் என்று பொருள். மேலும் அவற்றின் விளைவாக இந்த இரண்டு அமைப்பிலும் "ஆடு ஓடிற்று, குழந்தை உண்டது" என்றபொருளும் அடங்கி நிற்கிறது. ஆகவே இந்தப் பிரிவு வினையை உபயோகிக்கும் பொழுது மூன்றுஎழுவாயும் மூன்று செயலும் தோன்றுகின்றன.

மூன்றும் பிரிவு :

இப்பிரிவில் 'பி' விகுதி பெற்ற வினைகள் இரண்டாம் பிரிவுப் பொருளையே தருகின்றன. 'வி' விகுதி பெற்றவை 'பி'

விகுதிப் பொருளைக் கொடுப்பதுடன், பிறரைக்கொண்டு செய்தான் என்ற நான்காம் பிரிவுப் பொருளையும் கொடுக்கின்றன, இந்தப் பிரிவில் இவ்வாறு இரண்டு உட்பிரிவுகள் இருப்பதாகக் கொள்ளலாம்.

இவ்வாறு உருவ மாற்றமும் . அதற்குத்தக்க பொருள் மாற்றமும் கொண்ட நான்கு பிரிவுகளில் முதலாவது பிரிவு, இயல்வினையாக அமைந்து, எழுவாய் ஒன்றுகவே நின்று, தன்னுடைய ஒரே செயலை நடத்துவதால், அந்தப் பிரிவை தன்வினை என்றும், ஏனைய பிரிவுகளில் பிறபொருள்களும் எழுவாயாகத்தோன்றி அந்த வினைக்கு அடிப்படையாக உள்ள வினையைச் செய்வதால் அவற்றை பிறவினை என்றும் கூறுகிறோம். ஓட்டுவித்தான் என்று கூறும்போது 'ஓட்டு' என்ற வினையை ஒரு பிற எழுவாய் செய்கிறது. ஓட்டினன் என்று கூறும்போது 'ஓட்டு என்ற வினைக்கு அடிப்படையான ஓடு என்ற வினையை ஒரு பிறபொருள் செய்கிறது.

மேலே கண்ட வினைகளின் பொருள் தன்மையை அடிப்படையாகக் கொண்டு "தன்வினை பிறவினை"க்கு ஒரு வரையறை விளக்கம் (definition) கூறலாம். (1) எந்த வினைகளின் பகுதிகள் இயல்வினைகளாக அமைந்து, ஒரே எழுவாய் மட்டும் உணர்த்தி, ஒரு பிற செயலையும், ஒரு பிற எழுவாயையும் தோற்றுவிக்காமல் நிற்கின்றனவோ அவையெல்லாம் தன்வினைகள். (2) எந்த வினைகளின் பகுதிகள் ஆக்கவினைகளாக அமைந்து, தன் எழுவாயுடன் வெளிப்படையாகக் கூடி நின்று ஆக்கவினைச் செயலை உணர்த்துவதுடன், நேர்முகமாகவோ உள்ளடக்கியோ வேறு ஒரு எழுவாய்க்கு அதன் ஆக்கம் நீங்கிய வினைச் செயலை உண்டாக்குகிறதோ அவையெல்லாம் பிறவினைகள்.

பகுதியில் உருவ மாற்றம் அமையாது தன்வினைக்கும் பிறவினைக்கும் பொதுப்பகுதியாக நிற்கும் வினைப்பகுதிகளும் உண்டு. இவை வினைமுற்று வடிவத்தில் வெவ்வேறு இடைநிலைகளை ஏற்றும் வெவ்வேறு சந்திகளை ஏற்றும், உருவ மாற்றம் கொண்டு (தனித்தனிப் பகுதிகளைக் கொண்ட தன்வினை பிறவினைகளைப் போன்றே) பொருள் மாற்றம் கொள்ளும்.

| வினைகள் | இறந்தகாலம் சந்தி | நிகழ்காலம் சந்தி | எதிர்காலம் இடைநிலை |
|---|---|---|---|
| தன்வினை | ந்-சேர்ந்தான், வளர்ந்தான். | கிடையாது-சேர்கிறன், வளர்கிறன். | வ்-சேர்வான், வளர்வான். |
| பிறவினை | த்-சேர்த்தான், வளர்த்தான். | க்-சேர்க்கிறன், வளர்க்கிறன். | ப்-சேர்ப்பான் வளர்ப்பான். |

பல வினைகளையும் வினை எச்சங்களையும் வசதியின் பொருட்டு 'செய், செய்வி, செயப்படு, செய்து, செய்த' என்று வாய்ப்பாடாக அமைத்து வைத்திருக்கிறோம். தன்வினைகளையும்,முதல் பிரிவு பிறவினைகளையும் இவ்வாறு வாய்ப்பாடாகவும் அமைக்கலாம். 'செயல் உண்வினை, செயல் ஊட்டுவினை' என்று கூறுவது பொருத்தமாக உள்ளது. இங்கு செயல் என்பது இயல்வினையின் வடிவம். ஆகவே 'செயல் உண் வினை' என்று கூறினால் இயல்வினையை வினையின் எழுவாயே உண்ணுகிறது (அனுபவிக்கிறது) என்ற பொருள் தோன்றுகிறது. தன்வினைக்குப் பொருத்தமாக அமைகிறது 'செயல் ஊட்டுவினை' என்று கூறினால் இயல்வினையை பிறபொருளுக்கு ஊட்டுகிறது என்ற பொருள் தருகிறது. பிறவினை விளக்கத்துக்குப் பொருத்தமாக உள்ளது.

தன்வினை பிறவினைகளை அவற்றின் வடிவத்தைக் கொண்டே பிரித்துக் கூறமுடியுமா என்றால் ஓரளவுக்குத்தான் முடியும். எல்லா பிறவினைகளும் 'வி-பி', ''க்கு, ச்சு, ட்டு, த்து, ப்பு, ற்று'' ஈற்றாக அமைந்தவை. இந்த ஈறுகள் இல்லாவிட்டால், பிறவினையல்ல. இதே ஈறுகள் கொண்ட சில தன்வினைகளும் உள்ளன.— அவி, சபி, தப்பு, நக்கு போற்று முதலியன தன்வினைகள். ஆகவே முன்பு முதல் பிரிவு தன்வினைகளிலிருந்து ஏனைய பிரிவு பிறவினைகள் உண்டாக்க என்ன முறைகள் கையாளப்பட்டன என்று கவனித்து அவ்வழிகளை மாற்றியமைத்து தன்வினை உண்டாக்க முடிகிறதா என்று பார்க்க வேண்டும். அவ்வாறு ஒரு தன்வினை தோன்றினால் தான் எடுத்துக்கொண்ட வினை பிறவினை என்று கூறமுடியும்.

காலப் போக்கில் பல தன்வினைகளுக்கும் பிறவினைகளுக்கும் பொருள்மாற்றம் உண்டாகிறது. அவைகளுக்கிடையில் இருந்த சம்பந்தம் அற்றுப் போகிறது. அந்த நிலையில் முன்பு பிறவினையாக இருந்த வினைச் சொல் புதுப்பொருளுடன் தன் வினையாக மாறிவிடுகிறது. —'தூங்கு, தூக்கு' என்பன தன் வினை பிறவினைகள். தூங்கு என்றவினை வடிவம் மாறி 'தொங்கு' என்று ஆகிவிட்டது. 'தூக்கு' என்ற பிறவினைக்கு கயிற்றில் கட்டி தொங்கவிடு என்ற பொருள்மாறி கீழேயிருந்து மேலே தூக்குவது என்ற பொருள் வந்துவிட்டது. பழைய பொருள் இன்னும் முற்றிலும் மறைந்துவிடவுமில்லை.

'விள், விடு'. தன்வினையில் 'விள்' அனேகமாக மறைந்து விட்டது. தன்வினை மறைந்துவிட்டால் பிறவினை தன்வினையாக மாறிவிடும்.'விடு' தன்வினையாக மாறிவிட்டதால் அதற்கு ஒரு பிறவினை புதிதாகத் தோன்றுகிறது. 'விடுத்தான்' என்று இறந்தகால வினைமுற்று மட்டும் தோன்றியுள்ளது. 'கொள், கொடு' என்பன தன்வினை பிற வினைகள். 'விள், விடு' போன்ற வடிவம் கொண்டன. இந்த வடிவம் ஏனைய வினைகளின் வடிவத்தில் இருந்து மாறுபட்டது. 'கு, சு, டு, து, பு, று' ஈற்றெழுத்தாக அமையாத ஏனைய தன்வினைகள் எல்லாம் 'க்கு, ச்சு, ட்டு, த்து, ப்பு, ற்று' விகுதிகள் ஏற்று பிற வினைகளாக மாறுகின்றன. இந்த வினைகள் அவற்றைப் போல் 'விட்டு, கொட்டு' என்று அமைந்திருக்க வேண்டும். ஆனால் புறநடையாக நிற்கின்றன.

தன்வினை பிறவினை மாற்றங்களுக்குரிய விதிகளை சிறந்த ஆரியர்கள் நல்ல முறையில் எடுத்துக் காட்டாததால் மொழி வளர்ச்சி தடைப்பட்டுவிட்டதோ என்ற எண்ணம் உண்டாகிறது 'குளிர்ந்தான், குளிர்கிறான், குளிர்வான்' என்ற தன் வினைகளுக்கு நேராக 'குளிர்த்தான், குளிர்க்கிறான், குளிர்ப்பான்' என்றும், 'மகிழ்ந்தான், மகிழ்கிறான், மகிழ்வான்' இவைகளுக்கு நேராக 'மகிழ்த்தான், மகிழ்க்கிறான், மகிழ்ப்பான்' என்று பிறவினைகள் ஏற்படாமலிருப்பதற்கு இதுவே காரணமாயிருக்கலாம்.

## பலவகை வினைப் பாகுபாடுகள்

வினைச் சொற்களைப் பல அடிப்படைகளில் பிரித்துப் பார்க்க முடிகிறது. நம் எல்லோருக்கும் நன்கு பழக்கமான பிரிவு 1) செயப்படு பொருள் குன்றியவினை, செயப்படுபொருள் குன்றா வினை. இந்தப் பிரிவில் என்ன விதமான ஐயப்பாட்டுக்கும் இடமில்லை. இதேபோன்ற முக்கியத்துவம் உள்ள பிரிவு 2) முயற்சி அற்றவினை முயற்சி உள்ளவினை. வினையின் எழுவாய் வினையில் ஈடுபடுவதற்கு ஏதாவது சுயமுயற்சி தேவைப்பட்டால் அது முயற்சி 'உள்ள வினை'. நட, ஆடு, பாடு முதலிய வினைகளுக்கு எழுவாயின் முயற்சி தேவை. எழுவாயின் சொந்த முயற்சி இன்றியே வினைநிகழ்வதுமுண்டு —''பையன் வளர்கிறான்'' என்பதில் வளர்வதற்கு பையனுடைய முயற்சி தேவையில்லை. தோன்றிய எல்லா உயிர்களும் வளரும் என்ற பொதுவிதிக்குட்பட்டு சிறுவன் தானே வளர்கிறான். —''இரு, படு, தோன்று' இவை எல்லாம் முயற்சி அற்ற வினைகள். 1) செயப்படு பொருள் குன்றிய குன்றா வினைகள், 2) முயற்சி உள்ள அற்ற வினைகள், இந்த இரண்டு பிரிவுகளில் உள்ள உப பிரிவுகளில், ஒரு உட்பிரிவு வினைக்கும் அடுத்த உட்பிரிவு வினைக்கும் யாதொரு சம்பந்தம் கிடையாது. ஆகவே இந்த இரண்டு பெரும் பிரிவுகளையும் தொகுத்து சம்பந்தம் அற்ற நிலைப் பிரிவுகள் என்று கூறலாம்.

இதே போன்று சம்பந்தம் உள்ள நிலைப் பிரிவுகளாகவும் இரண்டு பெரும் பிரிவுகள் உண்டு. 3) செய்வினை செயப்பாட்டுவினை என்ற வினைப் பிரிவு இலக்கண நூலாளரால் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட பிரிவு. இப்பிரிவிலடங்கிய இரண்டு உட்பிரிவுகளில் செய்வினைப் பிரிவிலிருந்துதான் செயப்பாட்டுவினைப் பிரிவு வினைகள், செய்வினை வடிவத்தில் சிறுமாறுதல் ஏற்று, செயப்பாட்டுவினையாக மாறுகிறது. மொழியில் உள்ள எல்லா வினைகளும் செய்வினைப் பொருளில் அடங்கும். ஆனால் அவை எல்லாம் செயப்பாட்டுவினை வடிவம் ஏற்பதில்லை. செயப்படுபொருள் குன்றா வினைகள் மட்டுமே செயப்பாட்டு வடிவம் ஏற்கும்.

செயப்பாட்டு வினை வடிவம் அமைப்பதற்கு செய்வினையின் வினையெச்சத்துடன் 'படு' என்ற முயற்சியற்ற வினையைத் துணைவினையாக இணைத்து விடுகிறோம். வினைப்பகுதிகள் வினை எச்சங்களாகவும், முற்றுக்களாகவும் மாறுவதற்கு ஏற்கும் மாற்றங்களையெல்லாம் இந்தத் துணைவினையே ஏற்கும்.

சம்பந்தம் உள்ள நிலைப் பிரிவுகளில் இரண்டாவது பெரும் பிரிவு 4) தன்வினை பிறவினைப் பிரிவு. உட்பிரிவுகளாகிய தன்வினை, பிறவினைகளில், பிறவினைகள் எல்லாம் தன்வினையிலிருந்தே தோன்றுகின்றன. செய்வினை செயப்பாட்டு வினைப் பிரிவுபோன்று மொழியில் உள்ள எல்லா வினைகளும் தன் வினைப்பிரிவில் அடங்கும். தன்வினையிலிருந்து பிறவினை தோன்றுவதற்கு சில விதிகளுக்குட்பட்டு வடிவத்தில் சில மாற்றங்களடைந்து பிறவினையாக மாறுகின்றன. எல்லா தன்வினைகளும் பிறவினை மாற்றம் ஏற்பதில்லை. எந்த வினைகள் பிறவினை மாற்றம் ஏற்காது என்று கூறுவதற்குரிய விதிகள் எதுவுமில்லை.

1) செயப்படுபொருள் குன்றிய குன்று வினைகள் 2) முயற்சி உள்ள அற்ற வினைகள், 3) செய் செயப்பாட்டு வினை, 4) தன்வினை பிறவினை என்ற நான்கு பகுதிகளில் நான்காம் பகுதியான தன்வினை பிறவினைகளின் உட்பிரிவான பிறவினைக்குச் சில விசேஷ குணங்கள் அமைந்திருக்கின்றன. பிறவினைகள் எல்லாம், முதல் பிரிவைச் சேர்ந்த செயப்படு பொருள் குன்று வினைகளாகவும், இரண்டாம் பிரிவைச் சேர்ந்த முயற்சி உள்ள வினைகளாகவும், மூன்றும் பிரிவைச் சேர்ந்த செய்வினைகளாகவும் இருக்கின்றன. செய்வினைப் பிரிவில் சேர்ந்த செயப்படுபொருள் குன்று வினைகள் மட்டும் செயப்பாட்டு வடிவம் ஏற்கும் என்று முன்பு கூறப்பட்டது. பிறவினைகள் எல்லாம் செயப்படுபொருள் குன்றுவினைகள் என்பதும் கண்டோம். இவ்வாறு ஒரு பிரிவுக்கும் மற்றொரு பிரிவுக்குமிடையில் உள்ள சம்பந்தம், இலக்கண ஆசிரியர்களால் நன்கு விளக்கப்படாத 'தன்வினை பிறவினை'களில் சிறிது மயக்கத்தை உண்டாக்குகிறது 'பிறவினை' என்றால் செயப்படு பொருள் உள்ள வினைகள், அல்லது செயப்பாட்டு வினையாக

மாற்றியமைக்கக்கூடிய வினைகள் என்று நினைத்து மயங்குகிறேம். தன் வினைகளிலும் பல வினைகள் செயப்படுபொருள் குன்றுவினைகள், செயப்பாட்டு வினைகளாக மாற்றி அமைக்கக்கூடியன என்பதை மனதில் கொண்டால் இந்த மயக்கம் ஏற்படாது.

பிறவினைக்கு ஏனைய பிரிவு வினைகளுடன் சம்பந்தம் இருப்பதுபோன்று செயப்பாட்டு வினைப்பிரிவும் முயற்சி அற்ற பிரிவுடன் உறவுகொண்டு நிற்கிறது. செயப்பாட்டு வினைகள் எல்லாம் முயற்சி அற்ற வினைகளே. ஆனல் இதன் மாற்ருக எல்லா முயற்சி அற்ற வினைகளும் செயப்பாட்டு வினைகள் என்று கூறமுடியவில்லை. பல முயற்சியற்ற வினைகள் 'செய்' வாய்பாட்டைச் சேர்ந்த வினைகளாகவும் இருக்கின்றன. ஏற்கனவே இலக்கண ஆசிரியர்கள் காட்டாத 'முயற்சி உள்ள அற்ற' வினைப் பிரிவு தேவையானதா என்ற ஐயப்பாடு உண்டாவது இயற்கை. ஆனல் முயற்சி அற்ற வினைகளின் ஒரு பகுதியாக அமைந்த செயப்பாட்டு வினையை இலக்கண ஆசிரியர்கள் பண்டுதொட்டே காட்டி வந்திருப்பதாலும், செய்வினைகளிலிருந்து செயப்பாட்டு வினை அமைப்பதற்கு, இந்த முயற்சி அற்ற வினைப்பிரிவிலிருந்து ஒரு வினையை எடுத்து அதன் துணைக்கொண்டு அந்த மாற்றம் அமைப்பதாலும், இந்த முயற்சி அற்ற வினைப் பிரிவையும் சேர்த்துக் கொள்ளுவது நல்லது என்ற எண்ணம் உண்டாகிறது.

ஆங்கில இலக்கணத்துடன் ஒப்பு.

உலகத்திலுள்ள வெவ்வேறு பகுதியில் வெவ்வேறு மொழிகள் தோன்றி தத்தம் மக்களுக்கு பணியாற்றி வருகின்றன. ஒன்றுக்கொன்று சம்பந்தம் அற்ற சூழ்நிலையில் தோன்றிய காரணம் பற்றி பல்வேறு மொழிகளும் பல்வேறு வகைகளில் அமைந்திருப்பதில் வியப்பொன்றும் இல்லை. ஆனல் மனித சமுதாயம் ஒன்றுதான் என்பதை வலியுறுத்தும் வகையில் மொழி அமைப்பிலும் ஒருவகைப்பட்ட தன்மைகள் பல ஊடுருவி நிற்பதைக் காண முடிகிறது. வெகு காலமாக ஆங்கில ஆட்சியுடன் கூடி நின்ற காரணத்தால் நம்மில் பலருக்கு ஆங்கிலத்தில் நல்ல தேர்ச்சி அமைந்துள்ளது. ஆங்கில

இலக்கணத்துடன் தமிழ் இலக்கணம் எந்த வகைகளில் எல்லாம் ஒத்து உள்ளன என்பது எல்லோருக்கும் விளங்குகிறது. Noun, verb, pronoun, adjective, adverb, participle particles என்ற பிரிவுகளுக்கு நேராக பெயர்ச்சொல், வினைச்சொல், சுட்டுப்பெயர், பெயரடை, வினையடை, வினைஎச்சம், சுட்டு என்று பெரும் பிரிவுகளிலும், subject, predicate, object, என்ற வாக்கிய அமைப்புச் சொற்களுக்கு நேராக எழுவாய், பயனிலை செயப்படுபொருள் என்றும் நேரமைப்புக்கள் இருப்பதையும் அறிகிறோம். இவை எல்லாம் அடிப்படை அமைப்பாக இருப்பதால் இவற்றில் எல்லா மொழிகளிலும் ஒற்றுமை இருக்கத்தான் செய்யும் என்று ஏற்றுக்கொள்ளவும் முடிகிறது.

ஆனால் இந்த ஒப்பு பல உட்பிரிவுகளிலும் தோன்றுகிறது. Transitive — Intransitive, active — passive என்று இணை இணையாக "செயப்படுபொருள் குன்றா குன்றிய" "செய் செயப்பாட்டு" என்ற இணைகளுக்கு நேராக அமைந்துள்ளன. அவர்களுடைய Active–Passive என்ற பெயர் நம் "செய்–செயப்பாட்டு" என்ற பெயருக்கு நேர் ஒப்புள்ளதாகவும் உள்ளது. ஆனால் "செயப்படுகுன்றா குன்றிய" வினைகளுக்குரிய பெயர்கள் verb with object, without object என்று அமையாமல் Transitive, intransitive என்று அமைந்துள்ளது.

இந்த Transitive, intransitive என்ற பெயர்கள் இடுகுறி இயற்பெயர்களாகத் தோன்றாமல் ஏதோ காரணம்பற்றி அமைந்த பெயர்களாகத் தோன்றுகின்றன. ஆனால் ஆங்கில இலக்கண நூல்களில் இதற்குரிய காரணம் விளக்கப்படவில்லை. பலர் இவற்றை செயப்படுபொருள் குன்றாவினை, குன்றியவினை என்றே கூறுகிறார்கள். Transitive verbs எல்லாம் செயப்படுபொருள் குன்றா வினைகள்தான். Intransite verbs எல்லாம் செயப்படுபொருள் அற்ற வினைகளே. ஆனால் இவைகளுக்கிடப்பட்ட பெயர் இக்காரணம் பற்றி இடப்பட்ட பெயர்கள் அல்ல. Transitive என்றால் இடமாற்றம் அடையக் கூடிய என்று பொருள். இந்த அடிப்படையில்தான் பெயரிடப்பட்டிருக்கிறது என்பதற்கு ஆங்கில இலக்கண ஆசிரியர் Wren என்பார் ஒரு விளக்கம் கொடுக்கிறார். Transitive verbs

are verbs whose action passes on from the subject to the object என்று கூறுகிறார். ஆனால் இது சரியான விளக்கமாகத் தோன்றவில்லை

The boy ate a fruit என்ற வாக்கிய அமைப்பில் boy எழுவாய், ate பயனிலை, fruit செயப்படு பொருள். Eating (உண்பது) என்பதுதான் இதில் அமைந்த action (தொழில்). இந்தத் தொழில் எழுவாயிலிருந்து செயப்படு பொருளுக்கு கடந்து செல்லுகிறது என்று கூறுவது சரியல்ல. உண்ணும் தொழில் பழத்தைச் சாரவில்லை. உண்ணப்படும் தொழில்தான் பழத்தைச் சாருகிறது. நான் முன்பு 62 பக்கத்தில் தன்வினை, பிறவினைகளைப் பற்றிக் கூறும்பொழுது இதே வாக்கிய அமைப்பைக் காட்டி உண்ணுதல் என்ற வினைக்கு எழுவாய் சம்பந்தம் மட்டுமே உண்டு, பழம் என்ற பிற பொருளுக்கு இந்த வினையில் எழுவாய் சம்பந்தம் கிடையாது, உண்ணப் பட்ட வினையோடுதான் எழுவாய் சம்பந்தம் உண்டு என்று கூறினேன். இங்கு Mr. Wren தரும் விளக்கத்துக்கு அதே ஆட்சேபனை உண்டாகிறது. அப்படியானால் Transitive என்ற பெயருக்கு என்ன விளக்கம் கூறுவது? 'உண்டான்' என்ற வினை active voice (தன்முயற்சியுள்ள 'செய்வினை') நிலையிலிருந்து, 'உண்ணப்பட்டது' என்ற passive voice (முயற்சி அற்ற 'செயப்பாட்டு') நிலைக்குப் போக முடிகிறது என்பது தான் Transitive என்ற பெயருக்குரிய பொருள் என்று கொண்டால் பொருத்தமாக உள்ளது. நாம் செய்வினை, செயப்பாட்டு வினை' என்பன வினைகளின் ஒரு வகைப் பிரிவு என்று கூறுவதைவிட ஆங்கிலத்தில் இவை active voice, passive voice என்று சில வினைகளுக்குரிய இருவகை நிலைகள் (voices) என்று கூறுவது சிறப்புடைத்து.

Passive (செயப்பாட்டு) நிலையாகக் காட்டுவதில் ஏதோ சிறப்பு இருப்பதால்தான் இயற்கையில் active (செய்) நிலையில் உள்ள வினையை இந்த வடிவத்துக்கு மாற்றி உபயோகிக்கிறோம். அவ்வாறு சிறப்பு இருந்தால் தன் சுயநிலையிலேயே passive (முயற்சி அற்ற) நிலையில் உள்ள வினைகளைத் தொகுத்துத் தனிப்பிரிவாகக் காட்டுவது நன்முயற்சியாகத் தோன்றுகிறது. இந்தத் தொகுதியிலிருந்து 'படு' என்ற வினையை ஏற்கனவே நாம் நன்கு பயன்படுத்துவதால் இந்தத் தொகுதியைப் 'படு வினைத் தொகுதி' என்றும் கூறலாம்.

# ஒட்டுரை

முகவுரையில் சொல் இலக்கணம் கூறப்போவதாகக் கூறினேன். சொல்லோ மொழிக்கு அடைப்படையாக அமைந்துள்ளது. மரத்துக்கு அடிப்படையான வேர் எப்படி பல பிரிவுகளாகப் பிரிந்து பூமிக்குள் மறைந்து நிற்கிறதோ அவ்வாறு இலக்கியத்துள் ஊடுருவி மறைந்து நிற்கிறது. அதன் பல நிலைகளையும் முழுவதும் ஆராய்ந்து எடுத்துத் தெளிவுபடுத்துவது ஒருவரால் ஆகாத காரியம். பல மொழிவல்லுனர்கள் ஒவ்வொரு பகுதியாக ஆராய்ந்து தெளிவுபடுத்தினால் எல்லாவற்றையும் தொகுத்து முழுநூலாக அமைக்கலாம். யார் அவர்களை இந்த முயற்சிக்குத் தூண்டுவது? பலவழிகளில் குறைபாடுள்ள என்னுடைய முயற்சி மற்றவர்களைத் தூண்டுவதற்கு ஒரு கருவியாக அமைந்தால் அதுவே என்னுடைய முயற்சிக்குப் போதுமான பயனாக அமையும்.

பல பெரியோர்கள் என்னுடைய முயற்சிக்கு ஆசிகூறி உற்சாகமூட்டினார்கள். டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரம், டாக்டர் V. I. சுப்பிரமணியம், டாக்டர் S. V. சுப்பிரமணியம், திரு. மு. அருணாசலம் முதலிய பெரியார்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். பல பேராசிரியர்கள் என் கருத்துக்களை செப்பமுற அமைப்பதற்கு வழிகூறிப் பலப் புதுக் கருத்துக்களும் தந்து உதவினார்கள். அவர்கள் எல்லோருக்கும் என் மனப்பூர்வமான நன்றி உரித்தாகுக.

நான் போன ஆண்டு வெளியிட்ட 'வல்லின எழுத்துக்கள்' என்ற புத்தகத்தில் 'கம்பன், ஆழ்வார்கள், நாயன்மார்கள் காலத்தைத் 'தமிழின் பொற்காலம்' என்றுகுறிப்பிட்டிருந்ததைச் சுட்டிக்காட்டி, சங்க காலத்தை அல்லவா தமிழின் பொற்காலம் என்று கூறவேண்டும் என்று ஒரு நண்பர் கேட்டார். என்னால் அதை ஒத்துக்கொள்ள முடியவில்லை. மொழி எப்பொழுதும் ஒரு நிலையில் நிற்பதில்லை. காலத்துக்குக் காலம் மாறிக்கொண்டு, வளர்ந்துகொண்டே போகிறது. மாற்றம் சிறிது அதிகமானவுடன் பழைய மொழியைத் தெரிந்துகொள்ளுவதே கஷ்டமாகிவிடுகிறது. சங்க காலத்துத் தமிழுக்கும் இன்று அந்தநிலைதான். சங்க காலத்துப் புலவர் ஒருவர் உயிர்

பெற்று எழுந்து இன்று நம்மிடையே வருவாராஞல் நம்மொழியைக் கேட்டுத் திகைத்து "நீங்கள் பேசுவது எந்த மொழியில்" என்று கேட்பார். அதேபோன்று நாமும் சங்க நூல்களைத் தெரிந்துகொள்ளுவதற்கு உரையாசிரியர்களின் உதவியன்றி நான்கு அடிகளுக்குத் தொடர்ச்சியாகப் பொருள் கூறத் தெரியாத நிலைக்கு மாறிவிட்டோம். சங்க நூல்களில் மிகச் சிறந்த கருத்துக்களை மிகச் சிறந்த நடையில் அமைத்திருப்பதாகக் கூறுகிறுர்கள். நமக்கு அவற்றின்மேல் எவ்வளவு மதிப்பு ஏற்பட்டாலும் நாம் நம்முடைய இன்றையத் தமிழுக்கு வளம் தேடுவதில் ஆர்வம் கொள்ளவேண்டுமே தவிர 'எங்கள் மூதாதையர்களின் மொழி' இமயத்துக்கொப்ப ஏற்றம் அடைந்திருந்தது என்ற பெருமையில் மூழ்கிநிற்பதில் சிறப்பில்லை.

தமிழ் ஏதாவது ஒரு பகுதியினருக்குரியதன்று. தமிழை வளர்க்கும் பெருமையும் ஒரு தனிப் பகுதியினருக்குரியதன்று. ஆஞல் வளர்க்கும் பெருமையும், வளர்க்கும் பொறுப்பும் அறிஞர் குழாத்துக்கு அதிகமாக உண்டு. அறிஞர் குழாம் தங்கள் பொறுப்பைச் சரிவரச்செய்யாத காலமுமுண்டு. தமிழின் பொற்காலம் என்று கூறுவதுபோல தமிழுக்கு இருண்ட காலமும் பலமுறை ஏற்பட்டதுண்டு. ஆஞல் அக்காலங்களில் பொதுமக்கள் அறிஞர் உலகத்துக்காக காத்திருப்பதில்லை. தங்களுக்குத் தெரிந்த வழிகளில் தமிழ் வளர்ச்சியில் ஈடுபடுகிருர்கள். அதன் விளைவாகவே மொழியில் பல ஏற்றத் தாழ்வுகள் ஏற்படுகின்றன. பிறமொழிக் கலப்புக்கள் ஏற்பட்டதற்கும் இதுவும் காரணமாகவே இருந்தது.

மொழிக் கலப்பை அதன் ஆரம்ப நிலையில் தடுப்பது எளிது ஆஞல் மொழியோடு மொழியாக நன்கு கலந்துவிட்ட பின்னர், கலந்துவிட்ட சொற்களை நீக்கிவிட முயல்வது நன்முயற்சி அல்ல. உடனே பொதுமக்கள் மொழி அறிஞர் குழாம் மொழி எனப் பிரிவு ஏற்பட்டுவிடும். இவ்வாறு பிரிந்து நிற்பது மொழி வளர்ச்சிக்குத் தடையாகவே நிற்கும். பிற மொழிச் சொற்கள் இரண்டு வழியில் நம் மொழிக்கு வருகின்றன. முன்பு நம்மிடம் இல்லாத பல புதுப் பொருள்கள் நம்மிடம் புதிதாக வந்து சேரும்போது, பொருளுடன் அதன் பெயரும் கூடவே சேர்ந்து வருகிறது. பென்சில்,

பேனா, பேப்பர், சைக்கிள், ரயில், மோட்டார் முதலிய பெயர்களை நாமும் இடுகுறிப் பெயர்களாக அப்படியே ஏற்றுக் கொள்ளுவது நல்லது. கருத்துக்களைக் குறிப்பிடுவதற்கும் பிறமொழிச் சொற்களைக் கொண்டுவருவதை நிறுத்துவது நல்லது 'நன்றி' என்று கூறவேண்டிய இடத்தில் அறிஞர்களும் 'Thanks' என்றே கூறுகிறார்கள். இது நல்ல வழக்கமல்ல. ஆனால் ஆரம்ப நிலையிலேயே இச்சொற்களை நிறுத்தவேண்டுமே ஒழிய, அவை இங்கு வந்து வேரூன்றிய பின்பு அல்ல. நம்மிடமுள்ள வடமொழிச் சொற்களெல்லாம் இவ்வாறு வந்து தோன்றினவைகளே. அறிஞர் உலகமே இவற்றைக் கொண்டுவந்தார்கள். இன்று வேரூன்றி தழைத்து விட்டன. இனி அவற்றை நீக்கமுடியும் என்று தோன்றவில்லை. புதுச் சொற்களைக் கொண்டுவராமல் விழிப்பாக இருந்தாலே போதும்.

என்னுடைய இலக்கண நூல் இந்த அடிப்படையிலேயே அமைந்தது. 'கஷ்டம், ஆரம்பம், சம்பந்தம்' முதலிய பல சொற்களை உபயோகித்திருக்கிறேன். பொருள் அமைப்பிலும் இக்காலத் தமிழ் எவ்வாறு அமைந்து நிற்கிறது என்பதையே மனதில் கொண்டு அந்த நிலையை எடுத்துக்கூறும் வகையிலேயே அமைத்துள்ளேன்.

நான் பல பேராசிரியர்களுடன் பழக்கம்கொண்டுள்ளேன். பலருக்கு இலக்கணத்தில் மிகக் குறைந்த ஆர்வமே இருக்கிறது. இலக்கியத்துறைகளில் பெரும் அளவுக்கு பங்குகொள்வோர்களும் இலக்கணத்துறையில் மிகச் சிறிய அளவிலேயே ஈடுபாடு கொள்ளுகிறார்கள். ஆங்காங்கே சில ஆசிரியர்கள் மட்டும் இலக்கணத்தை மிகவும் ஆழ்ந்து பயின்று நல்ல தேர்ச்சி உள்ளவர்களாக இருக்கிறார்கள். நான் பல இடங்களில் தெளிவு பெறாமல் அவர்களை அணுகியபோது நல்ல விளக்கம் தந்து உதவினார்கள். ஆனால் இவர்களும் தங்களுடைய கருத்துக்களைத் தொகுத்துப் பழைய இலக்கணத்தைப் புதுமுறையில் மாற்றி அமைக்க முன்வரவில்லை. அவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து இந்த முயற்சியில் ஈடுபட்டால் எல்லா இலக்கண நுட்பங்களையும் நல்லமுறையில் எடுத்துக்கூறும் ஒரு சிறந்த நூலை உண்டாக்கிவிடலாம். தமிழுக்கு அந்த நல்லகாலம் சீக்கிரமே அமையவேண்டும்.

இந்த நூலில் கூறப்பட்ட எல்லாப் பொருள்களைப் பற்றியும் மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்று மிகவும் விரும்புகிறேன். தங்கள் கருத்து எவ்வாறு அமைந்திருந்தாலும் அவற்றை எழுதி அனுப்பவேண்டுகிறேன்.

# பிழை திருத்தம்

| பக்கம் | பாரா | வரி | பிழை | திருத்தம் | பக்கம் | பாரா | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 2 | 9 | அமைத்து | அமைந்து | 29 | 3 | 13 | சிறத்தை | சிரத்தை |
| 4 | 3 | 1, 2 | உருப்பு | உறுப்பு | 31 | 1 | 4 | விணே | வினே. |
| 5 | 1 | 5 | நிறை | நிரை | ,, | 3 | 6 | வருகிறது | வருகின்றன |
| ,, | 3 | 11 | நிலமை | நிலைமை | ,, | 5 | 2 | கூருகிரேம் | கூறுகிரேம் |
| 6 | 2 | 15 | இருக்கிறது | இருக்கின்றன. | 32 | 2 | 16 | நிலமை | நிலைமை |
| 9 | 2 | 3, 4 | பெயசெச்சம் | பெயரெச்சம் | 36 | 2 | 4 | பொருள்களே | பொருள்கள் |
| ,, | 4 | 9 | தறுல் | தாறுல் | 37 | 3 | 3 | நிலமை | நிலைமை |
| 11 | 1 | 2 | அஃறிணே | அஃறிணை | ,, | ,, | 6 | என்றும் | என்னும் |
| ,, | ,, | 4 | இன்றும் | இன்னும் | 38 | 2 | 26 | கின்றன | கின்றது |
| 13 | 2 | 7 | சிகப்பு | சிவப்பு | 39 | 1 | 12 | கின்றன | கின்றது |
| 15 | 2 | 17 | மற்றய | மற்றைய | 46 | 1 | 3 | 'பாகங்களே | பாகங்களே |
| 16 | 1 | 1 | தன்மை | இது தன்மை | ,, | 3 | 7 | வி பி | "வி, பி" |
| 17 | 2 | 15 | அஃறிணே | அஃறிணை | 47 | 1 | 5 | களேக் | களே |
| 18 | 2 | 6 | விட்டதாத | விட்டதாக | ,, | 2 | 9 | களும் | களுக்கும் |
| 20 | 2 | 7 | வசதியாக | வசதியாகவும் | ,, | ,, | ,, | உள்ளன | உள்ளன என்றும் |
| 21 | 1 | 9 | அள | அன | ,, | ,, | 11 | என்று | என்றும் |
| 22 | 3 | 6 | கொள்கின்றன | கொள்ளுகின்றன | 49 | 1 | 4 | விதி | விகுதி |
| ,, | ,, | ,, | இத்த | இந்த | 50 | 1 | 2 | ற் | ள் |
| 23 | 1 | 7, 11 | உடமை | உடைமை | ,, | 2 | 6 | அஃறிணே | அஃறிணை |
| 24 | 2 | 7 | ,, | ,, | 52 | 3 | 6 | மறைத்து | மறைந்து |
| 25 | 4 | 3 | ,, | ,, | 53 | 1 | 3 | தொகு | தொடு |
| ,, | 3 | 6 | வசிஷ்ட்டர் | வசிஷ்டர் | 56 | 3 | 15, 16 | வணே | வளே |
| 27 | 2 | 19 | உன்பது | என்பது | ,, | ,, | 17 | | |
| 28 | 1 | 4 | சொது | பொது | 60 | 2 | 13 | வல்விணே | வல்லின |
| ,, | 2 | 3 | கோன்றும | தோன்றும் | 66 | 1 | 17 | உப | உட் |
| ,, | ,, | 13 | தாயின் | தாயிற் | 69 | 3 | 7 | Intransite | Intransitive |